
கல்கி
30
காசு
KALKI
26-11-1961

டாக்டர்கள் மில்க் ஆப் மக்னீஷியாவையே சிபாரிசு செய்கிறார்கள் — மிதமாக பேதி ஆவது, அமிலத்தை எதிர்த்து பூர்ண நிவாரணமளிப்பதில் சக்தி வாய்ந்தது.

உலகத்திலுள்ள ஆயிரக்கணக்கான டாக்டர்களையும், சிசு வைத்திய நிபுணர்களையும், பிரசவ வைத்தியர்களையும், ரண சிகிச்சை வைத்தியர்களையும் "நீங்கள் உங்கள் நோயாளிகளுக்கு பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியாவை சிபார்சு செய்கிறீர்களா?" என்று கேட்டதற்கு அவர்களில் அனேகர் "ஆம்!" என்று பதிலளித்தார்கள்.

ஆம், குழந்தைகளுக்கும், பிரசவம் மற்றும் ரண சிகிச்சை பெற்ற நோயாளிகளுக்கும் கூட பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா மிகவும் பலன் தரக்கூடியது என்று டாக்டர்கள் கருதுகிறார்கள்.

இதில் ஆச்சர்யமொன்றுமில்லை!

பேதி மருந்து ஆனாலும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா நிதானமாகவும், செம்மையாகவும், இதமாகவும் வேலை செய்கிறது; ஜீரண உறுப்புகளை பலவீனப்படுத்துவதில்லை. அமிலங்களை அடக்கும் பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வயிற்றுக் கோளாறு, வாயு, நெஞ்செரிச்சல் மற்றும் மலச்சிக்கலுடன் வரும் இதர அமில உபாதைகளிலிருந்தும் நிவாரணமளிக்கிறது.

எந்தவிதமான பேதி மருந்தும் இம்மாதிரி சுகமான பரிபூரண நிவாரணமளிக்காது!

உங்கள் டாக்டரைக் கேளுங்கள்! ஒவ்வொரு வீட்டிலும் கட்டாயம் இருக்கவேண்டியது




பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா

REGD. TRADE MARK



இரைப்பையில் மித மிஞ்சிய அமிலத்தால் ஏற்படக்கூடும் அஜீரணத்திலிருந்து உடனடியாக நிவாரணம் பெற எங்கும், என்றும் இன்பமான, இனிப்பான பிலிப்ஸ் மில்க் ஆப் மக்னீஷியா வில்லைகளை உட்கொள்ளுங்கள். 4 வில்லைகள் கொண்ட கையடக்கமான பாக்கெட்களிலும், 75, 150 கொண்ட புட்டிகளிலும் கிடைக்கும்.



பூரண விநியோகஸ்தர்கள்:

டேஸ் மெடிகல் ஸ்டோர்ஸ் பிரைவேட் லிமிடெட்

பிலவ கார்த்திகை 11

கல்கி

நவம்பர் 26, 1961

பொருளடக்கம்

''கல்கி''யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே ; சம்பவங்களும் கற்பனையே.



மலர் 21 | தமிழ்த்திரு நாடுதன்னைப்—பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார் | இதழ் 17

உண்மை ஜனநாயகமும் பெயரளவில் ஜனநாயகமும்

ராஜாஜி

காங்கிரஸ் ஆட்சியின் அட்டூழியங்களை எண்ணினால் தாயுமானவரின் பாட்டு நினைவுக்கு வருகிறது.

> அங்கிங்கெனாதபடி எங்கும் பிரவேசித்தே அந்தக மூர்த்தியாகி
> மருளோடு நிறைந்தது எது ?

என்று பாட்டை மாற்றிக் கேட்கத் தோன்றுகிறது.

பரம்பொருளை மறந்து ஆட்சி நடத்தும் காங்கிரஸ் சர்க்காரே அது என்று தோன்றுகிறது. அனைத்திலும் பிரவேசித்து ஜனநாயகத்தை ஒரே கட்சி சர்வாதிபத்தியமாக மாற்றிவரும் காங்கிரஸ் ஆட்சியை ஒழித்தாலன்றி நாட்டுக்கு க்ஷேமமில்லை என்பது சுதந்திரக் கட்சியின் திண்ணமான தீர்மானம். சுதந்திரக் கட்சி நடத்தும் போர் ஜனநாயகத்துக்காகவும் மகாத்மா காந்தி ஆசைப்பட்ட ஆட்சிக்காகவுந்தான்.

அவர் சொன்னது என்ன ? அரசாங்கம் அதிகமாகத் தலையிடாமலேயே மக்களின் வாழ்க்கை பயனுள்ள முறையில் நடைபெற்றால் அது உண்மை ஜனநாயகம்; இல்லையேல் அந்த ஜனநாயகம் வெறும் பெயரளவில்தானாகும் என்றார்.*

பிரிட்டிஷார் நம் தேசத்தை நம்மிடமே ஒப்புவித்துவிட்டுப் போய்ப் பதினைந்தாண்டுகளாயினும் இன்னும் மக்களுக்கு சந்துஷ்டியில்லை. ஒரு நல்ல ஆட்சி இல்லையே என்று வருந்துகிறார்கள். சுயாதீனமாக இருக்கிறோம் என்கிற உணர்ச்சி இல்லை. ஒரு கட்சியினரும் உத்தியோகஸ்தர்களும் இட்டது சட்டமாக இருந்து வருகிறது. சுதந்திரமில்லை. இந்த நிலையைத்தான் சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கை அடியில் கண்டவாறு விவரித்துச் சொல்கிறது:

"அரசியலிலும் பொருளாதாரத்திலும் எல்லா அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் பதவியிலுள்ள ஒரு கட்சியின் கையிலேயே திரட்டித் தரும் முறைக்குத்தான் இன்றைய காங்கிரஸ் கட்சி ஆதாரமாக இருக்கிறது. இதனால் கண்ட்ரோல்கள், பெர்மிட்டுகள், லைசென்சுகள் இவற்றைக் கொண்டு தேசத்தின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் கொடுங்கோன்மை ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்புக்களை மக்கள் மேலும் மேலும் இழந்து வருகிறார்கள். மக்களை நெரிக்கும் வரிச் சுமைக்கும், விலைவாசிகள்

---

* A nation that runs its affairs smoothly and effectively without much State interference is truly democratic; where such a condition is absent, the form of government is democratic only in name.
—GANDHIJI

ஏறியபடி இருப்பதற்கும் இவ்வாறு அதிகாரத்தைக் குவித்திருப்பதே காரணம். கண்மூடித் தனமான வீண் செலவுகள்; கிளைத்துப் படரும் பணவீக்கம்; கள்ளச் சந்தை—இவை சர்க்கார் சர்வாதிபத்தியத்தின் விளைவே. பிரமாண்டமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற மோகத்துக்காக ஊதாரித் திட்டங்களை வகுத்திருக்கிறது ஆளும் கட்சி. தற்போது பரிதாபகரமாகவுள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேலும் நலிவுறச் செய்தாவது இந்த மோகத்தை நிறைவேற்றிக் கொள்ளும் அமைப்புக் கொண்டது ஆளும் கட்சியின் திட்டம். நீண்ட நாட்களுக்குப் பின் பலன் தரக் கூடிய பகட்டான திட்டங்களுக்காகப் பொது மக்களின் இன்றைய நலன்களைப் பலியிடும் கம்யூனிஸத் திட்டமுறைக்கு மிகவும் நெருங்கிச் செல்கிறது காங்கிரஸ் கட்சி. அதிகாரிகள், மந்திரிகள், கட்சி எஜமானர்கள் ஆகியோரின் தயவுக்கு மக்களை ஆளாக்கும் தனது தவறான கொள்கையால் லஞ்சம் பரவுவதற்கும், அதன் விளைவாகத் தரும நெறிகள் குலைந்து போவதற்கும் அது ஊட்டம் அளித்திருக்கிறது.''

திராவிடப் பிரிவினை தேர்தல் பிரச்னையா?

காங்கிரஸுக்குக் 'குளிர்' கண்டிருக்கிறது, திராவிட முன்னேற்றக் கழகம் சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் உடன்படிக்கைகள் செய்து கொண்டுவிடுமோ என்று.

''ஐயோ, தனித் திராவிட நாடு கேட்பவர்களுடன் நீங்கள் கூட்டுச்சேரலாகாதே!'' என்று சுதந்திரக் கட்சிக்கு இதோபதேசம் செய்கிறார் ஸ்ரீலஸ்ரீ தேபர் அவர்கள். அதே சமயம் தமிழ் நாட்டு மந்திரிகள், ''சோஷலிஸத்தைப் பின்பற்றாத சுதந்திரக் கட்சியுடன் நீங்கள் ஒப்பந்தம் ஏற்படுத்திக் கொள்வது முறையாகுமா?'' என்று தி. மு. க. வைப் பரிந்து பரிந்து கேட்கிறார்கள். நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்கள் இதற்கும் மேலாகச் சென்று ''திராவிட நாட்டுப் பிரிவினை என்ற உங்கள் இலட்சியத்தை இந்தத் தேர்தல் கூட்டணி குழப்பி விடும். தனித் தமிழ் நாட்டுப் பிரச்னையை மட்டும் ஆதாரமாக வைத்தே நீங்கள் தேர்தலில் போட்டியிட வேண்டும்'' என்று தி. மு. க.வினருக்கு 'நல்லுரை' வழங்கி யிருக்கிறார்.

தேர்தல் குழப்பம் விளைவிப்பது தி. மு. க. அல்ல; காங்கிரஸ்தான். திராவிட நாட்டுப் பிரிவினையைக் காட்டி, நாட்டின் ஒற்றுமைக்குத் தி. மு. க. ஊறு செய்வதாகக் கூறிக் காங்கிரஸ்தான் உண்மைப் பிரச்னை தெரியாதபடி குழப்புகிறது.

திராவிட நாட்டுப் பிரிவினையை உடனடித் தேர்தல் விஷயமாகக் கருத வேண்டிய அவசியம் சிறிதும் கிடையாது. தமிழகம் மட்டுமின்றி எல்லா ராஜ்யங்களையுமே நகர சபையின் நிலைக்குத் தாழ்த்தி, மத்திய சர்க்காரின் கெடுபிடியில் சிக்க வைத்திருக்கும் தில்லிசர்க்காரின் சர்வாதிகாரம் ஒழிய வேண்டும்; ஒவ்வொரு ராஜ்யமும் தனது விவகாரங்களைக் கணிசமான அளவுக்குத் தானே நிர்ணயிக்கும் சுதந்திரத்தைப் பெற வேண்டும்; அதேபோல் அந்த ராஜ்யங்களில் வாழும் மக்களும் சர்க்காரின் தளையிலிருந்து விடுதலை பெற்றுத் தங்கள் காரியங்களைத் தாங்களே சுயாதீனமாகச் செய்து கொள்ள வழி காண வேண்டும் - இதுவே இன்றைய பெரும் பிரச்னையாகும்.

கட்டாய இந்திக்கல்வி, மத்திய சர்க்கார் ஊழியருக்கு இந்தி போதனை, தேவநாகரி லிபி-ஆகிய அம்சங்கள் இந்தி ஏகாதிபத்தியத்துக்கு அடிகோலுவதால் இந்த அகில இந்தியப் பிரச்னையே தமிழகத்தில் தீவிரமாகி யிருக்கிறது. அதனாலேயே பிரிவினை மனப்போக்கும் வலுவடைந்திருக்கிறது. ராஜ்ய சர்க்கார்கள் மீது மத்திய அரசாங்கத்தின் அதிகாரங்கள் குறைந்து அதே போல் மக்கள் மீது ராஜ்ய சர்க்கார்களின் அதிகாரங்களும் குறைந்து எல்லோரும் பூரண சுதந்திரம் பெற்றால் இன்று காங்கிரஸ் கட்டிக் காட்டும் கிளர்ச்சிகள் தணிந்து, உண்மையான ஒருமைப்பாடு ஏற்படும். தேசிய ஐக்கியத்துக்கு இது ஒன்றே வழி. ஐக்கியத்தைக் குலைப்பதாகச் சிலரைக் குறிப்பிட்டு அவர்களுடன் உள்நாட்டு யுத்தமும் தொடங்குவோம் என்று முழங்குவதாலோ, ஒருமைப்பாட்டைப் பற்றி ஓயாமல் பேசுவதாலோ ஒரு பயனும் ஏற்படாது. உண்மையான பரிகாரம் காணக் காங்கிரசுக்கு மனமில்லை. எனவே சர்க்கார் சர்வாதிகாரத்தை வேரறுப்பது என்று உறுதி பூண்டுள்ள மக்களைத் திசை மயங்கச் செய்து திராவிட நாடு கோரிக்கையைப் பெரிதுபடுத்திக் குட்டையைக் குழப்புகிறது காங்கிரஸ்.

சர்க்காரின் அடக்குமுறைகள் அடங்க வேண்டு மென்பதில் தி. மு. க.வும் பெரு நாட்டம் கொண்டிருக்கிறது.

சவால் விடுவது என்ற பெயரில் தி.மு.க. வின் இந்த முக்கியமான இலட்சியத்தை மறைக்கப் பார்க்கிறது காங்கிரஸ். உண்மையில் இது ஒரு சவாலே அல்ல; காங்கிரஸின் தேர்தல் தந்திரம்தான். எனவே இதனை ஏற்காவிட்டால் அது தனக்கு மானக் குறைவு ஆகாது என்பதைத் தி.மு.க. தெளியவேண்டும். தேர்தல் ஒப்பந்தங்களின் மூலம் காங்கிரஸ் ஆட்சிக்கு முடிவு தேட முயல வேண்டும். இதற்காகக் காங்கிரஸை விடக் கொடுமையும், பலவந்தமுமுள்ள நிர்வாக முறையை ஆதரிக்கும் கம்யூனிஸ்ட் கட்சியுடன் கூட்டு சேருவது இருப்புச் சட்டியிலிருந்து நெருப்புச் சட்டிக்குள் விழுவது போலவே ஆகும். தங்களுக்கென்று ஒரு தாய்நாடு இருப்பதாகவே எண்ணாமல் 'மாஸ்கோவா, பீகிங்கா' என்று தத்தளித்துக் கொண்டிருக்கும் ஒரு கட்சியுடன் தனித் தமிழ் நாட்டில் பற்றுக் கொண்டவர்கள் உடன்படிக்கை செய்து கொண்டால் மண் குதிரையை நம்பி நட்டாற்றில் இறங்கிய கதையாகத்தான் முடியும். கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தேர்தல் அறிக்கையில் அது தன்னைக் காங்கிரஸின் எதிரியாகச் சொல்லிக் கொள்ளவில்லை. காங்கிரஸில் கம்யூனிஸம் மேலும் அதிகமாகக் கலப்பதையே அது எதிர்பார்க்கிறது என்பது தெளிவாகி விட்டது. இதனை மனத்தில் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் ஒரு விவேகமான முடிவுக்கு வருமென்று எதிர் பார்க்கிறோம்.

கண் துடைப்பு

சர்க்காரில் தாங்கள் வகிக்கும் பதவியைப் பயன்படுத்திக் கொண்டு மந்திரிமார்கள் தேர்தல் பிரசாரம் செய்வதை நாடு கண்டிக்கிறதல்லவா? இந்தக் கண்டனத்தைத் தவிர்ப்பதற்காகத் தமிழக மந்திரிகள் டிசம்பர் பதினைந்தாம் தேதியிலிருந்து தேர்தல் வரையில் உத்தியோக பூர்வமான நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளப் போவதில்லையாம். மந்திரிகள் விசால மனப்பான்மையுடன் முன் வந்து தாங்களாகவே இந்தக் கட்டுப்பாட்டை விதித்துக் கொண்டிருப்பதாக விஷயமறிந்தவர்களும் கூடப் பாராட்டிப் பேசுவது விந்தையாக இருக்கிறது.

தேர்தல் வரையில் நமது மந்திரிகள் அப் பதவியை வகித்து, அதற்காகச் சம்பளமும் பெறத்தான் போகிறார்கள். எனவே உத்தியோக ஹோதாவில் அமையும் கடமைகளை ஆற்றப் போவதில்லை என்ற அவர்களது முடிவு சற்றும் நியாயமாகாது.

ஆட்சி-கட்சி இரண்டையும் குழப்புவது தவறு என்றால் ஆட்சியிலுள்ளவர்கள் கட்சியை மட்டும் பலப்படுத்த முற்படுவதோ அதைவிடப் பெருந் தவறாகும். நியாயமாகப் பார்த்தால் ஆட்சியிலுள்ள மட்டும் கட்சிப் பிரசாரம் செய்ய மாட்டோம் என்றுதான் மந்திரிகள் தீர்மானித்திருக்க வேண்டும். அல்லது கட்சிப் பிரசாரம் செய்வதானால், ராஜாஜி கூறியது போல் தேர்தல்களுக்கு முன்பு மந்திரி சபைகளைக் கலைத்து, கவர்னர் நிர்வாகத்தை ஏற்படுத்தியிருக்க வேண்டும். நமது மந்திரிமார்கள் தேர்தல் வரை பதவி வகிப்பவர்கள்தாம் என்பதை மறைக்கவோ மறுக்கவோ முடியாது. மந்திரிக்குரிய செல்வாக்கைக் களைந்து விட்டுப் பிரசாரத்தில் ஈடுபடுவோம் என்று அவர்கள் கூறுவது 'ஈரலை வீட்டில் வைத்து விட்டு வந்திருக்கிறேன்' என்ற குரங்கின் கூற்றைத்தான் நினைவுபடுத்துகிறது.

உலக பாங்க் குழுவின் உளறல்

இந்திய சர்க்காரின் குறிப்பறிந்து, அதற்குச் சாதகமாகப் பேசுவதே தங்கள் காரியம் என்று மாபெரும் உலக ஸ்தாபனங்களும் கூட எண்ணத் தொடங்கி விட்டன. இதற்கு ஓர் உதாரணம், இந்திய ரயில்வேக்கள் குறித்து உலக பாங்கானது 'வாய் புளித்ததோ மாங்காய் புளித்ததோ' என்ற முறையில் தெரிவித்துள்ள சில யோசனைகள்.

மேலை நாடுகளில் இருப்பதைவிட இந்தியாவில் ரயில் கட்டணம் குறைவு என்றும் எனவே அதனை உயர்த்தலாம் என்றும் ஓர் 'அருமை'யான கருத்தைத் தெரிவித்திருக்கிறது உலக பாங்குக் குழு. மக்களுக்காகவே ரயில்வே; ரயில்வேக்காக மக்கள் அல்ல. இதனை மறந்து அது இவ்விதம் கூறியிருக்கிறது. பெரியதொரு விருந்திலிருந்து பாதிப் பங்கு உணவு

வகைகளை எடுத்து விடுவதால் ஒன்றும் நஷ்டமில்லை. ஆனால் ஏழை உண்ணும் பழைய அமுதிலிருந்து ஒரே ஒரு கவளத்தை எடுப்பது கூடப் பெரிய அநீதியாகும். அதைப் போலவே மேலை நாட்டு மக்களின் சராசரி வருமானத்தைவிட மிகவும் குறைவான நம் மக்களின் வருமானத்திலிருந்து ஒரு சிறு பகுதியைப் பறிப்பதும் பெரிய அநியாயமாகும் என்பதைச் சற்றும் கருதாமல் தெரிவித்த யோசனையே இது. அகரப் பசி படைத்த காங்கிரஸ் சர்க்கார், அந்தப் பசியைத் தீர்த்துக் கொள்ள மேலும் தவறான ஒரு வழியைத் திறந்துவிட்டிருக்கிறது உலக பாங்குக் குழு.

இந்தியாவின் விஸ்தீரணத்தைவிட மிகக் குறைவான மேலை நாடுகளில் இங்கு போல் தூரதேசப் பிரயாணம் கிடையாது. நம் நாட்டில் ஆலைகள் சிற்சில பகுதிகளிலேயே குவிக்கப்பட்டிருப்பதால் இங்குள்ள ஏழை மக்கள் தொலை தூரப் பயணம் செய்ய வேண்டியிருக்கிறது. எனவே உலக பாங்கின் யோசனை அமுலாகிவிடுமோ என மக்கள் கலக்கம் அடைந்துள்ளனர்.

இந்த யோசனை எவ்வளவு அசந்தர்ப்பமான சமயத்தில் வெளியாகியுள்ளது என்பதை எண்ணினால் வேடிக்கையாகத்தான் இருக்கிறது. 'கொழுக் கட்டை தின்ற ஏதோ ஒன்றுக்குக் குறுணி மோர் தட்சிணை' என்று சொல்வார்களே, அதைப் போல ரயில்வே இலாகாவின் திறமையில் மக்களுக்கு ஐயம் ஏற்பட்டு வரும் இந்தத் தருணத்தில் உலக பாங்கின் யோசனை வெளியாகியுள்ளது. கடந்த ஒரு மாதத்துக்குள் மூன்று ரயில் விபத்துக்கள் நேரிட்டிருப்பதை மக்கள் அதற்குள் மறந்து விடுவதற்கில்லை. இவற்றில் சென்னை பம்பாய் ஜனதா எக்ஸ்பிரஸ் விபத்துக்கு ஆளானதற்குக் காரணம் கோஸ்கிரயில்நிலையத்தருகே தண்டவாளத்தில் மண்மேடிட்டிருந்ததுதான் என்று தெரிகிறது. இதிலிருந்து இருப்புப் பாதைக் கண்காணிப்பு எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்று ஊகிக்கலாம். 1959—60ம் ஆண்டுக்கான ரயில்வே மந்திரி இலாகா அறிக்கையில் அந்த ஆண்டு நடைபெற்ற விபத்துக்களில் 56 சதவிகிதத்துக்கும், குறிப்பாக, ரயில்கள் மோதிக் கொண்டதால் ஏற்பட்ட விபத்துக்களில் 97 சதவிகிதத்துக்கும், ரயில் ஊழியர்களின் கவனக்குறைவே காரணம் என்று கண்டிருக்கிறது. இதற்குச் சான்று கூறுவதுபோல் சென்ற அக்டோபர் 29-ந் தேதி இரவு சென்னையைச் சேர்ந்த தென்காசி பாசஞ்சர் சுமார் இருபத்தைந்து மைல்கள் இன்ஜின் தலை விளக்கின்றியே சென்றதாகப்பத்திரிகைச் செய்தி கூறுகிறது. ஆனால் உலக பாங்குக் குழுவோ, நமது ரயில்வேத் துறையினர் பாதைகளை வெகு நன்றாகப் பராமரிப்பதாகவும், திறமையுடன் சேவை செய்வதாகவும் கூறியிருக்கிறது. இதிலிருந்தே அதன் மற்றக் கருத்துக்களுக்கு எவ்வளவு மதிப்புத் தர வேண்டும் என்பது தெரிகிறது. திட்டங்களுக்கு உதவி செய்து நல்ல பெயர் தட்டிக் கொண்டு போவதிலேயே சர்வ தேச ஸ்தாபனங்களும் முனைந்திருப்பது நமது துர்ப்பாக்கியமாகும். காங்கிரஸின் கண்காட்சிக்குத் தாங்கள் தீபாலங்காரம் செய்யும் அதே சமயத்தில் மக்களுக்கு 'ஷாக்' அடிக்காமலாவது அவை பார்த்துக் கொண்டால் நன்றாயிருக்கும்.

என்ன சேதி?

பலே பரிஷத்!

ஒரிஸ்ஸாவில் வலிமை வாய்ந்த எதிர்க் கட்சியாக இயங்கி வரும் கணதந்திர பரிஷத் சுதந்திரக் கட்சியுடன் இணைவதென முடிவு செய்துள்ளது. லஞ்சத்தையே அஸ்திவாரமாகக் கொண்டு ஒரிஸ்ஸாவில் காங்கிரஸ் எழுப்பியுள்ள வெ(ற்)றி மாளிகையைத் தகர்க்க இந்த இணைப்பு பெருதவி புரியும். அகில தேசக் கட்சி ஒன்றுடன் சேர்வதால் பிரதேசக் கட்சியான பரிஷத்தின் செல்வாக்குக் குறையும் என்று சிலர் கருதியபோதிலும், காங்கிரஸை முறியடிக்க வேண்டிய தன் அவசியத்தை உணர்ந்து இந்த நல்ல முடிவுக்கு வந்த பரிஷத்தின் தலைவர்களை மனமார வாழ்த்துகிறோம். அந்தந்தப் பிரதேசத்தில் தங்களுக்குள்ள செல்வாக்குக் குறைந்துவிடுமோ என்று வீண் பீதி கொண்டு அகில இந்தியக் கட்சியுடன் கூட்டு சேரத் தயங்கும் சிறு கட்சிகளின் தலைவர்கள் இவர்கள் காட்டிய வழியைப் பின்பற்றுவார்களென நம்புகிறோம்.

அநாகரிகச் செயல்

பாகிஸ்தானில் உளவு வேலை செய்ததாகக் குற்றம் சாட்டி இந்திய ராணுவ அதிகாரி கர்னல் பட்டாச்சாரியாவுக்குப் பாகிஸ்தான் ராணுவ கோர்ட் எட்டாண்டுக் கடுங்காவல் தண்டனை விதித்திருக்கிறது. இந்தச் செய்தியைக் கேட்டுப் பாரதம் மிகவும் கொதிப்படைந்திருக்



தீரன் நேதாஜிக்கு வீரப் பதக்கம் – குழந்தை நூல்கள் வெளியீட்டு விழா

கிறது. கர்னல் பட்டாச்சாரியா நம் நாட்டு எல்லைக்குள் இருந்த போதே பாகிஸ்தானியர் அவர் காலில் கட்டு மூடமாக்கி அவரை நாடு கடத்திச் சென்றூர்கள் என்று நிரூபிக்க இந்திய சர்க்காரிடம்ஆதாரங்கள் இருக்கின்றன. எனவே அவர் மீது குற்றம் சாட்டியதையும், விசாரணை முறையில் பெரும் குறைகளுள்ள ராணுவ கோர்ட்டில் அவரை விசாரித்ததையும், மிகக் கடுமையான தீர்ப்பு அளித்திருப்பதையும் இந்திய அரசாங்கம் ஆட்சேபித்துள்ளது. இது போன்ற செயல்களைத் தனிப்பட விவாதிப்பதற்கில்லை என்றும் இரு தேச நல்லுறவைப் பொறுத்த ஓர் அம்சமே இது என்றும் இந்திய சர்க்கார் கருதுகிறது. இந்த அபிப்பிராயத்தை வரவேற்கிறோம். தனது பாதுகாப்பு வீரர்களுக்குத் தக்க பாதுகாப்பு அளித்து இது போன்ற துர்ச் சம்பவங்கள் இனியாவது நிகழாதபடி இந்திய சர்க்கார் பார்த்துக் கொள்ள வேண்டும் என்றும் விரும்புகிறோம்.

ஈரத்திலே விளைந்தது

நற்பண்புகள் வாய்ந்த நமது இதிகாச, புராண பாத்திரங்களின் பெயர்களே அவர்களது குண நலன்களைப் புலப்படுத்துவதைக் கண்டிருக்கிறோமல்லவா? அதைப் போலவே அமரர் நேதாஜியை நினைவுறுத்தும் ஒரு தீரச் செயலைச் செய்திருக்கிறான் அந்தப் பெயர் கொண்ட ஒரு சிறுவன். 'தீரத்திலே படை வீரத்திலே நெஞ்சில் ஈரத்திலே உபகாரத்திலே' என்று பாரதியார் சேர்த்துப் பாடியதற்கேற்பத் தனது நெஞ்சு ஈரம் வெளியாகும் உபகாரச் செயலைச் செய்திருக்கிறான் தென்னார்க்காடு ஜில்லா ராவுத்த நல்லூரைச் சேர்ந்த தீரன் நேதாஜி. பதினொரு வயதான இந்தப் பாலகன் தற்செயலாக ஒரு குழந்தை குளத்தில் விழுவதைக் கண்டவுடன் தன் இன்னுயிரை மதியாமல், குளத்தில் குதித்து அக்குழந்தையை மீட்டுப் புத்துயிரளித்திருக்கிறான். இவனுக்குக் குழந்தைகள் நன்னலக் கவுன்ஸிலின் தேசிய வீரப் பதக்கம் வழங்கப்பட்டிருக்கிறது. நேருஜியின் பிறந்த தினத்தன்று சென்னையில் நடைபெற்ற குழந்தைகள் தின விழாவில் நிதி மந்திரி ஸ்ரீ சி. சுப்பிரமணியம் அவர்கள் இப்பதக்கத்தை நேதாஜிக்கு அணிவித்தார். 'உயிர்களிடத்தில் அன்புவேண்டும்...வயிரமுடைய நெஞ்சு வேண்டும்' என்ற அமர கவியின் பாப்பா பாட்டுக்கு ஓர் இலக்கணமாக விளங்கும் நேதாஜிக்கு நம் ஆசிகள்.

இயற்கைக் குணம் ஒருபுற மிருக்க, இலக்கியத்தின் வழியாகவும் சிறுவர்களின் எண்ணங்களைச் சிறப்புறச் செய்யலாம் அல்லவா? இந்த நல்ல காரியத்தை நான்காண்டுகளாகச் செய்து வரும் குழந்தை எழுத்தாளர் சங்கத்தினர் இந்த ஆண்டு பிரதமரின் பிறந்த நாளை ஒட்டி முப்பத்து மூன்று ஆசிரியர்கள் எழுதி, பதினேழு பதிப்பாளர்கள் தயாரித்த ஐம்பத்து ஒன்பது குழந்தை நூல்களை வெளியிட்டனர். இவ் விழாவுக்குத் தலைமை தாங்கிய நீதிபதி ஸ்ரீ ஆர். சதாசிவன் அவர்கள் குழந்தை நூல்கள் வெளியிடுவதற்கு அரசாங்கம் நிதி உதவி அளிப்பது சாலச்சிறந்ததாகும் என்று ஒரு நல்ல யோசனையைக் கூறினார். இந்திய சர்க்கார் குழந்தை இலக்கியத்துக்காகப் பதினைந்து முதற் பரிசுகள் ஏற்படுத்தியும் நூல்களின் தரம் உயர்வாக இல்லாததால் ஏழே பரிசுகள்தாம் வழங்கப்பட்டிருப்பதும், தமிழ்ப் புத்தகங்கள் இரண்டு இரண்டாம் பரிசுகள் மட்டிலுமே பெற்றிருப்பதும் அனைவரது கவனத்துக்கும் உரியதாகும்.



ஆல் போல் தழைத்து..

"அதோ 2-30 மணி டி. வி. எஸ். பஸ் வருகிறதே. மணி 2-30தான்" என்று மக்கள் பஸ் வரும் நேரத்தைப் பார்த்தே தங்கள் கடிகாரத்தைச் சரி செய்து கொள்கிறார்கள் என்றால் அது உலக அதிசயங்களில் ஒன்றாகத் தானே இருக்க வேண்டும்? அந்த அதிசயத்தைத் தமிழ் நாட்டில் இத்தனை ஆண்டுகளாகச் செய்து வந்திருக்கிறது டி. வி. எஸ். பஸ் நிர்வாகம்.

இன்று தமிழ் நாட்டில் ஈடுஇணையற்றதெனப் பெயர் பெற்ற டி.வி.எஸ். ஸ்தாபனத்தாரின் சேவை இப்போது மைசூர் ராஜ்ய மக்களுக்கும் கிட்டியுள்ளது.

"சுந்தரம் ஐயங்கார் அண்டு ஸன்ஸ்" என்ற பெயரில் பல கிளை ஸ்தாபனங்களுடன் பஸ் லாரி போக்குவரத்து, மோட்டார்கள் விற்பனை, மோட்டார் சாதனங்கள் விற்பனை, லாரி, 'வான்'கள் உடல்களைக்கட்டுதல், மோட்டார்கள் பழுது பார்த்தல், மோட்டார் வாங்கக் கடன் உதவி அளிப்பது, இன்ஷ்யூர் செய்வது முதலிய பல்வேறு துறைகளில் தமிழ் நாட்டில் முன்னணியில் நின்று சேவை செய்து வருகிற இந்த ஸ்தாபனத்தாரைப் பெங்களூர் மக்கள் மனமார வரவேற்கும் கோலாகல விழா அந்நகரில் கடந்த 13-11-61 திங்கள் கிழமை மாலை விமரிசையாக நடந்தேறியது.

"சுந்தரம் மோட்டார்ஸ்" ஸ்தாபனத்தார் தங்கள் தொழிற்கூடத்தையும், விற்பனைக் காட்சிச் சாலையையும் விஸ்தாரமான இடஅமைப்பில் பெங்களூரில் முக்கிய சாலையாக விளங்கும் கஸ்தூரி பா ரஸ்தாவில் நடு நாயகமாக அமைத்திருக்கிறார்கள். ஆரம்ப விழாவை மைசூர் ராஜ்ய கவர்னரும், கைராசி மிகுந்த மேதையுமான ஸ்ரீ ஜயசாமராஜ உடையார் அவர்கள் நடத்திக் கொடுத்துச் சிறப்பித்தார்கள்.

பல துறைகளில் வெகு வேகமாக முன்னேறி வரும் மைசூர் ராஜ்யத் தலைநகருக்கு டி. வி. எஸ். ஸ்தாபனத்தாரின் சேவை மகத்தானதாக வாய்க்குமென்று இந்த ஸ்தாபனத்தாரை வரவேற்று வாழ்த்திக் கவர்னர் அவர்கள் தமது தலைமை உரையில் கூறியதை விழாவில் பங்கு கொண்ட அனைவரும் கரகோஷம் செய்து ஆமோதித்தனர்.

தமிழ் நாட்டை விட்டு வெளிராஜ்யத்தில் இம்மாதிரி பெரியதொரு சேவையில் டி.வி.எஸ். ஸ்தாபனத்தார் ஈடுபடுவது இதுதான் முதல் தடவை என அந்த ஸ்தாபனத்தின் சேர்மனான ஸ்ரீ டி. எஸ். ராஜம் அவர்கள் கூறிய போது, அது மைசூரின் நல்வாய்ப்பு என்றே அனைவரும் வரவேற்றனர்.

காலஞ் சென்ற ஸ்ரீ டி. வி. சுந்தரம் ஐயங்காரின் தனி முயற்சியால் தோன்றிய ஸ்தாபனத்தை மேன்மேலும் பலப்படுத்தி வளர்ச்சி பெறச் செய்வதில் அவருடைய நன் மக்கள் அதே உணர்ச்சியும் ஆற்றலும் கொண்டு ஈடுபடுவது போற்றற்குரியது.

டி. வி. எஸ். ஸ்தாபனத்தின் மாபெரும் வெற்றிக்குக்காரணம் என்னவென்பதை மேற்





படி விழாவில் விசேஷ விருந்தினராகக் கலந்து கொண்ட டன்லப் டயர் கம்பெனியின் வெளி நாட்டு ஜெனரல் மானேஜரான ஸ்ரீ சிசில் ஸ்டாக் எடுத்துக் கூறினார். முப்பத்தாறு ஆண்டு காலமாக டி. வி. எஸ். ஸ்தாபனத்தாருடன் பழகிய அவர் ''தீர்க்கதிருஷ்டியும் விடாமுயற்சியும் அவற்றுக்கெல்லாம் மேலாக நாணயமும்தான் டி. வி. எஸ். ஸின் வெற்றிக்குக் காரணம்'' என்றார். தொழிலாளர்களை நடத்தும் விதத்திலும் டி. வி. எஸ். ஸ்தாபனம் இதரருக்கு வழிகாட்டி என அவர் மிகவும் பாராட்டினார்.

டன்லப் கம்பெனியைப் பற்றியும் இந்தச் சந்தர்ப்பத்தில் விசேஷமாகச் சொல்ல வேண்டும். அவர்களுடைய கூட்டு முயற்சியின் விளைவாக டி. வி. எஸ். ஸ்தாபனத்தினர், இப்போது உற்பத்தித் துறையில் முதன் முதலாகப் பிரவேசித்துள்ளனர். சென்னைக்கு அருகிலுள்ள பாடியில் '' வீல்ஸ் இந்தியா '' என்ற புதிய தொழிற்சாலை நிறுவப்பட்டு மோட்டார் சக்கரங்கள் உற்பத்தி சென்ற வாரந்தான் இங்கே ஆரம்பிக்கப்பட்டது. மத்திய அரசாங்கத் தொழிலமைச்சர் திரு கே. வி. ரெட்டி இந்தத் தொழிற்சாலையைத் திறந்து வைத்தார். சென்னை முதலமைச்சர் திரு காமராஜ் இப்பெரும் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

சுமார் 1½ கோடி ரூபாய் மூலதனத்துடன் மூன்றாவது திட்ட காலத்துக்குள், லாரி, பஸ் போன்ற கனரகப் போக்குவரத்துக்கு நாட்டில் தேவைப்படும் சக்கரங்கள் முழுவதையும் நம் நாட்டிலேயே உற்பத்தி செய்து கொடுக்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

இங்கே உள்ள யந்திரங்கள் எல்லாம் பிரமிப்பை உண்டாக்குபவை. சில யந்திரங்கள் நூறு டன் கனமுள்ளவை. மூலதனத்தில் பாதி யந்திரங்கள் எனலாம். எண்ணிக்கை அதிகமில்லா விட்டாலும், ஒவ்வொன்றும் விலையுயர்ந்தவை. 80,000 சதுர அடி பரப்புள்ள விஸ்தாரமான தொழிற்சாலையில் சுமார் முந்நூறு திறமை வாய்ந்த தொழிலாளிகளுக்கு வேலை வாய்ப்பையும் அளித்து, நாட்டின் தொழில் வளத்துக்கு வகை செய்து, அந்நியச் செலாவணிக்குத் தாளம் போடும் இச்சமயத்தில் இந்த ஒரு துறையிலாவது இறக்குமதியைக் குறைத்துச் செலாவணியை மிச்சப்படுத்தும் ஒரு தொழிலை டி. வி. எஸ். ஸ்தாபனத்தார் முன்வந்து நிறுவியுள்ளனர்.

மக்களுக்குச் சேவை செய்வது பலவகைப்பட்டது. பஸ் போக்குவரத்தைச் செவ்வனே நடத்துவதே ஓர் உயர் பணி. உற்பத்தித் துறையில் பிரவேசித்துத் தொழிலை வளர்ப்பது அதைவிட உயர் பணி. இந்த ஆரம்பம், மற்றும் பல உற்பத்தித் துறைகளிலும் டி. வி. எஸ். விருத்தியடைவதற்கு அஸ்திவாரமாக இருக்கும் என்றே கூறலாம்.

வெளிநாட்டில் தங்களுக்குக் கிட்டிய நல்ல நல்ல அனுபவங்களை யெல்லாம் தங்கள் தொழிலாளர்களுடன் பகிர்ந்து கொண்டு மக்களுக்குத் தொண்டாற்றுவதே பெரிதென்று தாங்கள் கருதுவதாக ஸ்ரீ டி. எஸ். ராஜம் பெங்களூரில் நடந்த விழாவில் கூறினார்.

பெங்களூரில் ஆரம்பித்துள்ள தங்கள் தொழில் கூடத்துக்கு மைசூர் மக்களையே தொழிலாளிகளாக ஈடுபடுத்தப் போவதாகவும் பத்திரிகையாளர் கூட்டத்தில் ஸ்ரீ ராஜம் வெளியிட்டார். மைசூர் ராஜ்யத்தில் வெளியார் ஏற்படுத்தும் ஸ்தாபனங்களில் ஸ்தல மக்களுக்கு அதிக ஆதரவு அளிக்க வேண்டுமென்ற கோரிக்கை பலமாக எழுந்துள்ள இத்தருணத்தில் ஸ்ரீ ராஜத்தின் அறிவிப்பை அனைவரும் பாராட்டினர்.

டி. வி. எஸ். ஸ்தாபனத்தினரின் தனி குணங்கள் சுறுசுறுப்பும், புன்முறுவல் பூத்த முகமும். ஸ்ரீ ராஜம், ஸ்ரீ சந்தானம், ஸ்ரீ கிருஷ்ணா, ஸ்ரீ சீனிவாசன் ஸ்ரீ ரத்னம், ஸ்ரீ ராமச்சந்திரன் முதலிய ஸ்தாபன நிர்வாகிகள் இதரரைக் கவர்வது தங்கள் புன்முறுவல் பூத்த முகம், பேச்சுத் திறன் இவற்றால்தான்.

சேவை, நாணயம், செய்துகொடுக்க ஒப்புக்கொண்டதைக் குறித்த காலத்தில் செய்து கொடுப்பது என்ற கொள்கைகளின் அடிப்படையில் வளர்க்கப்பட்டு வரும் ஒரு ஸ்தாபனம் மக்களுடன் ஒன்றி விட்டதில் அதிசயம் என்ன?

ராஜாஜி, மத்திய அரசாங்கத் தொழில் மந்திரி ஸ்ரீ கே. வி. ரெட்டி, மைசூர் ராஜ்ய முதன் மந்திரி ஸ்ரீ ஜட்டி, ஸ்ரீ டி. டி. கிருஷ்ணமாச்சாரியார், மைசூர் காங்கிரஸ் தலைவர் ஸ்ரீ எஸ். நிஜலிங்கப்பா முதலியோர் இவ்விழாக்களுக்கு வாழ்த்து அனுப்பியிருந்தனர். இவர்களோடு சேர்ந்து நாமும் டி. வி. எஸ். ஸ்தாபனம் ஆல்போல் தழைத்து, அருகு போல் வேரோடிப் பல்கிப் பெருகி வளர வாழ்த்துகிறோம்.

அட்டைப்பட விளக்கம்

இந்த இதழ் கல்கி அட்டையைப் பார்த்ததுமே மணிபல்லவத்தின் கதாபாத்திரங்களை நமது நேயர்கள் அடையாளம் கண்டுகொண்டிருப்பார்கள். ஒரு மொழிக்கு வார்த்தைகள் எப்படிச் செல்வமோ அப்படியே ஒரு சித்திரத்துக்கு பாவங்கள் செல்வம். பேசாத உயிர்களாகிய சித்திரங்களுக்கு அவற்றின் உணர்ச்சி பாவங்களே பேச்சு. இந்த மணிபல்லவச் சித்திரத்திலுள்ள ஒவ்வொரு முகத்திலும் ஒரு பாவம் பேசுகிறது. அந்த உணர்ச்சி பாவங்கள் என்னென்ன என்பதை நேயர்கள் இப்போதிருந்தே கற்பனை செய்யத் தொடங்கியிருப்பார்கள். மணிபல்லவம் தொடர்கதையில் நான்காவது பருவம் மிக முக்கியமானது. திருப்பங்கள் நிறைந்தது. மணிபல்லவத்தின் கதாபாத்திரங்களது குணசித்திரத்தைத் தமது வண்ணச் சித்திரங்களால் அழகு செய்யும் ஓவியர் வினு இந்த இதழ் அட்டைப்படத்தில் ஓவியன் மணிமார்பன் வரைவதாக வரைந்துள்ள காட்சி உங்களை மகிழ்விக்கும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

கேட்டீர்களா சேதி



செய்தி சேகரன்

"தமிழ் நாடு முன்னேறியிருக்கிறது. அதை நிரூபிக்கப் புள்ளி விவரங்கள் நிறைய இருக்கின்றன. அவற்றை நம்பா விட்டால், கிராமங்களுக்குப் போய் நேரில் பார்க்கலாம். வேகமாக முன்னேறுகிறோம்" என்றார் அமைச்சர் ஒருவர்.

கிராமங்களுக்குப் போய்ப் பார்த்தால் முன்பு மனிதர்கள் குடியிருந்த வீடுகளிலெல்லாம் இப்போது பெருச்சாளிகள் குடியேறியிருப்பது தெரிய வரும். சாக்கடையில் கிடந்த பெருச்சாளிகளெல்லாம் வீட்டுக்குள் குடி வந்திருந்தால் அதுவும் முன்னேற்றம்தானே!

"கேரளத்தில் காங்கிரஸ்-பி. சோ. கூட்டு, மந்திரி சபையின் முழுப் பதவிக் காலத்துக்கும் வேலை செய்யும். கலப்பு சர்க்கார் நிச்சயமாக நீடிக்கும்."

"உணவுப் பொருள்களில் கலப்படமே கூடாதென்று கூறும் காங்கிரஸ் சர்க்கார், மந்திரிசபையில் மட்டும் கலப்படத்தை அநுமதிக்கலாமோ!" என்று கேட்கிறார் ஒரு மளிகைக் கடைக்காரர்!

"மாடுகளுக்குப் பார அளவு நிர்ணயம் செய்யப்படுவதுபோல் மனிதர்கள் சுமை இழுப்பதற்கும் அளவு நிர்ணயம் செய்யப்படவில்லையா?" என்று ஓர் அங்கத்தினர் கேட்ட கேள்விக்கு உள்துறை அமைச்சர் பதில் அளிக்கையில், "மனிதர்கள் சுமை இழுப்பதையே ஒழிக்க வேண்டும் என்பதே அரசாங்கத்தின் கொள்கை" என்றாராம்.

வாழ்க்கை வண்டியை ஓட்டுவதற்காக வேறு வழியின்றிச் சுமை வண்டி இழுக்கும் ஏழை மக்களின் பிழைப்பையே ஒழித்து விடுவது ஒரு கொள்கையா?

"பெண்கள் படித்துப் பட்டம் பெற்றவுடன் மாப்பிள்ளை தேடும் நிலை உடனடியாக ஒழிய வேண்டும். படித்துப் பட்டம்பெற்ற பெண்களுக்குக் கல்யாண ஆசை கூடவே கூடாது!" என்று மத்திய சர்க்கார் மந்திரி ஸ்ரீமதி லட்சுமி மேனன் ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறார்.

"காதல் ஒருவனைக் கைப் பிடித்து, அவன் காரியம் யாவினும் கை கொடுத்து" இன்ப வாழ்வு வாழ வேண்டும் என்று கனவு கண்டு கொண்டிருக்கும் இள நங்கையர்களுக்கு ஒரு பெண் அமைச்சர் இப்படிப் போதனை செய்திருப்பதை எந்தப் பெற்றோரும் விரும்ப மாட்டார்கள்.

"வகுப்புவாதம் பேசுவது மகா மோசமானது. அதைவிட மிகவும் வருந்தத்தக்கது மக்களிடையே நிலவும் வகுப்பு வேற்றுமை உணர்ச்சி. இதை நான் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறேன்" என்று அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி கூறியிருக்கிறார்.


'இவர் வன்மையாகக் கண்டித்து என்ன பயன்? பொதுமக்கள் அதிகமாகப் பயன்படுத்தும் ரயில் வண்டியில் வேற்றுமை தலைவிரித்தாடுகிறதே! முதல் வகுப்பு, இரண்டாம் வகுப்பு, மூன்றாம் வகுப்பு, 'ஏர்கண்டிஷன்டு' விசேஷ வகுப்பு என்று எத்தனை வகுப்பு வேற்றுமைகள்! இதையெல்லாம் யார் கண்டிப்பது?' என்று ஓர் அப்பாவி மூன்றாம் வகுப்புப் பிரயாணி ஏங்குகிறார்.

"பாலில் தண்ணீர் கலந்து விற்றதாக ருசுப்பிக்கப்பட்டு ஒரு பால்காரருக்கு ரூ. 200. அபராதம்."

தாம் தண்ணீரில்தான் பாலைக் கலந்ததாகவும் பாலில் தண்ணீரைக் கலக்கவில்லையென்றும் அந்தப் பால்காரர் வாதாடினால் ஆச்சரியப் படுவதற்கில்லை.

"நடுத்தெருவில் ஒரு கார் விபத்து நேர்ந்துவிட்டால், சேதமடைந்த காரைத் தெருவிலிருந்து அப்புறப்படுத்தும் வரையில் மற்ற மாமூல் வண்டிப் போக்குவரத்து தடைப்பட்டு நின்று விடுவதைக் காண்கிறோம். ஆனால் மேற்கு ஜெர்மனியில் தெருவில் கார் விபத்து நேர்ந்தால், சேதமான காரை ஒரு ஹெலிகாப்டர் ஆகாயத்தில் பறந்தவாறே கொத்திக் கொண்டு போய் விடும்."

'நல்ல ஏற்பாடுதான். ஆனால் இதைவிட இன்னும் நல்ல ஏற்பாடு ஒன்று இருக்கிறது. பாதசாரிகளையெல்லாம் ஹெலிகாப்டர் மூலம் கொத்திக் கொண்டு போய் அவரவர்கள் போய்ச் சேர வேண்டிய இடங்களில் போட்டு விட்டால் விபத்துக்கள் கணிசமாகக் குறையுமே!' என்கிறார் ஒரு நடராஜா சர்வீஸ் பார்ட்னர்.



சுதந்திரத்தின் வழியே சுபிட்சவாழ்வு

தேர்தல் அறிக்கை

1. மக்களை மிக முக்கியமான முடிவுகளுக்கு வருமாறு அறைகூவி அழைக்கும் ஓரிரு சந்தர்ப்பங்கள் ஒவ்வொரு தலைமுறையிலும் நேருவதுண்டு. 1962 பிப்ரவரியில் இது போல் நமது ஜனநாயகத்துக்குச் சவால் விடுக்கும் ஒரு சந்தர்ப்பம் ஏற்பட இருக்கிறது. அப்போது மக்களின் தேவைகள், அபிலாஷைகள் இவற்றைப் பூரணமாகவும், உண்மையாகவும் பிரதிபலித்து, அவர்களுடைய ஆற்றல் வெளியாவதற்கு எழுச்சி அளிக்கக் கூடிய புதியதொரு பார்லிமெண்டுக்கும், ராஜ்ய சட்டசபைகளுக்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பைப் பாரத மக்கள் பெறுவார்கள். அதன் வழியே புதியதோர் அரசாங்கத்தைப் பெறுவார்கள்.

2. தேசம் சுதந்திரமடைந்து பதினைந்து ஆண்டுகளான பின் இன்று மக்கள் பெரும் ஏமாற்ற உணர்ச்சியை அநுபவிக்கிறார்கள். தூய்மையும் திறமையும் உடைய ஒரு நிர்வாகத்தின் தேவையை உணருகிறார்கள்; தாங்கள் சுதந்திரமாக வாழவில்லை; அதிகாரிகள், ஆளும் கட்சி அங்கத்தினர்கள் ஆகியோரது தயவிலேயே ஜீவனம் நடத்துகிறோம், என மக்கள் கருதுகிறார்கள். பண்டங்களை உற்பத்தி செய்வதிலும், விநியோகிப்பதிலும் ஈடுபட்டுள்ளவர்கள் அதிகார வர்க்கத்தின் பிடியிலிருந்து விடுதலை பெற வேண்டும் என்று விரும்புகிறார்கள். அதன் மூலம் இந்த நாடு இப்போது இருப்பதைவிட வேகமாகவும், உகந்த முறையிலும் முன்னேறத் தங்களது ஆக்கத் துடிப்புப் பயன்பட வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள். ஆளும் கட்சி விஸ்தரித்து வரும் சர்க்கார் - சர்வாதிபத்தியம்; ஊழல் மலிந்த நிர்வாகம்; அதிகார வர்க்கத்திலுள்ளவர்கள் கடைப்பிடிக்கும் வக்கிர யுக்திகள், தந்திர உபாயங்கள்; குறைகளைக் கவனிப்பதில் அவர்கள் காட்டும் அசிரத்தை; சமூக ஒற்றுமையைத் தகர்க்கும் யோசனையற்ற திட்டங்கள்; தன்னலம் கருதாத சேவைக்கு ஆதாரமான சமயப் பற்றைப் புறக்கணித்தல்; நாட்டின் பல்வேறு பகுதிகளில் சட்டமும், ஒழுங்குப் பாடும் அடைந்துள்ள சீர்கேடு; இவையும் இவை அனைத்துக்கும் மேலாக சீன தேசம் நமது மண்ணில் ஆக்கிரமித்துள்ளதால் ஏற்பட்டிருக்கும் இழிவுணர்ச்சி—இவை யாவும் முடிவு பெற வேண்டுமென மக்கள் விரும்புகிறார்கள்.



சுதந்திரக் கட்சியின் தேர்தல் சின்னம்

எதிர்க்கட்சி வேண்டும்

3. நம் மக்களின் இன்றைய தேவை தூய்மையும் திறமையும் நிறைந்த அரசாங்கம். இன்று காணமுடியாத அத்தகைய அரசாங்கத்தை அவர்கள் பெற வேண்டும். இதற்கு ஒரு நல்ல கட்சி பதவியிலிருந்தால் மட்டும் போதாது; விழிப்புள்ள பலமானதோர் எதிர்க்கட்சியும் அவசியமாகும். உருப்படியான முறையில் கண்டனங்கள் கூறவும், சமயம் நேரிடும் போது ஆட்சிப் பொறுப்பை ஏற்கத் தயாராகவும் உள்ள ஓர் எதிர்க்கட்சி அவசியம். தொடக்கத்தில் எவ்வளவு நல்லதாக இருக்கும் அரசாங்கமும், நாளாவட்டத்தில் பொறுப்பில்லாமலும் மனம் போனபடியும் மாறுவது இயற்கையே. கடந்த பதினைந்து ஆண்டுகளில் காங்கிரஸ் கட்சி தரம் குறைந்து போனதற்கு முக்கியமான காரணம் முறையான ஓர் எதிர்க்கட்சி இல்லாததுதான். இப்போதுள்ள சோஷலிஸக் கட்சியும், கம்யூனிஸ்ட் கட்சி என்ற ஐந்தாம் படையும் காங்கிரசுக்கு உண்மையான எதிர்க்கட்சிகள் ஆகா.

4. நமது தேசிய வாழ்வைப் பொறுத்துள்ள ஜனநாயக அமைப்பில் இந்த ஜீவாதாரமான அம்சம் காணப்படவில்லை. இதனை அளிப்பதற்காகவே ராஜாஜி அவர்கள் தலைமையில் சுதந்திரக் கட்சி அமைக்கப்பட்டது. அது இன்றைய ஆட்சி முறையிலிருந்து தெற்றென மாறுபடும் வேறோர் ஆட்சி முறையை ஆதரிக்கிறது; அது மக்கள் விரும்பும்போது அரசாட்சிப் பொறுப்பை ஏற்கக் கூடிய கட்சியாகும். எனவே அது செயல்படுவதற்கு வாக்காளர்கள் ஆணை அளிப்பார்களானால், இந்த நாட்டுக்கு முதன் முறையாக ஓர் உண்மையான எதிர்க்கட்சி கிடைக்கும். இப்படிப்பட்ட ஓர் எதிர்க் கட்சியின் முக்கியத்துவத்தை உணரும் ஒவ்வொரு வாக்காளரும் - காங்கிரஸ் கட்சியின் எல்லாம் தழுவும் சர்வாதிபத்திய சர்க்காரை விரும்பாத ஒவ்வொருவரும் - சுதந்திரக் கட்சி தனது அபேட்சகரை நிறுத்தியுள்ள தொகுதிகளிலெல்லாம் அந்தக் கட்சிக்குத் தவறாமல் வோட்டு அளிக்க வேண்டும்.

5. சுதந்திரக் கட்சியின் குறிப்பிடத்தக்க கொள்கைகளில் ஒன்று வருமாறு: அக்கட்சியின் கொள்கை அறிக்கையிலும், இந்த விஞ்ஞாபனத்திலும் இல்லாத எந்த விஷயத்திலும், கட்சி அங்கத்தினர்கள் தங்களின் தனிப்பட்ட கருத்துக்களைச் சட்டசபையிலும், வெளியிலும் தெரிவிக்கச் சுதந்திரம் பெற்றிருக்கிறார்கள். இதனால் நாட்டில் எந்த ஒரு விஷயத்திலும் தேசிய அபிப்பிராயமே நிலைபெறும் என்று சுதந்திரக்கட்சி உறுதியளிக்கிறது. இன்று காங்கிரஸ் ஆட்சியிலோவெனில் ஆளும் கட்சியிலுள்ள பெரும்பான்மையினரின் கருத்துத்தான் நிலைபெறுகிறது.

6. சுதந்திரக் கட்சி இரண்டே ஆண்டுகள் பூர்த்தியான ஒரு புதுக்கட்சியாகும். இன்று செல்வாக்கு படைத்திருப்பவர்களில் பெரும்பாலோர் எதிர்காலத்தைக் காணத் தவறுகிறார்கள்; தங்களின் குறுகிய கால முன்னேற்றம் காரணமாகத் தங்களுக்கே அழிவைத் தேடித் தரும் சுயநலத்தைப் பேணி வருகிறார்கள்; அச்சுறுத்தலுக்கு அடிபணிந்து வருகிறார்கள்; இக்காரணங்களால் சுதந்திரக் கட்சியின் நிதி வசதிகள் மிகவும் கடுமையாக ஒடுக்கப்பட்டுள்ளன. எனினும், தெளிவாக மாறுபடும் வெவ்வேறான இரண்டு வாழ்முறைகளுக்கும், நிர்வாக அமைப்புக்களுக்கு மிடையே ஒன்றினை உருவகப்படுத்தும் காங்கிரஸ் அல்லது சுதந்திரக் கட்சி இவ்விரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்கும் வாய்ப்பை வாக்காளர்களில் பெரும் பகுதியினருக்கு அளிக்கத் தன்னால் முடிந்ததைச் செய்ய இக்கட்சி முன்வந்திருக்கிறது.

வரையறை பெற்ற மாற்று வழி

7. கடந்த பதின்மூன்று ஆண்டுகளாக அரசாங்கம் செய்துள்ள எல்லாக் காரியங்களுக்கும் தானே காரணம் என்று விசேஷ பாத்தியதை பாராட்டுகிறது காங்கிரஸ். நிர்வாகக் கடமையை ஏற்று, வரி வசூல் செய்யும் எந்த அரசாங்கமும் இக்காரியங்களில் பெரும் பங்கினைச் செய்ய வேண்டியது முறையே ஆகும். இந்தச் சாதனைகளைக் காங்கிரஸ் ஆட்சியின் விசேஷ அநுகூலங்கள் என்று உரிமை கொண்டாடுவதற்கு இடமில்லை.

8. அரசியலிலும் பொருளாதாரத்திலும் எல்லா அதிகாரங்களையும், பொறுப்புக்களையும் பதவியிலுள்ள ஒரு கட்சியினிடமே குவிக்கும் முறைக்குத்தான் இன்றைய காங்கிரஸ் கட்சி ஆதாரமாக இருக்கிறது. இதனால் கண்ட்ரோல்கள், பெர்மிட்டுகள், லைசென்சுகள் இவற்றைக் கொண்டு தேசத்தின் வாழ்வைக் கட்டுப்படுத்தும் கொடுங்கோன்மை ஏற்பட்டிருக்கிறது. இதன் விளைவாக நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் பங்கெடுத்துக் கொள்ளும் வாய்ப்புக்களை மக்கள் மேலும் மேலும் இழந்து வருகிறார்கள். மக்களை நெரிக்கும் வரிச் சுமைக்கும், விலைவாசிகள் ஏறியபடி இருப்பதற்கும் இவ்வாறு அதிகாரத்தைக் குவித்திருப்பதே காரணம். கண்மூடித்தனமான வீண் செலவுகள்; கொழுத்துப் படரும் பணவீக்கம்; கள்ளச் சந்தை—இவையெல்லாம் சர்க்கார் சர்வாதிபத்தியத்தின் விளைவே. பிரம்மாண்டமான காரியங்களைச் செய்ய வேண்டும் என்ற அசட்டு மோகத்துக்காக ஊதாரித் திட்டங்களை வகுத்திருக்கிறது ஆளும் கட்சி. தற்போது பரிதாபகரமாக உள்ள மக்களின் வாழ்க்கை நிலையை மேலும் நலிவுறச் செய்தாவது இந்த மோகத்தை நிறைவேற்றிக் கொள்ளும் அமைப்புக் கொண்டது ஆளும் கட்சியின் திட்டம். நீண்ட நாட்களுக்குப் பின் பலன் தரக்கூடிய பகட்டான திட்டங்களுக்காகப் பொதுமக்களின் இன்றைய நலன்களைப் பலியிடும் கம்யூனிஸத் திட்ட முறைக்கு மிகவும் நெருங்கிச் செல்கிறது காங்கிரஸ் கட்சி. அதிகாரிகள், மந்திரிகள், கட்சி எஜமானர்கள் ஆகியோரின் தயவுக்கு மக்களை ஆளாக்கும் தனது தவறான கொள்கையால் லஞ்சம் பரவுவதற்கும், அதன் விளைவாகத் தரும நெறிகள் குலைந்து போவதற்கும் அது ஊட்டம் அளித்திருக்கிறது.

9. இதற்கு மாறாக, சுதந்திரக் கட்சியின் ஆட்சி முறையானது மக்களின் ஆற்றலில் நம்பிக்கை வைத்து, ஒழுங்கான ரீதியில் முன்னேற்றம் அடைவதை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது. தனது ஆற்றலைச் சுயமாக வெளியிட வேண்டும் என்ற தணிக்க முடியாத ஆவலுள்ள தனி மனிதனுக்கு நாட்டு நடப்பில் மையமான இடம் அளிக்கிறது அக்கட்சி. இந்த இலட்சியத்துக்கு உதவும் வகையில்தான் நிர்வாகம் நடைபெற வேண்டும் என்று அது கருதுகிறது. மிகவும் குறைவாக ஆட்சி அதிகாரம் செலுத்தும் அரசாங்கமே அரசாங்கமாகும்: அதிகாரத்தைப் பரவல் முறையில் அமைத்தால்தான் மக்கள் பூரணமாக விடுதலை பெற்று முழு வளர்ச்சியும் பெறுவதற்குத் தகுந்த சூழ்நிலை உருவாகும் – என்ற காந்தியத் தத்துவங்களுக்கு உறைவிடமாகத் திகழ்கிறது சுதந்திரக் கட்சி.

10. வாய்ப்புக் கிடைக்கும் போது மேற்கண்ட நோக்கங்களையும் கொள்கைகளையும் செயலாக்குவதற்குப் பாடுபடுவதாகச் சுதந்திரக் கட்சி பிரமாணம் எடுத்துக் கொள்கிறது.

2. பொது மக்களுக்கான பொது நன்மைகள்

11. இந்த நாட்டிலுள்ள சாமானியப் பிரஜைக்கு முதலிடமும், முக்கியத்துவமும் அளிப்பதே சுதந்திரக் கட்சியின் அடிப்படைக் கொள்கையாகும்: தனி மனிதனுக்கு உணவும், உடையும், இருப்பிடமும் அளிப்பதுதான் அரசாங்கத்தின் தலையாய கடமை என அது கருதுகிறது: வேலையில்லாத் திண்டாட்டத்தைத் தீர்ப்பது, உணவு தான்ய விளைச்சலில் பெருக்கம் காண்பது, மேலும் பல சிறிய நீர்ப்பாசனத்திட்டங்கள் நிறுவுவது, பள்ளிகள் கட்டுவது, பொதுமக்கள் உபயோகிக்கும் பண்டங்களை உற்பத்தி செய்யும் சிறு தொழில்களை வளர்ப்பது - இவற்றுக்காகவே ஏற்பட்டது சுதந்திரக் கட்சி.

12. கிராமப்புறங்களில் சுத்தமான குடி நீர் வழங்குவதற்கும், பட்டணங்கள், அவற்றின் சுற்றுப்புறங்கள் இவை போலவே கிராமப் புறங்களிலும் வீட்டு வசதி அளிப்பதற்கும் சுதந்திரக்கட்சி முதல் கவனம் செலுத்தும்.

13. சாலைகள், வாய்க்கால்கள், பாலங்கள், சாலைப் போக்குவரவு, உள்நாட்டு நீர் மார்க்கப் போக்குவரவு ஆகியவை எவ்வளவு முக்கியம் வாய்ந்தவை என்பதை இக்கட்சி உணர்ந்துள்ளது.

14. வசதிகள் படைத்த வைத்திய நிலையங்களின் சிகிச்சையைக் கிராம மக்களும் எளிதிலும் காலதாமதமின்றியும் பெறுமாறு ஆம்புலன்ஸ் வண்டி வசதியை இக் கட்சி விஸ்தரிக்கும்.

15. இப்போதுள்ள பிரம்மாண்டப் படாடோபத் திட்டங்கள் மக்களின் உடனடித் தேவைகளைக் கருதாதவை. அல்லது அப்படிக் கருதினாலும் அத்திட்டங்களைக் காரியமாக்கும் போது செலவிடும் தொகையில் பெரும் பகுதி பயனற்ற இனங்களில் வீணாகி விடுகிறது. இந்தத் தொகையைச் சரியானபடி செலவிட்டால் சுதந்திரக் கட்சியின் நோக்கங்களை மிகவும் சுலபமாக நிறைவேற்றிவிடலாம். நவீன கால இயந்திர வசதிபெற்ற சிறு தொழில்களை ஊக்குவதற்கும், மலிவான துணி வகைகளைத் தயாரிப்பதற்கும் இந்தத் தொகையைச் செலவிட்டால் குறைந்த மூலதனச் செலவிலேயே ஏராளமான தொழிலாளி மக்களுக்கு லாபகரமான ஊதியம் அளிக்க முடியும். இதனால் நாட்டிலுள்ள திடகாத்திரமான மக்கள் யாவரும் வேலை பெறுவது சாத்தியமாகும்.

பணவீக்கத்துக்கு முற்றுப்புள்ளி

16. நிலையான மதிப்பு பெற்ற நாணயம், ஸ்திரமான விலைவாசிகள் இவைகளே பொதுமக்களுக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள். இவையில்லாவிடில், அவர்கள் அழிந்து போக வேண்டியதுதான். இந்நிலையில் நடுத்தர வர்க்கத்தினர் கதியும் அதோகதிதான். கடந்த ஐந்தாண்டுகளில் நாட்டில் பணப் பெருக்கத்தை அதிகரித்து, வருஷத்துக்கு வருஷம் விலைவாசிகளை மேன்மேலும் உயரச் செய்துள்ள காங்கிரஸ் கட்சி ஏழைகள் தங்கள் கடும் உழைப்புக்காகப் பெறவேண்டிய பலன்களை அபகரித்து விட்டது. விலைவாசிகள் உயரக் காரணமாயிருந்த காங்கிரஸின் நாசகரக் கொள்கைகளைச் சுதந்திரக் கட்சி கைவிடும்; பொருளாதார நிலைமையைச் சீராக மாற்றும்.

17. உற்பத்திக்கும், வேலை வாய்ப்புக்களுக்கும் பெரும் தடையாக உள்ளது இன்று விதிக்கப்பட்டுள்ள அளவு கடந்த வரிகளின் சுமை. சுதந்திரக் கட்சி இந்தச் சுமையைப் பெருமளவுக்குக் குறைக்கும். விற்பனை வரியை அமுல் செய்வதில் ஏற்படும் இன்னல்கள் குறையுமாறும், நாட்டில் உள்ள சில்லறை வியாபாரிகளின் நிலைக்கு உகந்த முறையிலும், விற்பனை வரி முறையை மாற்றி அமைத்துச் சீராக்கும். மறைமுக வரிகளைக் குறைப்பதால் மக்களின் அன்றாட உபயோகப் பொருட்களின் விலை இறங்கும்; மக்களின் ஆக்கத் திறன் வெளியாகி, நாட்டுத் தேவைகளைப் பூர்த்திசெய்து, சுபிட்சநிலையை உயர்த்த உதவுமாறு நேரடி வரிகளும் ஒழுங்குபடுத்தப்பெறும்.

18. கிராமப் புறங்களில் வாழும் விவசாயிகள், உழவுத் தொழிலாளர்கள், நகரங்களில் வாழும் மத்தியதர மக்கள், தொழிலாளர்கள் ஆகியோருடைய வருமானத்தின் உண்மையான மதிப்பும், வாழ்க்கைத் தரமும் கடந்த பத்தாண்டுகளில் தாழ்ந்துகொண்டே வந்திருக்கின்றன. மேலே கூறியுள்ள கொள்கைகளை நிறைவேற்றுவதனால் மட்டுமே இந்நிலையைத் தவிர்த்து அவர்களது வருமானத்தின் மதிப்பையும், வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும். அபிவிருத்தி என்ற பெயரில் அவல நிலையை வளர்க்கும் அமைப்பையுடையவையே இன்றைய திட்டங்கள். நிகழ்கால இன்னல்களின் மீது என்றோ ஏற்படக்கூடிய நிச்சயமற்ற அபிவிருத்தியை எழுப்ப அவை முயலுகின்றன. ஏகாதிபத்தியச் சர்வாதிகார நாடுகளிலிருந்து இரவல் வாங்கிய இந்தத் திட்டக்கொள்கை பாரத மக்களின் ஆற்றல்களைப் பயனுக்குக்கொண்டுவர உதவாது. (தொடரும்)

மணிபல்லவம்

நா.பார்த்த சாரதி

2 கப்பலில் வந்த கற்பூரம்

மணிபல்லவ யாத்திரைக்காகத்திட்டமிட்டுக் கொண்டு இளங்குமரனும் வளநாடுடையாரும் பூம்புகார்த் துறைமுகத்தில் கப்பல் ஏறுவதற்கு வந்திருந்த அதே கால நேரத்தில் பெருநிதிச் செல்வரும் நகைவேழம்பரும் துறைமுகத்தின் மற்றொரு பகுதியில் வந்து நின்று நங்கூரம் பாய்ச்சிக் கொண்ட வேறொரு கப்பலிலிருந்து இறங்கிக் கொண்டிருந்தார்கள் என்பதை எவரும் கவனிக்கவில்லை. பொருள்களை ஏற்றி வரும் கப்பல்கள் பண்டகசாலைகளை ஒட்டிய பகுதியில் நங்கூரம் பாய்ச்சப்படுவது வழக்கம். ஆயினும் பண்டகசாலைகளை ஒட்டித் துறை கொள்ளும் கப்பல்கள் மிகவும் பெரியவைகளாக இருந்தால் அவற்றின் மேல் தளத்தில் நின்று கொண்டிருப்பவர்களால் பூம்புகார்த் துறைமுகத்தின் எல்லாப் பகுதிகளையும் நன்றாகப் பார்க்க முடியும். அப்போது வந்த கப்பல் மிகவும் பெரியது. *பச்சைக் கற்பூரம், குங்குமம், பனி நீர் முதலிய நறுமணப் பொருள்களை ஏற்றிக் கொண்டு சீன தேசத்திலிருந்து பல மாதக் கணக்கில் பயணம் செய்து வந்த மிகப் பெரிய மரக்கலம் அது. சீன தேசத்திலிருந்து வந்த கப்பலில் நகைவேழம்பரும், பெருநிதிச் செல்வரும் எப்படிப் போய்ச் சேர்ந்தனர் என்பதை இப்போது கவனிக்கலாம்.

---

* கற்பூரம், குங்குமம் முதலிய பொருள்கள் சீன நாட்டிலிருந்து வந்தன என்பதற்குச் சான்று பட்டினப்பாலை. — 192



அந்த ஆண்டின் இந்திர விழாவில் சமயவாதம் புரிந்து வெற்றி மேல் வெற்றியாகப் புகழ் பெற்றுக் கொண்டிருந்த இளங்குமரனைத் தன்னுடைய மகளைக் கருவியாகப் பயன்படுத்திப் பெருநிதிச் செல்வர் கொல்ல முயன்றதும் அந்த முயற்சியும் தோற்றபின் மகள் சுரமஞ்சரியை அவள் தோழியோடு மாடத்திலேயே சிறை வைத்ததும் பரம இரகசியமாக நடந்த சூழ்ச்சிகள். சுரமஞ்சரியை அவளது மாடத்திலிருந்து வெளியேற முடியாமல் சிறைப் படுத்திய இரண்டு சந்தர்ப்பங்களிலும் தான் அவளைச் சிறைப்படுத்தியிருப்பதாக மற்றவர்கள் அநுமானம் செய்யவும் இடமில்லாதபடி சாமர்த்தியமாக அதைச் செய்திருந்தார் அவர். தன்னையும், நகைவேழம்பரையும் தவிர மற்றவர்களுக்கு உண்மைக் காரணத்தைத் தெரியவிடக் கூடாது என்பதில் அவர் மிக உறுதியாக இருந்தார். சுரமஞ்சரியின் தாயார், சகோதரி, பெருமாளிகைப் பெண்கள் ஆகியோர்களிடம் எல்லாம் சுரமஞ்சரியின் ஜாதகப்படி இரகநிலை சரியில்லாத சில காலங்களில் அவள் எங்கும் வெளியேறிச் செல்லாமல் தன் மாடத்திலேயே விரதமிருந்து பரிகாரங்கள் செய்ய வேண்டுமென்று வருவதறிந்து கூறுவதில் வல்ல பூம்புகார்க் *கணிகள் கூறியிருப்பதாகவும் அதன்படி அவளைத் தனிமையில் இருக்க ஏற்பாடு செய்திருப்பதாகவும், வேறுஎவரும் அவளைச் சந்திக்கலாகாதென்றும் கூறி நம்பச் செய்திருந்தார் பெருநிதிச் செல்வர். பெருமாளிகைப் பெண்களும், பிறரும் நம்பும் விதத்தில் அவருக்கு இந்த அற்புதமான பொய்யைச் சொல்லிக் கொடுத்தவர் நகைவேழம்பர்தான்.

இந்திரவிழாவில் நாளங்காடியின் பொது இடத்தில் சுரமஞ்சரி தான் அணிந்து கொண்டிருந்த அணிகலன்களை யெல்லாம் கழற்றி எறிந்து விட்டு, 'இந்தப் பல்லக்கு நரகத்துக்குப்போகும் வாகனம்! நான் இதில் ஏறி வரமாட்டேன்' — என்று அடம் பிடித்த தினத்தில்தான் 'தன்னுடைய குடும்ப இரகசியங்கள் அந்த நாளங்காடி நாற்சந்தியில் சிதறிவிடுமோ?'-என்று முதல் முதலாக அவர் அஞ்சினார். அதேநாளில் நகைவேழம்பர்வேறு ஏதோ ஒரு கலகத்தைப் பிறப்பிப்பதற்குக் காரணமான மௌனத்தோடு அவரிடம்வன்மமாயிருந்தார். தன் பெண் சுரமஞ்சரி அன்று இருந்த நிலையைக் கண்டு அவளிடம் அவருக்கே பயமாகிவிட்டது. இருளில் மாடத்திலிருந்து குதித்துத் தற்கொலை செய்து கொண்டு விடுவாளோ என்றுகூட அன்றைக்கு, அவளைப் பற்றிப் பயந்தார் பெருநிதிச் செல்வர் அவள் அப்படி ஏதேனும் அசட்டுக் காரியம் செய்யாமல் தடுக்க நினைத்துத்தான் அவளுடைய மாடத்தின் இருளில் தானே அவளை ஒவ்வொரு கணமும் பார்த்துக்கொண்டு நிற்பது போலத் தோன்றும்படி தன்னுடைய ஊன்றுகோலை வைத்து அரட்டினார். அதே இரவில் இன்னொரு பெரிய அவமானமும் அவருக்கு ஏற்பட்டது. பகல் முழுவதும் வெயில் நெருப்பாய்க் காய்கிற நாளில் பகல் முடிந்ததும் மழை கொட்டுவது போல அன்று காலையில் தொடங்கி அளவு மீறின அமைதியோடு இருந்த நகைவேழம்பர், இரவில் அவரிடம் ஏதோ பேசச் சென்றபோது பெருநிதிச்செல்வரிடம் எரிமலையாகக் குமுறி விட்டார்.

அதன் விளைவாக எல்லாரும்உறங்கிப் போன அந்த நள்ளிரவில் நகைவேழம்பரிடமிருந்து பெருநிதிச் செல்வர் பெற்ற அவமானம் மறக்க முடியாதது. அந்த அவமானத்துக்குப் பதிலாக அப்போதே பெருநிதிச் செல்வர் உணர்ச்சிவசப்பட்டிருந்தால் நகைவேழம்பரைக் கழுத்தை நெரித்துக் கொன்றிருப்பார். ஆனால் அவர் உணர்ச்சி வசப்படவில்லை. திட்டமிட்டு நிதானத்தோடு நடந்து கொண்டார். யாருக்கும் தெரியாதென்று தான் அடக்கிக் கொண்ட அந்த அவமானத்தை மேலேயுள்ள மாடத்திலிருந்து தன் மகளே பார்த்து விட்டாள் என்பதும் அவருக்குத் தெரியாது.

''பகல் முழுதும் மௌனமாயிருந்து நீங்கள் சேர்த்துக்கொண்ட ஆத்திரத்தின் விளைவு இதுதான் என்றால் இதற்காக நான் மகிழ்கிறேன் நகைவேழம்பரே!'' - என்று அவருக்குப் பணிந்து கொடுத்துப் பேசினார் பெருநிதிச் செல்வர். இயல்புக்கு மாறான இந்த நிதானம் நகைவேழம்பருக்கே அதிர்ச்சியை யளித்தது.

நகைவேழம்பர் நிமிர்ந்து ஒற்றைக் கண்ணால் பார்த்தார். எதிரே நின்ற பெருநிதிச் செல்வருடைய இடது கன்னத்தில் ஐந்து விரல்களின் தடமும் பதிந்திருந்தது. ''உங்களுடைய ஆத்திரம் இன்னும் மீதமிருந்தால் அதை மற்றொரு கன்னத்தில் பயன்படுத்திக் கொள்ளலாம், நண்பரே! அதற்காக நான் வருந்த மாட்டேன்'' - என்று நகைவேழம்பரை நோக்கிச் சொல்லி விட்டு வஞ்சகமாகச் சிரித்தார் பெருநிதிச் செல்வர். இதைக் கேட்டதும் நகைவேழம்பருக்குச் சற்றே பயம் பிறந்தது; உடலில் மெல்ல நடுக்கமும் கண்டது.

* ஜோதிடர்கள்.

''மன்னிக்க வேண்டும்! அப்போது நான் மிகவும் கோபமாயிருந்தேன். அது என்னை நிதானமிழக்கும்படி செய்து விட்டது.''

''அதைப் பற்றிக் கவலையில்லை! நீர் நிதானத்தை இழந்து விட்ட அதே நேரத்தில் உம்மால் இழக்கப்பட்ட நிதானமும் சேர்ந்து எனக்கு வந்து விட்டது. ஒரே சமயத்தில் இரண்டு பேருமே நிதானம் இழந்திருந்தால்தான் கெடுதல்!..... வாருங்கள். வேறு முக்கியமான காரியத்துக்காக இப்போது நமக்கு இன்னும் நிறைய நிதானம் தேவைப்படுகிறது நகைவேழம்பரே!''

சோறிட்டு வளர்ப்பவனுக்குப் பின்னால் வால் குழைத்துச் செல்லும் நாய் போல் தலை குனிந்தபடி பெருநிதிச் செல்வரைப் பின்பற்றி நடந்தார் நகைவேழம்பர். இருவரும் பெருமாளிகைத் தோட்டத்தில் தனிமையானதோர் இடத்தை அடைந்ததும் பெருநிதிச் செல்வர் பேசலானார்:—

"நம்முடைய பண்டகசாலைக்கு இன்றைக்கு நான்கு நாட்களுக்கு முன்பே வந்து சேர்ந்திருக்க வேண்டிய கப்பல் ஒன்று இன்று வரை வந்து சேரவில்லை. நீரும் அதை மறந்து விட்டீர். பச்சைக் கற்பூரமும், குங்குமமும், பனிநீரும் ஏற்றி வருவதற்காகச் சீனத்து வணிகன் ஒருவனிடம் பல மாதங்களுக்கு முன்னால் ஆயிரம் பொற்கழஞ்சுகள் கொடுத்து ஓலை மாற்றிக் கொண்டோமே; அதை மறந்து விட்டீர்களா? இந்த ஆண்டு இந்திர விழாவின் முதல் முழுமைக்குள் கப்பல் இங்கு வந்து சேருமென்று அந்த வணிகன் வாக்குக் கொடுத்தான். இன்று வரை அந்தக் கப்பலைப்பற்றி ஒரு செய்தியும் தெரியவில்லை....''

''அந்தச் சீனத்து வணிகன் நம்மிடம் தவறு செய்யமாட்டான். இன்று அல்லது நாளைக்குக் கற்பூரக் கப்பல் துறைமுகம் வந்து சேர்ந்து விடும்...''

''வணிகனுக்குத் தவறு செய்யவேண்டாம் என்ற மனச்சாட்சியே இருக்கலாகாது நகைவேழம்பரே! ஒவ்வொரு கணமும் தவறு செய்ய வேண்டிய சந்தர்ப்பங்களைத் தேடிக்கொண்டே இருப்பவன்தான் சாமர்த்தியமான வணிகன். கற்பூர வணிகனுயிற்றே; எல்லாம் நறுமணமாயிருக்கும் என்று நம்பலாகாது. மணம் கற்பூரத்துக்குத்தான் சொந்தம். அதை விற்கிறவன் கெட்ட நாற்றமுடையவனாகவும் இருக்கலாம்...''


''வேண்டுமானால் நாம் அந்தக் கப்பலை எதிர்கொண்டு புறப்பட்டுத் தேடலாமே?''

என்று மறுமொழி கூறினார் நகைவேழம்பர். இந்த ஏற்பாட்டின்படி மறுநாள் காலையில் வந்து சேர வேண்டிய கற்பூரக் கப்பலைத் தேடிக்கொண்டு புறப்பட்டு விட்டார்கள் பெருநிதிச் செல்வரும்



நகைவேழம்பரும். வந்து சேர வேண்டிய நாளில் எதிர்பார்த்த பொருளுடன் ஒரு கப்பல் வரவில்லையானால் அதைத் தேடி வேறு கப்பலில் எதிர்கொள்வது அந்தக் காலத்துக் காவிரிப்பூம் பட்டினத்து வணிகர்களிடையே வழக்கமாயிருந்தது. மிகப் பெரிய கப்பல் வணிகராகிய பெருநிதிச் செல்வருக்கு அடிக்கடி இந்த வேலை ஏற்படுவதுண்டு. அப்படி ஏற்படும்போது அவரோடு நகைவேழம்பரும் அவருக்குத் துணை போவார்.

இளங்குமரன் ஆலமுற்றத்துப் படைக்கலச் சாலையில் சமதண்டத்து, ஆசிவகர்களோடு வாதம் புரிந்து கொண்டிருந்த நாட்களில் பெருநிதிச் செல்வரும், நகைவேழம்பரும் பூம்புகா



ரின் சுற்றுப்புறக் கடலில் கற்பூரக் கப்பலைத் தேடி அலைந்து கொண்டிருந்தார்கள். பதினைந்து யோசனை தூரம் வரை அலைந்து திரிந்த பின் சீனத்துக் கப்பல் எதிரே வருவது தென்பட்டது. கடற் காற்றுப் பயணத்துக்கு வசதியான திசையில் இல்லாததால்தான் இவ்வளவு தாமதமென்று காரணம் கூறினான் அக்கப்பல் தலைவனான சீனத்து வணிகன். பெருநிதிச் செல்வரும், நகைவேழம்பரும் தாங்கள் தேடுவதற்காக ஏறிச் சென்ற கப்பலைத் துறைக்குத் திருப்பிக் கொணரும் பொறுப்பை அதன் மீகாமனிடம் ஒப்படைத்து விட்டுக் கற்பூரக் கப்பலிலேயே ஏறிக்கொண்டு பூம்புகாருக்குத் திரும்பினார்கள். அவர்கள் பூம்புகார்த் துறைமுகத்துக்குத் திரும்பிய அதே தினத்தின் காலையில் தான் இளங்குமரனும் மணிபல்லவத்துக்குப் புறப்பட்டுக் கொண்டிருந்தான். பண்



டகசாலைக்கு எதிரே துறைகொண்ட சீனத்துக் கப்பலின் மேல் தளத்திலிருந்து முதலில் இளங்குமரனைப் பார்த்தவர் நகைவேழம்பர்தான். அவருடைய ஒற்றைக் கண்ணில் தென்பட்டபோது இளங்குமரன் நீலநாகரை வணங்கி விடைபெற்றுக் கொண்டிருந்தான்.

"நாம் ஒன்றைத் தேடிக் கொண்டு வந்தால் தேடி வராத வேறு காரியங்களும் அதே வழியில் எளிதாக வந்து மாட்டிக் கொள்கின்றன ஐயா! அதோ பாருங்கள்..."—என்று கூறிப் பெருநிதிச் செல்வருக்கு அந்தக் காட்சியைக் காட்டினார் நகைவேழம்பர்.

"என்னுடைய இரண்டு கண்கள் பார்க்கத் தவறி விடுவதைக் கூட உம்முடைய ஒரு கண்ணால் நீர் சில சமயங்களில் பார்த்து விடுகிறீர்" - என்று அதைக் கண்டுகொண்டே நகைவேழம்பருக்குப் பாராட்டு வழங்கினார் பெருநிதிச் செல்வர். இவர்கள் இருவரும் இவ்வாறு பார்த்துப் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்தக் கப்பலின் ஊழியர்கள் பெரிய படகு ஒன்றில் பண்டகசாலைக்குக் கொண்டு போவதற்காகக் கற்பூரத்தை இறக்கிக் குவித்துக்கொண்டிருந்தார்கள். இடமகன்று குழிந்த படகின் உட்புறம் ஓலைப் பாய்களை விரித்துக் குவிக்கப்பட்ட கற்பூரம் அந்தப் பகுதியெல்லாம் மணத்தைப் பரப்பியது. சீனத்துக் கப்பலில் இருந்து பணியாளர்கள் கூடை கூடையாக எடுத்துக் கொடுத்த கற்பூரத்தைத் துறைமுகத்துப் பண்டகசாலை ஊழியர்கள் நால்வர் படகில் இருந்து வாங்கிக் குவித்துக் கொண்டிருந்த அந்த நிலையில் துறையின் மற்றொரு பகுதியில் இளங்குமரன் முதலியவர்களை ஏற்றிக் கொண்ட கப்பல் புறப்பட்டு விட்டதைக் கண்டு விட்ட பெருநிதிச் செல்வர் நகைவேழம்பரிடம் ஏதோ சைகை செய்தார். உடனே நகைவேழம்பர் பரபரப்போடு கீழிறங்கித் தங்கள் படகுக்குள் சென்றார். சீனர்களும், சோனகர்களுமாகிய சில முரட்டுக் கப்பல் ஊழியர்களையும் ஏற்றிக் கொண்டு குவித்த கற்பூரத்தைப் பண்டகசாலையில் கொண்டு போய் இறக்கவும் விடாமல் அப்படியே புறப்பட்டு விட்டார் நகைவேழம்பர். முன்னால் போகும் மணிபல்லவத்துக் கப்பலைப் பின் தொடர வேண்டும் என்றும் அதே சமயத்தில் இன்னும் சிறிது தொலைவு சென்று கரை மறைகிற வரை தாங்கள் அந்தக் கப்பலைத் துரத்துவது போல் அதிலிருப்பவர்களுக்குத் தெரியலாகாதென்றும் படகைச் செலுத்துகிறவனுக்குக் கட்டளை யிட்டிருந்தார் நகைவேழம்பர். தற்செயலாகச் செல்லுகிற படகுபோலவே அந்தக் கப்பலை நெருங்காமல் விலகியபடியே பின்தொடர்ந்து கொண்டிருந்தது கற்பூரப் படகு. இதனால் வளநாடுடையாரும், அவர் இளங்குமரனை அழைத்துக் கொண்டு சென்ற கப்பல் மீகாமனும் முதலிலேயே இந்தப் படகைக் கண்டிருந்தும் அவ்வளவாக இதன்மேற் கவனம் செலுத்தவில்லை. சந்தேகமும் படவில்லை.

'ஏதோ படகில் சிறு வணிகர்கள் பொருள் ஏற்றிக் கொண்டு செல்கிறார்கள்' என்று நினைத்து விட்டு விட்டார்கள்.

கரை மறைந்து தனிமையான நடுக்கடலுக்கு வந்த பின்புதான் நகைவேழம்பர் தம்முடைய சுய ரூபத்தைக் காட்டினார். முன்னால் செல்லும் கப்பலை நெருங்கித் துரத்துமாறு படகு செலுத்துகிறவனுக்கு ஆணையிட்டார். அருகில் நெருங்கியதும் தீப் பந்தங்களைக் கொளுத்தி அந்தக் கப்பலில் எறிய வேண்டுமென்றும் தம்முடன் இருந்த முரட்டு ஊழியர்களுக்கு அவசரம் அவசரமாக உத்தரவிட்டார்.

கப்பலின்மேலே தீப்பந்தங்களை எறிய வேண்டுமென்ற அந்த உத்தரவைக் கேட்டவுடனே படகோட்டி பதறிப் போய் ஏதோ சொல்ல வாய் திறந்தான். ஏற்கெனவே அவன் பாய்மரப் படகை வேகமாகச் செலுத்தவில்லை என்று அவன் மேல் அளவற்ற கோபத்தோடிருந்த நகைவேழம்பர் இப்போது அவன் தன்னிடம் பேச வந்ததையே விரும்பாதவராக, "வாயை மூடு! உன் பேச்சு யாருக்கு வேண்டும்? காரியத்தைக் கவனி...."-என்று இரைந்து அவனை அடக்கி விட்டார். அவன் தான் கூற வந்த மிக முக்கியமான விஷயத்தைச் சொல்ல முடியாமல் அடங்கிப்போய்விட்டான். தீக்கடை கோல்களைக் கடைந்து விரைவாய்ப் பந்தங்களைக் கொளுத்தவும் தொடங்கி விட்டார்கள் ஊழியர்கள். கப்பலில் இருந்தவர்கள் தங்களை நோக்கி வேலை ஓங்குவதையும் நகைவேழம்பர் கவனித்தார். உடனே தீப் பந்தங்களை எறியத் தொடங்கும்படி உத்தரவு பிறந்தது. கப்பலை நோக்கிப் பந்தங்கள் பாய்ந்து பறந்தன. அப்போதிருந்த ஆத்திரத்தில் நகைவேழம்பர் முன் விளைவு, பின் விளைவைச் சிந்திக்கிற நிதானத்தை முற்றிலும் இழந்திருந்தார். ஏறக்குறைய அடிமைகளுக்குச் சமமான அந்த ஊழியர்களும் அவர் கட்டளை யிட்டதைச் செயலாக்க முனைந்தார்களே ஒழிய அந்தக் கட்டளைக்குக் கீழ்ப் பணிந்து செயல்படுவதால் வரும் விளைவுகளை நினைக்கவில்லை. அடிமைகளா யிருப்ப

டிசம்பர் 11 முதல்
தினசரி 3 காட்சிகள்

மிட்லண்டில்
(ஏர் கண்டிஷன்டு)



**மனிதன்
இதுவரை
செய்யாத
மகோன்னத
தீரச்செயல்கள்**

**பெண்
இதுவரை
செய்யாத
மகோன்னத
தியாகங்கள்**

திலீப் குமார் - வைஜயந்திமாலா
நாஸிர் கான் நடித்த

கங்கா ஜமுனா

(சிடிஸன் பிலிம்ஸ் வெளியீடு)
டெக்னிக் கலர் படம்

சங்கீதம்
நௌஷத்

இப்பொழுது நடைபெறுகிறது
பெங்களூர்... **கல்பனா**
மைசூர்... **ஒலிம்பியா**
மங்களூர்... **பிரபாத்**

டைரக்ஷன்
நிதின் போஸ்

...வினியோகஸ்தர்கள்...
மதராஸ், தென்னாடு, கேரளா, மைசூர் ஸ்டேட், பெல்லாரி உள்பட
மான்ட்ரே பிக்சர்ஸ், காந்தி நகர்... பெங்களூர்-9.

Arts & Co.

"PAAPS"



கள்ளிக்கோட்டை காலஞ்சென்ற வெங்கிட்டராமய்யர் (அத்தான் அவர்களின் புதல்வன் சிரஞ்சீவி V. வைத்தியநாதன், (I. C. and B. I., Bangalore) அவர்களுக்கும் கள்ளிக்கோட்டை லேட் ராஸ்பகதூர் S. ராமகிருஷ்ணய்யர் அவர்களின் பெத்தியும் M. R. அனந்த நாராயணய்யர் (மதுரை) அவர்களின் புதல்வியுமான சௌபாக்கியவதி M. A. லலிதா (லில்லி) வுக்கும் சமீபத்தில் திருப்பரங்குன்ற மயில் மண்டபத்தில் திருமணம் வெகு விமரிசையாக நடைபெற்றது. வாழ்க மணமக்கள்!

வர்களுக்கு 'நாம் அடிமைப் பட்டிருக்கிறோம்' என்று நினைப்பதற்கே நேரமும் சுதந்திரமும் இல்லாதபோது மற்ற விளைவுகளை நினைக்க நேரம் ஏது? அந்தக் கூட்டத்தில் அடிமை யல்லாதவனாகிய படகோட்டி மட்டும் ஒரு கணம் பின் விளைவை நினைத்து நகைவேழம்பரை எச்சரிப்பதற்கு வாய் திறந்தான். அவருடைய கூக்குரலையும் பயமுறுத்தலையும் கண்டு 'நமக்கு ஏன் வம்பு?'—என்று அவனும் அடங்கிப் போய்விட்டான். இளங்குமரனை ஒடுக்கி அடக்கி இல்லாமற் செய்துவிடும் முயற்சியில் இரண்டு மூன்று முறை தாம் தோற்றுப் போய்ப் பெருநிதிச் செல்வருக்கு முன் தலை குனிந்து நின்ற சமயங்களை இப்போது நினைத்துக் கொண்டு விட்டார் நகைவேழம்பர். அப்படித் தலை குனிந்து தான் நிற்க நேர்ந்த சமயங்களில் புழுவைப் பார்ப்பதுபோல் பெருநிதிச் செல்வர் தன்னை அலட்சியமாகப் பார்த்த பார்வைகளும் நினைவுக்கு வந்து அவரைக் கொலை வெறியில் முறுகச் செய்தன. செய்வதன் விளைவை நினையாமற் செயற்பட்டார் அவர். இளங்குமரனைக் கப்பலோடு கடலில் கவிழ்த்து மூழ்கச் செய்து விட்டு அந்த வெற்றியோடு பெருநிதிச் செல்வருக்கு முன் போய் நிற்கவேண்டுமென்ற ஒரே ஆசை தான் அவருக்கு இப்போது இருந்தது.

3-கடலில் கவிழ்ந்த நம்பிக்கைகள்

நீரத்திக் கொண்டு வந்த படகில் இருப்பவர்கள் தீப்பந்தங்களைக் கொளுத்தித் தங்கள் கப்பலின் மேல் எரியும் அளவுக்குத் தாக்குதல் வளர்ந்து விட்டதைக் கண்டும் அமைதியாகக் கைகட்டிக் கொண்டு நிற்கும் இளங்குமரனைப் பார்த்துப் பெரும் சீற்றமடைந்தார் வளநாடுடையார். "பகைவர்களுக்கு முன்னால் இரக்கம் காட்டுவது பேதைமை தம்பீ! பகைக்கு முன்னால் காட்ட வேண்டிய ஒரே அறம் பகைதான்: 'அருள் என்றால் விலை என்ன' என்று கேட்கிறவர்களிடம் நீ அருள் காட்டிப் பயனில்லை. உன் மனத்தை மாற்றிக் கொள். கைகளை உதறிக் கொண்டு இந்த எதிர்ப்பை ஏற்றுக்கொள்ள முன் வா! பறந்து வருகிற தீப்பந்தங்கள் இந்தக் கப்பலின் பாய்மரத்தில் பட்டு விடாதபடி மறித்துப் பிடி. நமது பாய் மரம் தீப்பட்டு எரிந்து போனால் பின்பு இந்தக் கப்பல் எந்தத் திசையில் போகுமென்று சொல்ல முடியாது. அநாதைக் கப்பலாகிக் கடலிலேயே கிடந்து அலைக் கழியும். நமது பாய்மரத்தைக் காப்பாற்று. நம்முடைய இந்தக் கப்பல் கவிழ்ந்தால் இதனோடு என்னுடைய எல்லா நம்பிக்கைகளுமே கவிழ்ந்து விடும்" - என்று ஆவேசத்தோடு கூறிய போது வளநாடுடையாரின் கண்கள் கோவைப் பழமாகச் சிவந்து விட்டன. அந்தக் கிழட்டு உடல் தாங்க முடியாத ஆவேசத்தைத் தாங்கிக் கொண்டிருப்பதுபோலத் தோன்றியது. அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. அந்தப் பாய் மரக் கப்பலின் மீகாமன் வளநாடுடையாருக்கு அருகில் வந்து கூறினான்: "பதறாதீர்கள், பெரியவரே! நமக்கு இது ஓர் எதிர்ப்பே அல்ல. கடலில் கவிழப் போவது அவர்களுடைய படகுதான். நம்முடைய பாய்மரம் தீப்பற்றுவதற்கு அவர்கள் இன்னும் பல தீப்பந்தங்களை வீசி எறிய வேண்டும். இப்போது நான் இங்கிருந்து ஒரே ஒரு சிறிய தீப்பந்தத்தை வீசி எறிந்தால் போதும். அந்தப் படகே குபீரென்று பற்றிக்கொண்டு எரியும்! அவர்களுடைய படகு எரிவதற்குத் தேவையான நெருப்பு அந்தப் படகுக்குள்ளேயே இருக்கிறது. சந்தேகமாயிருந்தால் இதோ பாருங்கள்.."—என்று இவ்வாறு கூறியபடியே ஒரு சிறிய தீப்பந்தத்தை எடுத்து அந்தப் படகில் ஓர் இலக்கைக் குறி வைத்து வீசினான் கப்பல் தலைவன். குறி தவறாமல் பாய்ந்தது அந்தத் தீப்பந்தம்.

என்ன அதிசயம்! கப்பல் தலைவனுடைய தீப்பந்தம் அந்த இடத்தை நெருங்கு முன்பே பட்டுக்குள் தீப்பற்றி விட்டாற் போலச் சோதிமயமான மாபெரும் தீ நாக்குகள் அந்தப் படகிலிருந்து எழுந்தன. அதிலிருந்து கற்பூர மணத்தைச் சுமந்த புகைச் சுருள்கள் எங்கும் பரவின. படகில் பற்றிய நெருப்புச் சுடருக்கு நடுவேயிருந்து, "அடபாவி! படகில் கற்பூரம் இருப்பதை முன்பே என்னிடம் சொல்லித் தொலைத்திருக்கக் கூடாதா?" என்று குரூரமாக ஒரு குரல் வினவியது. அந்தக் குரூரக் குரல் நகைவேழம்பருடையதென மணிமார்பன் புரிந்துகொண்டான். "ஐயா! அதைச் சொல்ல வந்தபோது தான் நீங்கள் என்னை அடக்கிப் பேச விடாமல் தடுத்து விட்டீர்களே!"—என்று ஏளனச் சிரிப்போடு ஒரு குரல் அதற்குப் பதிலும் கூறியது. நெருப்புக் கொழுந்துகளுக் கிடையே பயங்கரமாகத் தெரிந்த நகைவேழம்பருடைய

முகத்தைத் தங்கள் கப்பலின் மேல் தளத்திலிருந்தே பார்த்தான் மணிமார்பன். அந்தக் காட்சியைக் கண்டு பயத்தினால் உடல் சிலிர்த்தது அவனுக்கு. அருவருப்போடு அவன் தன் கண்களை மூடிக் கொண்டான். ''இந்த நெருப்பினால் அவியாமலிருக்கிற மற்றொரு கண்ணும் இவனுக்கு அவிந்து போய்விடும் போலிருக்கிறது...'' என்று சொல்லிக் கொண்டே வளநாடுடையார் தம் கையிலிருந்த வேலைப் படகுக்குள்ளிருந்த நகைவேழம்பரின் முகத்துக்குக் குறி வைத்தபோது மீகாமன் பாய்ந்து அவரைத் தடுத்துவிட்டான்.

''வேண்டாம்! புனிதமான புத்த பூர்ணிமைக்கு யாத்திரை செய்யும்போது இத்தகைய முரட்டுச் செயல்களைச் செய்வது நம்முடைய யாத்திரையின் தூய்மையைக் கெடுக்கும். அந்தப் படகில் கற்பூரம் குவித்திருப்பதை நான் முதலிலேயே பார்த்து விட்டேன். கூடிய வரை அவர்களை ஒன்றும் துன்புறுத்தாமலேயே திரும்பிப் போகச் செய்துவிடலாமென்றுதான் முதலில் நான் எண்ணினேன். அவர்கள் தீப்பந்தங்களை எறிந்து நமது பாய்மரத்தை எரிக்க முயல்வதைக் கண்ட பின்புதான் நானும் அவர்கள் படகில் உள்ள கற்பூரக் குவியலைக் கொண்டு அவர்களையே எரித்துவிட முன் வந்தேன். இவ்வளவு பழி வாங்கியது போதும். இனி அவர்களை விட்டுவிடுங்கள்'' என்று கப்பல் தலைவனாகிய மீகாமன் கூறியது நியாயமாகவே தோன்றியது. உடனே அப்போது மீகாமன் கூறியபடியே செய்தார் வளநாடுடையார். மறுபடியும் அவர்கள் கப்பல் மேல் தளத்திலிருந்து திரும்பிப் பார்த்தபோது அந்தப் படகு தீயோடு மூழ்கிக் கொண்டிருப்பதையும் அதிலிருந்தவர்கள் அலைகளில் தத்தளித்தபடியே நீந்திக் கொண்டிருப்பதையும் கண்டனர். அந்தப் பகுதிக் கடற் காற்றில் எல்லாம் கற்பூரம் கருகிய மணம் மணந்து கொண்டிருந்தது.

''கடல் தெய்வத்துக்குக் கற்பூர ஆரத்தி எடுத்து முடித்தாயிற்று, பதுமை! ஐயோ பாவம்! தங்கள் படகு நிறையக் கற்பூரத்தைக் குவித்துக் கொண்டு அடுத்தவர்கள் கப்பலில் தீப்பந்தங்களை எறியத் துணிந்த அறியாமையை இவர்கள் எங்கே கற்றுக் கொண்டார்களோ? 'தன்வினை தன்னைச் சுடும்' என்பார்களே அந்தப் பழமொழிதான் இப்போது எனக்கு நினைவு வருகிறது பதுமை!''— என்று தனியே தன் மனைவியிடம் கூறிக் கொண்டிருந்தான் மணிமார்பன்.

''முதல் முறை இந்திர விழாவுக்கு வந்திருந்தபோது ஏதோ ஒரு நாள் இரவில் உங்களைப் புலிக்கூண்டில் தள்ளிக் கொன்றுவிட முயன்றதாகச் சொன்னீர்களே; அந்த ஒற்றைக் கண் மனிதர் தானா இவர்? அம்மம்மா! இந்த முகத்தைப் பார்த்தாலே இன்னும் பத்து நாளைக்குத் தூக்கத்தில் எல்லாம் கெட்ட சொப்பனம் காணும்போலிருக்கிறதே'' என்று பயத்தில் தன் கயல் விழிகள் அகன்று விரிந்திடப் பேசினாள் மணிமார்பனுடைய மனைவி பதுமை.

''ஆமாம்! ஆமாம்! ஒரு கண் இல்லாத இந்தப் பாழ் முகத்தைப் பார்த்துத் தொலைக்கிற போதெல்லாம் அப்படி. ஒவ்வொரு முறை பார்த்தவுடனும் ஒரு புண்ணிய தீர்த்தத்தில் போய் மூழ்கி விட்டு வந்துதான் அந்தப் பாவத்தைப் போக்கிக் கொள்ள வேண்டும் பதுமை! சித்திரக் கலையில் எப்போதும் ஒரு தத்துவம் நிலையானதாக உண்டு. பார்க்கவும், நினைக்கவும் அழகான முகங்கள், அழகான பொருள்கள்—தோற்றங்கள், சூழ்நிலைகள் கிடைத்தால்-சைத்திரிகன் படைப்பிலும் வரைவதிலும் அதே அழகு பிரதிபலிக்கும் என்பார்கள். பாவமே கண்திறந்து பார்ப்பது போன்ற இப்படிப்பட்ட குரூர முகங்களையே தினம் தினம் பார்த்துக் கொண்டிருந்தால் அழகு என்கிற நளின குணமே நம் நினைப்புக்குள் வராது விலகிப் போய் விடும், பதுமை!''

''பாவம்! நாம் மணிபல்லவத்துக்குப் புறப்பட்டுப் போய்க்கொண்டிருக்கிற இந்தக் கப்பலையே நெருப்பு மூட்டி எரியச் செய்து கவிழ்த்து விடலாம் என்ற கெட்ட எண்ணத்தோடு தேடி வந்து அவர் தானே கவிழ்ந்து போய் விட்டார்...''

''அவர் மட்டும் கவிழ்ந்து போகவில்லை பதுமை! அவருடைய நம்பிக்கைகளும் இதுவரை அவருக்கு நம்பிக்கையளித்துத் தூண்டிக்கொண்டு வருகிறவருடைய எல்லா நம்பிக்கைகளும் கற்பூரத்தோடு சேர்ந்தே எரிந்து போய்க் கடலில் கவிழ்ந்து விட்டன. பதுமை! ஆனைக்கு ஒரு காலம் வந்தால் பூனைக்கும் ஒரு காலம் வரும் என்று சொல்வார்களே; அது இன்றுதான் என்வரையில் மெய்யாயிற்று. பட்டினப் பாக்கத்துப் பெருமாளிகையில் இந்தப் பயங்கர மனிதருடைய மேற்பார்வையில் நான் கொடுமைப்படுத்தப் பட்ட நாட்கள் என் வாழ்விலேயே இனி என்றும் வர முடியாத துரதிர்ஷ்டம் நிறைந்தவை. அந்தத் துரதிர்ஷ்டம் நிறைந்த நாட்களில் இந்தக் கொலைகார மனிதரை என்னென்ன வெல்லாமோ செய்துவிட வேண்டும் என்று என் கைகள் துடித்தது

பாரதி கலா மன்றம் (Regd.) பம்பாய்

நூல் நிலையம் மற்றும் கட்டிட நிதிக்காக

சிவாஜி நாடக மன்றம் அளிக்கும்

நாடக விழா

தென்னிந்திய நாடகமேடை, திரைப்பட தலைசிறந்த நடிகர்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன்

மற்றும்

ஓ. ஏ. கே. தேவர், எம். ஆர் சந்தானம், கே. வி. சீனிவாசன்
தாம்பரம் லலிதா, காமாக்ஷி, மற்றும் சீதாலக்ஷ்மி
உள்பட 115 சிறந்த நடிக, நடிகையர் நடிக்கிறார்கள்

டைரக்ஷன் சக்தி கிருஷ்ணசுவாமி

இசை: கே. சுப்ரமண்யம், ரத்னமாலா, எஸ். பிரேமா, ரமணன் & குமார்

இதுவரை கண்டிராத இரு புதிய நாடகங்களுக்கென்றே விசேஷமாகத் தயாரித்த கண்கவர் உடைகள். பிரமிக்கும் காட்சிகள். நவ-நவமான ஒலி. ஒளி அமைப்பு

1-12-61 வெள்ளி இரவு 8 மணி
2-12-61 சனி இரவு 8 மணி } **நாக நந்தி** சரித்திர நாடகம்

3-12-61 ஞாயிறு இரவு 7 மணி
4-12-61 திங்கள் இரவு 8 மணி } **பகல் நிலா** சமூக நாடகம்

5-12-61 செவ்வாய் இரவு 8 மணி & 6-12-61 புதன் இரவு 8 மணி

வீரபாண்டிய கட்டபொம்மன்

இடம்: காஸ்மோபாலிட்டன் ஸ்போர்ட்ஸ் கிளப் மைதானம்
பிளாங்க் ரோடு (கிங்ஸ் சர்க்கிள் ரயில்வே பாலத்தின் அருகில்), பம்பாய்-19

கட்டணம்	டோனர் (2 Adults & 1 Child)	பேட்ரன் (2 Adults & 1 Child)	பேட்ரன் (Single)	முதல் வகுப்பு	இரண்டாம் வகுப்பு	காலரி
சீஸன்:	ரூ. 100	ரூ. 60	ரூ. 30	ரூ. 12	ரூ. 9	ரூ. 7
தினசரி:	ரூ. —	—	15	5	4	3

டிசம்பர் 1 மகாராஷ்டிர ராஜ்ய முதன்மந்திரி ஸ்ரீ ஒய். பி. சவான் அவர்கள் நாடக விழாவைத் தொடங்கி வைப்பார்கள் ★ டிசம்பர் 2 மத்திய சர்க்கார் கலை, விஞ்ஞான ஆராய்ச்சி மந்திரி புரொபஸர் ஹுமாயூன் கபீர் அவர்கள் ★ டிசம்பர் 3 மத்திய சர்க்கார் செய்தி, விளம்பர இலாகா மந்திரி ஸ்ரீ பி. வி. கேஸ்கர் அவர்கள் ★ டிசம்பர் 4 மத்திய சர்க்கார் போக்குவரத்து தபால் இலாகா மந்திரி டாக்டர் பி. சுப்பராயன் அவர்கள் ★ டிசம்பர் 5 மகாராஷ்டிர ராஜ்ய கவர்னர் ஸ்ரீ ஸ்ரீப்ரகாசா அவர்கள் ★ டிசம்பர் 6 மகாராஷ்டிர சமூக நல மந்திரி டாக்டர் டி. ஆர். நரவணே ஆகியோர்கள் பிரதம விருந்தினர்களாக விழாவில் கலந்து கொள்ளுகிறார்கள்

தொண்டர்களிடம் அல்லது பம்பாய்-19, மாதுங்கா, பிராமண்வாடா ரோடு, மோடி மிருதியிலுள்ள மன்றம் ஆபீஸில் (போன்: 60865): மாதுங்கா (C. Rly.) P. O. அருகில் உள்ள ஸ்ரீ வெங்கடேஸ்வரா ஸ்டோர்ஸ்: மாதுங்கா ஸ்ரீ நட்வர்லால் கோவிந்த ஜுவேரி, ஜுவெல்லர்ஸ்: செம்பூர் வெங்கடேஸ்வரா லஞ்ச் ஹோம்: மேற்கு அந்தேரி, ஸ்ரீராம்நகர், ஸ்ரீராம் கோ-ஆபரேடிவ் கன்ஸ்யூமர்ஸ் கிரெடிட் சொஸைட்டி ஆகிய இடங்களில் முன்னதாகவே வேண்டிய டிக்கட்டுகள் பெற்றுக்கொள்ளலாம்

26-11-61 ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணியிலிருந்து பந்தலில் போஷகர், ஆதரவாளர் வகுப்புகளுக்குரிய டிக்கெட்டுகள் பதிவு செய்யப்படும்.

நாடகத்திற்குப் பின்பு செம்பூர், காட்கோபர், அந்தேரி, பம்பாய் சென்ட்ரல் கொலாபா ஆகிய இடங்களுக்கு ஸ்பெஷல் பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன

உண்டு! இரத்தம் கொதித்ததும் உண்டு. ஆனால் அப்போது என் கைகள் இவ்வளவு வலிமையற்றவையாக இருந்தன.''

''இப்போது மட்டும் என்னவாம்? சித்திரக்காரர்களுக்குக் கைகள் விரல்கள் மனம் எல்லாமே எப்போதும் மென்மையானவையாகத்தானே இருக்க வேண்டும்?''

''அப்படி யல்ல, பதுமை! அன்றிருந்ததை விட இன்று நான் அதிகமான பலத்தைப் பெற்றிருக்கிறேன். அன்று என்னுடைய இரண்டு கைகளின் வலிமைதான் எனக்கு உண்டு. இன்றோ நான்கு கைகளின் வலிமைக்கு நான் உரிமையாளன்.''

''எப்படி?''

''எப்படியா? இதோ இந்தப் பூங்கைகளும் சேர்ந்து என் கைகளில் புதியனவாக இப்போது பிணைக்கப் பட்டிருக்கின்றன. இவற்றுக்காகவும் சேர்த்து நான் பொறுப்பு அடைந்திருக்கிறேன்''—என்று சொல்லிப் பதுமையின் வளை குலுங்கும் பெண்மைக் கரங்களைத் தன்னுடைய மென்மைக் கரங்களால் பற்றினான் ஓவியன் மணிமார்பன்.

''ஏற்கெனவே மென்மையான கைகளிலே இன்னும் இரண்டு மெல்லிய கரங்கள் வந்து சேர்வதால் வலிமை கூடுவதற்கு வழி ஏது?''

''வழி இருக்கிறது! உன்னைப்போல் மெய்யான அன்பைச் செலுத்துகிற அழகு வாய்ந்த மங்கல மனைவி ஒருத்தியே தன் கணவனுக்கு ஆயிரம் யானைகளின் பலத்தைத் தர முடியும், பதுமை!''

கணவனுடைய புகழ்ச்சியைக் கேட்டுப் பதுமை நாணிக் கண் புதைத்தாள். குனிந்த தலை நிமிராமல் கடலைப் பார்த்துக் கொண்டே கணவனை ஒரு கேள்வி கேட்டாள் பதுமை.

''ஒரு பெண்ணின் அழகும் மங்கலமுமே உங்களைப் பலசாலியாக்கி யிருப்பதாக நீங்கள் ஒப்புக் கொள்கிறீர்களே. பூம்புகார் நகரம் முழுவதும் தேடினாலும் கிடைக்காத இரண்டு பேரழகிகளின் அழகிய கைகளைப் புறக்கணிக்கிறவருக்கு அந்தப் புறக்கணிப்பால் நான்கு கைகளின் வலிமை யல்லவா கிடைக்காமல் வீணாகப் போகிறது?''

''நீ யாரைப் பற்றிச் சொல்கிறாய், பதுமை?''

''அதோ அந்தக் கோடியில் நின்று கொண்டு உச்சி வானத்தில் கதிரவனின் ஒளியைப் பார்த்துக் கொண்டிருக்கிறாரே அவரைப் பற்றிச் சொல்கிறேன்''—என்று கப்பல் தளத்தின் மற்றொரு கோடியில் நின்று கொண்டிருந்த இளங்குமரனைக் காண்பித்தாள் பதுமை. அப்போது அவள் இதழ்களில் குறும்புப் புன்னகை முகிழ்த்தது. மணிமார்பன் தனது வலது கையால் அவள் முகத்தை நிமிர்த்தி அந்த மதிமுகத்தின் கண்களில் வண்டு பறப்பது போல் சுழன்ற குறுகுறுப்பைப் பார்த்துக் கொண்டே அவளைக் கேட்டான்:—

''பதுமை! உலகத்தில் அத்தனை குறும்புகளும் பெண்களாகிய உங்கள் பேச்சிலிருந்துதான் கிளைத்திருக்க வேண்டும். இதில் சந்தேகமே இல்லை. நீ ஒப்புக் கொள்கிறாயா இதை?''

''ஏன் அப்படி?''

''ஏனா? நான் எதையோ சொல்லத் தொடங்கினால் நீ எப்படியோ கொண்டு வந்து முடிக்கிறாய், பதுமை! பற்பல ஆறுகளுக்கு நீர் அளிக்கும் ஒரே மலையைப்போல் இளங்குமரன் தன்னுடைய பார்வையால் பேச்சால், நினைப்பால் பலருக்கு வலிமையை அளிக்கிறவர். முல்லையும் சுரமஞ்சரியும் அவரைப் பற்றி நினைப்பதனாலேயே தங்கள் அழகை வளர்த்துக் கொள்ள முடியும். தன்னைச் சேர்கின்ற கைகளுக்குத் தானே வலிமையளிக்கவல்ல அந்தப் பொற்கரங்கள் மற்றவர்களுடைய கைகளுக்கு ஆசைப் படவேண்டியது அநாவசியம்! அவருடைய கைகள் ஆசைப்படுகிறவை அல்ல. ஆசைப்படச் செய்கிறவை!''

''நீங்கள் எப்போதுமே உங்கள் நண்பருக்காக—தவறு தவறு...உங்கள் குருவிற்காக விட்டுக் கொடுக்காமல் பேசுகிறீர்கள்...''

''நீ மட்டும் என்னவாம்! உங்கள் பெண் இனத்துக்காக விட்டுக் கொடுக்காமல் பேசுகிறாயே?''

பதுமை சிரித்தாள். சித்திரத்தில் தீட்டமுடியாத அந்தச் சிரிப்பின் நளினத்தில் தானே தூரிகையாகிக் குழைந்து இணைந்தான் மணிமார்பன். அவள் தன் முகத்தை மீண்டும் கடலின் பக்கமாகத் திருப்பிக் கொண்டாள். இருந்தாற்போலிருந்து, ''அதோ...அங்கே பாருங்கள்...'' என்று பயத்தினால் முகம் வெளிறியபடி பதுமை சுட்டிக் காட்டிய திசையில் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தான் மணிமார்பன். அலைகளில் மிதக்கும் மரக் கட்டையொன்றின் மேலே சாய்ந்து படுத்தாற்போல் பற்றிக் கொண்டு செல்லும் மனித உருவம் ஒன்றைக் கண்டான். ஒரே ஒரு கணம் அந்த உருவம் அவர்களுடைய கப்பலின் பக்கமாக முகத்தைத் திருப்பியபோது ''அவர் தான்! அவரேதான்'' என்ற குரல் பதுமையின் இதழ்களிலிருந்து பயத்தோடு ஒலித்தது. (தொடரும்)



ஆங்கிலத்தில்தான் ஷேக்ஸ்பியர் நாடகங்கள் எழுதினாரென்றாலும் அவரது நாடகங்கள் அகில உலகப் புகழ் பெற்று விட்டன; சுவை ததும்பும் எத்தனையோ நாடகங்கள் தோன்றுவதற்கு வழி நூல்களாக அமைந்து விட்டன. ஷேக்ஸ்பியர் எடுத்தாளாத கற்பனையோ, காட்சியோ, கருத்தோ இல்லை என்றே கூறலாம். இவை தவிர, அவரது நாடகங்களில் இழையோடி நிற்கும் அரிய மனிதப் பண்புகள், நீதிகள், இதய தாபங்கள் ஆகியவெல்லாம் சேர்ந்துதான் அவருக்கு உலகப் பிரசித்தியைத் தேடித் தந்தன. காதலில் வெற்றி, தோல்வி ஆகிய இரண்டு கோணங்களையும் அதி அற்புதமாகக் கையாண்டு பல நாடகங்களைப் புனைந்திருக்கிறார் ஷேக்ஸ்பியர். மனித இதயங்களில் பொங்கும் ஆசாபாசங்களையும், மனித வாழ்வில் நேரும் ஆசாபங்கங்களையும் தம் மனக் கண்ணால் கண்டு அவற்றையே தமது நாடகங்களின் ஆதார சுருதியாக அமைத்திருக்கிறார். ஆகையினால்தான் மனித இதயங்களின் பிரதிபலிப்பை அவை அப்படியே எடுத்துக் காட்டுகின்றன. நடித்துப் பார்க்க வேண்டிய நல்ல நாடகங்களாக அவை அமைந்ததுமல்லாமல் படித்துப் பார்த்துப் பயனடைய வேண்டிய கருத்துப் பொதிந்த காவிய நாடகங்களாகவும் அமைந்து விட்டன.

ஷேக்ஸ்பியரின் நாடகங்களில் பெரும்பான்மையும் படமாக்கப்பட்டு விட்டன; அவற்றுள் ''மாக்பெத்'' ஏற்கெனவே ஒரு முறை வெள்ளித் திரையில் வெளிவந்து விட்டது. மீண்டும் ஒரு முறை ''மாக்பெத்'' வண்ணப் படமாகத் தயாரிக்கப்பட்டு வந்திருக்கிறது. பழங்கால நாடகங்களைச் சுவை குன்றாமல் திரைப் படமாக்குவது சுலபமான காரியமல்ல. எத்தனையோ ஆண்டுகளாக ஷேக்ஸ்பியரின் நாடகப் பாத்திரங்கள் கோடானு கோடி மக்கள் உள்ளங்களில் அழியாத ஓவியங்களாக இடம் பெற்று விட்டன. எல்லாரும் பாராட்டும் விதத்தில் அதே பாத்திரங்களைச் சினிமாவில் புகுத்துவது மிக மிக அருமையான காரியம். இந்த அரிய காரியத்தைச் சரியானபடி சாதித்திருக்கிறார் டைரக்டர் ஜார்ஜ் ஷீபார்ஸ்.

''பேராசை பெரு நஷ்டம்'' என்னும் பழமொழிக்கு விளக்கமாக 'மாக்பெத்' நாடகத்தைக் கொள்ளலாம்; ''ஆசையே துக்கத்தின் வித்து'' என்ற பகவான் புத்தரது பொன்மொழியும் இந்நாடகத்துக்குப் பொருத்தமானதுதான்.

நார்வேப் போர்க் களத்தில் வெற்றி பெற்று வாகை சூடித் திரும்புகிறான் ஸ்காத்லாந்தின் சேனாதிபதி மாக்பெத். அப்போது வழியிலேயே மூன்று சூனியக்காரிகள் குறுக்கிட்டு, ''வாழ்க! நீ விரைவில் இந்நாட்டு மன்னனாவாய்!'' என்று வாழ்த்துகிறார்கள். மாக்பெத்துடன் வந்த இன்னொரு சேனைத் தலைவனான பாங்கோவைப் பார்த்து, ''நீ மன்னனாகாவிட்டாலும் உன் மக்கள் ஸ்காத்லாந்து நாட்டின் அரசுரிமையைப் பெறுவார்கள்!'' என்று கூறிவிட்டு வான வீதியில் மறைந்து விடுகின்றனர். ஆனால் மாக்பெத்தின் மனத்தில் அவர்கள் கூறியது மறைந்து விடவில்லை. அரசுரிமையைப் பெறும் ஆசை வெறி உண்டாகி விடுகிறது.

தன் வீட்டுக்கு விருந்தாளியாக வந்து தங்கியிருந்த மன்னன் டங்கனையே கொன்று விடும் அளவுக்குத் துணிந்துவிடுகிறான். அவன் மனைவியும் அந்தப் பயங்கர வெறிக்குத் துணை நிற்கிறாள். மன்னனைக் கொன்று அந்தப் பழியை அவனது மெய்காப்பாளர்கள் மீது சுமத்தி

விடுகிறான் மாக்பெத். பிறகு தன்னுடைய துணைவனை பாங்கோவையும் தீர்த்துவிடுகிறான். ஆனால் மாக்பெத்தும் அவன் மனைவியும் மன அமைதியை இழந்து சதா அவதியுறுகின்றனர். மன்னனைக் , கொன்று குருதிக் கறை படிந்த கரங்களைத்தான் அவர்களால் கழுவ முடிந்ததே தவிர, நெஞ்சுணர்ந்த குற்றத்தினால் மாசடைந்த உள்ளங்களைக் கழுவ முடியவில்லை. மாக்பெத்தின் மனைவி மனச்சாட்சியின் உறுத்தல் தாங்காமல் உயிர் துறக்கிறாள்; தன்னால் படுகொலைசெய்யப்பட்ட நண்பன் பாங்கோவின் ஆவி உருவத்தை அடிக்கடி அரண்மனையில் பார்த்து நடுநடுங்கி அலறுகிறான் மாக்பெத்.

இறுதியில், மாக்பெத்தின் கண்ணில் படாமல் வெளியேறித் தப்பிய பாங்கோவின் மகனும், மன்னனின் மகனும் பெரும் படையுடன் வந்து அவனை வீழ்த்துகின்றனர். இறந்த மன்னனின் மகன் அரசை ஏற்கிறான்.

மாரீஸ் இவான்ஸ் மாக்பெத்தாக வருகிறார். ஷேக்ஸ்பியரின் நாடக பாத்திரத்தை நன்கு உணர்ந்து நடிக்கும் ஆற்றல் பெற்றவர். கோபம், பயம், மனச்சாட்சியின் போராட்டம், வீரம், அலட்சியம் ஆகிய உணர்ச்சிகளெல்லாம் அவர் முகத்தில் அியற்புதமாக வெளிப்படுகின்றன. மன உளைச்சல் தாங்காமல், அவர் தமக்குள் பேசிக்கொள்ளும் வார்த்தைகள் உயிர்த் துடிப்போடு உணர்ச்சியும் கலந்து ஒலிக்கின்றன.

ஜூடித் ஆண்டர்ஸன் மாக்பெத்தின் மனைவியாக வருகிறாள். கணவனுக்குத் தைரியமூட்டிக் கொலை புரியத் துணை செய்த பிறகு மனச்சாட்சியின் துடிப்புக்குப் பதில் சொல்ல முடியாமல் தவித்து இறந்த பிறகும் ஜூடித் ஆண்டர்ஸனின் நடிப்பில் உயிர் இருக்கிறது.

படத்தின் மற்றப் பாத்திரங்களும் குறை சொல்லுவதற்கு இடமில்லாமல் நடித்திருக்கிறார்கள்.

ஒன்பதாயிரத்துச் சொச்சம் அடிகளில் ஒப்பற்ற கருத்துள்ள அருமையானதொரு படத்தைக் காண முடிவது மகிழ்ச்சிக்குரிய விஷயம்தானே!

மாக்பெத்தின் பழங்காலத்து அரண்மனையும், அதன் அலங்காரங்களும் பல நூற்றுண்டுகளுக்கு முன்பிருந்த ஷேக்ஸ்பியரின் காலத்துக்கே நம்மை அழைத்துச் செல்கின்றன.

ஒருவனுக்கு அரியணையில் அமரும் ஆசையினால் ஏற்பட்ட அல்லல்களையும், விளைவுகளையும் வைத்துக் கொண்டு ஷேக்ஸ்பியர் 'மாக்பெத்' என்னும் மகத்தான நாடகத்தை எழுதியிருக்கிறார். காதல் இல்லை; வில்லன் இல்லை; வேறு விசேஷமான 'சஸ்பென்ஸ்'ம் இல்லை. ஆனால் கதை இருக்கிறது; கருத்து இருக்கிறது; நடிப்பு இருக்கிறது; பாத்திரங்களின் உயிர்த் துடிப்பு இருக்கிறது. இன்னும் வேறு என்னதான் வேண்டும்?



காந்தன்



வேலுத் தம்பி தளவாய்

வெள்ளையர் ஆட்சி இந்த நாட்டில் வஞ்சகமாகப் பரவிய காலத்தில், வஞ்சினம் கொண்டு, வீறு பெற்று எழுந்து போராடி வீர மரணம் எய்திய வீர திலகர்கள் எல்லாப் பகுதிகளிலும் இருந்திருக்கிறார்கள். வீர பாண்டியக் கட்டபொம்மன், மருது சகோதரர்கள், ஜான்ஸி ராணி — இத்தகைய வீரத் தியாகிகளின் பரம்பரையில் வந்தவர் தான் திருவிதாங்கூரில் வலிய சர்வாதிகாரியாக (1801 முதல், 1809 வரையில்) விளங்கிய வேலுத்தம்பி தளவாய்.

1798-ல் பட்டத்துக்கு வந்த பால ராம வர்மா இளைஞர்; பொறுப்புணர்ச்சி குறைந்தவர்; கொச்சியைச் சேர்ந்த ஜயந்தன் சங்கரன் நம்பூதிரி எப்படியோ வலிய சர்வாதிகாரி (திவான்) பதவியைப் பற்றிக்கொண்டு, பல அக்கிரமங்கள் செய்கிறான்.

இந்த நிலையில்தான் நாஞ்சில் நாட்டுப் பெருங்குடி மகனும், கல்குளம் படாகையில் தாசில்தாராக இருந்த வருமான வேலுத்தம்பிக்கும் வரி விதித்தான் நம்பூதிரி. தன்மான உணர்ச்சியும், தேச பக்தியும் மிகுந்த வேலுத்தம்பி அதை எதிர்க்கிறார். தொடர்ந்து அரசாங்கப் பதவியும், பிறகு, வலிய சர்வாதிகாரியாகும் வாய்ப்பும் அவருக்குக் கிடைக்கின்றன. நேர்மையான நிர்வாகம் சீர்ப்படுகிறது. நல்லவருக்குப் பகைவர் நிறைய ஏற்படுவார்கள். எடுப்பார் கைப்பிள்ளையான அரசர், ஆத்திரத்தில் வேலுத் தம்பியைக் கைது செய்து கொன்றுவிடவும் உத்தரவிடுகிறான். ஆங்கிலேயக் கம்பெனியின் பிரதிநிதியான ரெஸிடெண்டு மெக்காலேயின் குறுக்கீட்டால், அந்த உத்தரவு ரத்தாகிறது. பதிலாகக் கப்பத்தொகை நாலு லட்சத்திலிருந்து எட்டு லட்சமாக உயர்கிறது. மேலும், வேலுத்தம்பி எந்தக் காரியத்தையும் மெக்காலேயின் அனுமதி இல்லாமல் செய்யக் கூடாது என்றும் நிபந்தனை விதிக்கப்படுகிறது.

கம்பெனிப் படையின் தாக்குதல் தீவிரமாகவே வேலுத்தம்பி நாட்டைக் காக்க, திவான் பதவியைத் துறந்து புரட்சிக்கெல்லாம் தம்மையே பொறுப்பாக்கிக் கொண்டு விலகிக் கொள்கிறார். அவர் யோசனைப்படியே அரசர் ஆங்கிலேயருடன் சமாதான உடன்படிக்கை செய்து கொள்கிறார். வேலுத்தம்பியும் அவர் தம்பி பத்மநாபனும் பகவதி கோவிலில் புகலடைகிறார்கள். வெள்ளைப் பட்டாளம் கோவிலைச் சூழ்ந்து கொண்டதும், மாற்றான் கையால் சாவதை விடத் தம் தம்பி கையாலேயே மடிவது மேல் என்று தீர்மானித்த வேலுத்தம்பி கட்டாரியைத் தாமே மார்பில் பாய்ச்சிக் கொண்டு கடைசி வேண்டுகோளாக, "என் தலையை எதிரி வெட்டிக் கொண்டு போய், நாட்டு மக்களுக்கு எதிரே அவமானப்படுத்த வேண்டாம், தம்பி! நீயே என் கழுத்தை வெட்டி விடு!" என்று மன்றாடுகிறார், வேலுத்தம்பி. கதறிக்கொண்டே அந்த வீரத் தியாகியின் விருப்பத்தை நிறைவேற்றுகிறான் தம்பி பத்மநாபன்.



இந்தக் கதையை 'யுனைடெட் ஆர்ட்ஸ் அஸோஸியேஷ'னைச் சேர்ந்தவர்கள் தங்கள் குழுவின் முதல் ஆண்டு விழாவை யொட்டி மலையாள நாடகமாக நடித்திருக்கிறார்கள். நவம்பர் 12-ந் தேதி ஸெயிண்ட் மேரிஸ் மண்டபத்தில் நாடகம் நடைபெற்றது. ஏ. எஸ். பி. ஐயர் தலைமை வகித்து, வேலுத் தம்பியையும் நாடக மன்றத்தாரையும் பாராட்டினார்.

அமெச்சூர் நாடகத்தில் எதிர்பார்க்கக் கூடிய குறைநிறைகளை இந்த நாடகத்தில் கண்டாலும், கதையின் தரத்துக்கு ஏற்பச் சிறப்பாகவே நாடகம் அமைந்திருந்தது. பல இடங்களில் பேச்சு காதில் விழவில்லை. முக்கிய பாத்திரங்களில் வேலுத்தம்பி அவர் சகோதரி வள்ளியம்மா, தாய் விமலாம்பிகை, ரெஸிடெண்ட் மெக்காலே, மாத்து தரகன் இவர்கள் தாங்கள் வெறும் வேஷதாரிகள் அல்ல என்பதைக் கடைசி வரையிலும் நிரூபித்ததைப் பாராட்ட வேண்டும். தாணுபிள்ளையைக் கப்பய்யரைக் கோமாளியாகவும் அற்பனாகவும் காட்டி விருப்பது நாடகத்துக்கு ஒரு திருஷ்டி பரிகாரம் என்பது மட்டுமல்ல, வரலாற்றுக்கும் இழுக்கு. நல்ல கதை; நல்லமுயற்சி.

— சௌரி.



அனேக விதமான கிரீம்களையும், லோஷன்களையும் பற்றி அலட்டிக்கொண்டு ஆத்திரப்படுவானேன்? பல நன்மைகளை பயக்கும் நிவியா கிரீமினுல் உங்கள் சருமத்தை பாதுகாக்க முயற்சியுங்கள்
உங்கள் வதனத்திற்கு
நிவியாவில் உங்கள் சருமத்திற்குள் ஊடுருவிச் செல்லும், அருமையான, இதமளிக்கும் யூஸெரிட் என்ற எண்ணெய் சேர்க்கப்பட்டுள்ளது. சருமத்தை பளபளப்பாகவும் ... மாசற்றதாகவும்...எழிலடையச் செய்கிறது.
உங்கள் கரங்களுக்கு
சோப்பினாலும், தண்ணீராலும் கழுவப்பட்டுவிடும் இயற்கையான எண்ணெய்ப் பசையை உங்கள் சருமத்திற்கு நிரம்பவும் அளிக்கிறது...சரும வெடிப்புகளுக்கும், சொரசொரப்பிற்கும் சமனமளிக்கிறது...உங்கள் கரங்களை பசுமையாகவும், மிருதுவாகவும் விளங்கச் செய்கிறது.
குழந்தைகளுக்கு
நிவியா புண்களுக்கு இதமளிக்கிறது...குழந்தைகளின் இளஞ் சருமத்தை பராமரித்து பக்குவமாக பாதுகாக்கிறது.
சருமத்திற்கு நிச்சயமாக வேண்டுவது நிவியா
NIVEA
creme

வாழும் வர்ணனைகள்

12. சுகி சுப்பிரமணியம்

'சரக்கு மாஸ்டர்

இருபது வருஷங்களுக்கு முந்திய பலகாரக் கடை. இடமோ திருநெல்வேலி ஜங்ஷனில், சென்னை பிராட்வே என்று சொல்லக் கூடிய சிந்துபூந்துறைக்குப் பிரியும் திருப்பம்.

உள்ளே கொழுந்து விட்டுக் கணகணவென்று காளவாய் போல எரியும் எண்ணெய்ச் சட்டி அடுப்பில் கரண்டியும் கையுமாகத் திருவாளர் காந்திமதிநாத பிள்ளைவாள் கடலை மாவும் தாழுமாக யுத்தம் புரிந்து கொண்டிருந்தார். 'சலீர் சலீர்' எனப் பலகாரம் வெந்து வாசனையைப் பரப்பிக் கொண்டிருந்தது. மழைக் காற்றுக்கும் மந்தாரமான அந்தப் பொழுதுக்கும் அது பசியைக் கிளறிற்று. திருவாளர் கருமத்தில் கண்ணுயிருந்தாரே தவிர வந்து நின்ற காரிகையைக் கவனிக்கவில்லை. அவர் கிளறுவதையும், பலகாரம் தேய்ப்பதையும், வெந்ததை எண்ணெய் வடிப்பதையும் பார்த்தபடியே சிலையாக நின்றாள் அவள். பிறர் தூக்கவே அச்சப்படும் பித்தளைத் தவலையை அநாயாசமாகத் தோளில் தூக்கிக் கொண்டு முண்டு முண்டான தேகக் கட்டோடு கடந்து உள்ளே நுழைந்தாள் அக்கடையின் ஒரே சிப்பந்தி செந்தில் விநாயகம்...............

''எலே என்ன தண்ணி தூக்கினயா? இல்லே உன்னைத்தான் தண்ணி தூக்குதா மூதி?'' என்று குரல் கொடுத்தார் திருவாளர் காந்திமதிநாத பிள்ளை. அவர் பேச்சுத்தான் கேட்டதே தவிரக் கண்ணும் கருத்தும் எண்ணெய்ச் சட்டி மீது குமிழி விட்டுக்கொண்டு வேகும் பலகாரத்தின் மீது இருந்தது.............. காந்திமதிநாத பிள்ளைவாள் பல வருஷங்களாகக் கடலை எண்ணெய், கடலை மாவு இவைகளின் தயவால் உடலைப் பிழிந்து அடுப்பிலே பட்சணங்களோடு தாமும் வெந்து கருகினவர்.

கலெக்டரின் மனைவி

வைரமும் பொன்னும் இழைத்த மேனி. தகதகவெனப் பட்டுப் புடவை; முழங்கை வரை குலுங்கும் தங்க வளையல்கள்; பதவிக்காரன் மனைவிக்குரிய அதிகாரப் பார்வை. கிராமத்திலே பிறந்து வளர்ந்த — சென்ற வருஷம் வரை வீட்டுக்கும் தொழுவத்துக்கும், தண்ணீர் தூக்கிய கிராமப் பெண்ணா அவள்? அசல் பட்டணத்து நாகரிகம், மினுக்கு, தளுக்கு, படாடோபம் நிறைந்த பெண்ணாகி விட்டாள். நாகரிக நங்கையாக இரட்டை மாட்டு வண்டியில் காட்சி தந்தாள்.

அப்பா, அம்மா, தம்பி, தங்கை முதலானவர்களுக்காக முன் வண்டியில் என்னென்னவோ பொருள்கள்; பழக் கூடைகள். ஏதோ ராணி வனவாசம் செய்ய வந்ததைப் போல அக் கிராமத்துக்கு வந்தாள் கமலா. எல்லாருக்கும் தகப்பனார், தாயார் உள்பட அவளிடம் பக்தி, மரியாதை, அன்பு, பயமும்கூட. பெற்று வளர்த்த மகள் என்ற பாசத்தைவிடக் கலெக்டர் மனைவி என்ற அச்சமே அவர்களுக்கு இருந்தது.

'சண்முக விலாசம்'

அன்று கடைசி வெள்ளிக்கிழமை. திருச்செந்தூரில் காவடிக்கும் பாத்குடத்திற்கும் கேட்கவா வேண்டும்? உச்சி நேரத்தில்தான் பக்தர்களின் ஆர்ப்பாட்டமும் ஆவேசமும் எங்கும் தாண்டவம் புரியும். 'வேல் வேல்' என்ற நாத அலைகள் மணல் மேட்டில் ஏறும் போது ஒலிக்கத் தொடங்கினால் அப்படியே ஸ்தாயி ஸ்தாயியாக மேலே போய் ஒரே பக்தி வெறி உச்சியில்தான் கொடி கட்டிப் பறக்கும்.



''முருகா முருகா!'' என்று ஆணும் பெண்ணுமாகக் காவடிகளின் பின்னாலும், பாத்குடங்களின் பின்னாலும் பண்டாரத்தின் சங்கநாதத்தோடு போட்டி போட்டுக் கொண்டு மெய்ம் மறந்து சொல்லும் அந்தச் சொற்கள் கோவிலின் நாலு புறமும் கடல் அலைகள்

போல் கோஷித்துக் கொண்டிருக்கும். சாயரட்சை வரும்போதுதான் ஒருவாறு அடங்கும். பக்தியால் உள்ளத்தின் பாரமும், கடற் காற்றினால் தேகத்தின் சிரமமும் குறைந்துபோன 'சண்முக விலாச'த்தில் இருக்கும் பெரியோர்களைப் பார்த்தால் அது பூலோக சொர்க்கம் என்று சொல்லத் தோன்றும்.

தாமிரவர்ணித் தண்ணீர்

ஆற்றில் இறங்கி அழகுபடக் குளிக்கத் தெரியாத பட்டணவாசிகள் மாற்று வேஷ்டியைக் கட்டிக் கொள்ளத் தெரியாத அப்பாவிகள் எத்தனை பேர் இருக்கிறார்கள்? தண்ணீரை அனுபவிக்கத் தெரியாத அப்பாவிகள், பாவிகள் என்பது என் கூற்று.

தண்ணீரில் ஆற்றுத் தண்ணீர்தான் உசத்தி. அதன் சுகம் தனி. அலாதியானது. அதிலும் எங்களூர் நதி தாமிரவர்ணி. அடடா. பிரம்மானந்தம்; பேரானந்தம், நித்தியானந்தம். பாரதியின் வாக்குப்படி தமிழ் கண்ட பொருநை நதி. அந்நதி தீரத்தில் தமிழ் வளத்தைப் போலவே நீர் வளமும் ஓடுகிறது, சாடுகிறது. வளம் என்றதும் மற்ற நதிகளில் வருகிற வண்டலைச் சொல்லவில்லை. காசு செலவின்றிக் காஷாய வஸ்திரமாக்குகிற நதிகளைப்போலப் பொருநை நதித் தண்ணீர் இருக்குமா? இருக்காது. பளிங்கு என்றால் தாமிரவர்ணிச் சீமையில் தண்ணீருக்குத்தான் சொல்வார்கள்.

மலை இரவு

வெயில் அடிக்கும்போது பச்சையும் பசுமையுமாகக் கண்ணை மயக்கும் மரம் மட்டைகள், மர வளங்கள் அனைத்தையும் இரவில் பார்க்க வேண்டுமே! பேய்களின் ஊழிக் கூத்துக்குக் கால் பாவிய மாதிரி பயங்கரமாய்த் தோற்றுகின்றன. காற்றுக்கூட இனிமையை மறந்து உடலுக்குள்ளே உள்ள எலும்பிலே துளை போட ஊசி குத்துகிறது. மலைக்காட்டில் திமர் திமர் என்று பழந்தின்னி வௌவால்கள் கிரீச்சிடும் சப்தம் கேட்கிறது. ஒன்றை ஒன்று அடித்துத் தின்னும் பிராணிகளின் உறுமலும், அடிபட்ட பிராணிகளின் பரிதாபக் கூக்குரலும் கேட்கின்றன. வானத்துத் தாரகைகள் அனைத்தும் குற்றால மலையிலே இறங்கியது போல் பசுமையான பட்டாம் பூச்சிகள். அவை இருளுக்கும் ஒளிக்குமாகக் கண்ணாமூச்சியாடின.

பச்சை மணம்

இருவரும் வயல் வரப்பிலே நடந்து போகிறார்கள். அங்கங்கே வயல்களில் களை பிடுங்கும் பள்ளியர்களின் குரவை. பசுமை நிறைந்த அந்த வயல்கள் மனத்துக்கு இன்பம் தந்தன. அவை காற்றிலே புரளும் போது லட்சுமியின் கூந்தல் அலைமோதுவதாகக் காண்பான். சின்னஞ் சிறு மீன்கள் நீந்திச் செல்வது லட்சுமியின் விழிகளை நினைப்பூட்டும்.. கிழக்கே உதய சூரியன் பனை மரங்களுக்கு அப்பால் உதயமாகிறான். காலை வெய்யிலும் மேல் பக்கத்துக் குளத்தின் காற்றும் அவனை எங்கோ தூக்கிச் சென்றன. நட்சத்திரங்களைப் பறித்துச் சென்ற வைகறைப் போது இப்போது இளஞ் சூரிய ஒளியாய் ஓடும் வாய்க்கால்களிலே ஒளி கிறுக்கி வந்தது.

மாணவர் திறன்

சிவாஜிக்கும் எலிக்குமுள்ள தொந்தமும், மலை எலி என்றால் என்னவென்றும், திப்பு ஹைதர் படைத்திறமையும் மழைக்காலத்தில் கடிகார பெண்டுலத்தின் திருகு ஆணியை மேலே தள்ளுவதா, கீழே தள்ளுவதா என்றெல்லாம் சொல்லி என் காதுகளைக் கொப்புளம் செய்ய முடியாது. எனக்கு இஷ்டமான கதைகளையும், கட்டுரையையும், நெஞ்சையள்ளும் காவியங்களையும் படிக்கலாம்; அவை பரீட்சைப் பேப்பராக மாறி என் அறியாமைத் திவட்டிகளாகச் சுடர் விடப் போவதில்லை. படித்ததைப் படிக்கும்போதே வரிக்கு வரி வார்த்தைக்கு வார்த்தை மறக்க உரிமையுண்டு. பெரிய பெரிய கதாசிரியர்களின் கதையைப் படிக்காமல் இருக்கும் சுதந்திரம் இப்போது இருக்கிறது; விழுந்து விழுந்து படிக்கவும் செய்வேன். தற்காலச் சிறு கதைகளைப் படிக்கவும் படிக்காமலும் இருக்கும் திறமை என்னைச் சார்ந்தது. இறந்துபோன சம்பவங்களை, சரித்திரங்களை என் மூளையில் திணிக்க முடியாது.

ஓசி வீரர்

ராஜு ஓட்டலுக்குள் போனால் முதலில் டிக்காக்ஷன் கேட்பான். பிறகு பால்; அப்புறம் சர்க்கரை கேட்க மாட்டான். இன்னும் கொஞ்சம் டிக்காக்ஷனோடு பால்; அப்பால் பாலோடு டிக்காக்ஷன்! இப்படி மாற்றி மாற்றித் தனக்கு அலுப்பு ஏற்பட்டால்தான் நிறுத்துவான். சர்க்கரைக்கு அவன் வருவதற்குள் கடைக்காரன் சண்டைக்குத் தயாராக இருப்பான். ராஜு உடனே சண்டை போடப் பைத்தியமா என்ன? சர்க்கரை வாங்கும் வரை இனிப்பாகப் பேசிவிட்டு, பின்னால்தான் சப்பாத்தி (வம்பு) இழுக்க ஆரம்பிப்பான். அவ்வளவு யோக்கியன்.





வட்டமேஜை

திரையில் ஊசி

க்ஷயரோகத்தைத் தடுக்க பி. ஸி. ஜி. என்னும் மருந்தை ஊசி குத்துவது தவறு என்பதை மருத்துவ நிபுணர்கள் பலர் பல்வேறு கோணங்களிலிருந்து விளக்கிக் கூறியும், அரசாங்கம் மீண்டும் அந்தத் திட்டத்தை தீவிரப் படுத்த முயற்சி செய்கிறது. இதை யொட்டி பி. ஸி. ஜி.யின் தரத்தை டாக்குமெண்டரி படத்தின் மூலமும் பிரசாரம் செய்து வருகிறார்கள் என்பதைச் சமீபத்தில் தெரிந்து கொண்டேன். பி. ஸி. ஜி. போடுவது தவறு என்று கூறுவது அதில் கண்டிக்கப்படுகிறது. இது வன்மையாக எதிர்க்க வேண்டிய விஷயமாகும்.

செவ்வாய்ப் பேட்டை
9—11—61
கோ. இறைமணி

பாலர் சோதனை

ஆரம்பப் பள்ளிக்கான அரசாங்க விதிகளில் கீழ் வகுப்புக்களில் எல்லா ஆரம்பப் பள்ளிகளிலும் 'கிண்டர்கார்ட்டன்' முறையிலேயே போதனை நடைபெற வேண்டும் என்றும் 'கிண்டர் கார்ட்டன்' ஆசிரியர்கள் ஹையர் கிரேடு ஆசிரியர்களாகப் பாவிக்கப்பட வேண்டும் என்றும் கண்டிருக்கிறது. ஆனால் அங்கீகரிக்கப்பட்ட எந்தத் தனியார்ப் பள்ளிகளிலும், கார்ப்பொரேஷன் பள்ளிகளிலும், முனிசிபல் பஞ்சாயத்துப் பள்ளிகளிலும் கிண்டர் கார்ட்டன் ஆசிரியர்கள் நியமிக்கப்படுவது கிடையாது. அம்முறையில் போதனை நடப்பதும் இல்லை. ஏன்?

சென்னை
11—11—61
எஸ். கமலம்

கல்கி

சந்தா விகிதம்

	ஒரு வருஷம் ரூ. ந பை	ஆறு மாதம் ரூ. ந பை
இந்தியா இலங்கை	15—00	7—50
பர்மா மலேயா வெளி நாடுகள்	18—00	9—00

தனிப் பிரதி விலை 30 நயா பைசா

சந்தா தொகை முன்னதாக அனுப்பப்பட வேண்டும். வி.பி.பி. கிடையாது. இலங்கை நேயர்கள் மட்டும் வி.பி.பி. மூலம் சந்தா தொகையைச் செலுத்தலாம்.

மானேஜர், கல்கி காரியாலயம், சென்னை-10

பிரியப் பிரியமில்லையா ?

சென்ற 12-11-61 கல்கி இதழில் வெளியாகியுள்ள 'மந்திரியின் மாறுபாடான உவமை' என்ற எனது கடிதத்தில் 'பீஷ்மர், துரோணர் முதலியோர் கௌரவர்களை விட்டுப் பிரியாததற்குக் காரணம் செஞ்சோற்றுக் கடன்'' என்றிருப்பதற்குப் பதில் 'பிரிவதற்குக் காரணம்' என்று பிரசுரித்திருக்கிறீர்களே!

அகரம்
11—11—61
அ. ருக்மிணி

குறளின் குரல் கேளீரோ ?

பாரத நாட்டில் கடந்த பதினைந்து ஆண்டுகளாக நடைபெற்று வரும் க்ஷேமநல சர்க்காரின் 'சாதனை'களை எடை போட்டுப் பார்க்க வேண்டிய தருணம் வந்து விட்டது. 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன் கண்விடல்' என்ற குறளையும் நினைவுபடுத்திக் கொண்டு அடுத்த ஐந்தாண்டுகளில் இந்த நாட்டின் ஆட்சியை எந்தக் கட்சியிடம் ஒப்புவிக்க வேண்டும் என்பதை முடிவு கட்ட வேண்டிய சமயம் வந்து விட்டது. 'கடன் வாங்கிக் கல்யாணம்' என்று சொல்வதுண்டு. கல்யாணமும் நடக்காமல் கடனை மட்டும் வாங்கிக் குவித்து விட்டது காங்கிரஸ் சர்க்கார். நாட்டு நலனுக்குகந்த எந்தப் பணியையும் எம்முறையிலும் காங்கிரஸினால் செயலுக்குக் கொண்டு வர முடியாது என்பது இது ஒன்றிலிருந்தே தெளிவாகி விட்டது. எனவே, வினைத் திறனுள்ள சுதந்திரக் கட்சியிடம் பொறுப்பை அளிக்க வேண்டிய அவசியம் நெருங்கி விட்டது.

திருநெல்வேலி
11—11—61
டி. எஸ். நெல்லையப்பன்

கதர் விற்பனை : ஒரு விளக்கம்

சென்ற 29-10-61 கல்கி இதழின் வட்ட மேஜைப் பகுதியில் 'கதரிலும் போட்டி' என்னும் தலைப்பில் ஒரு கடிதம் பிரசுரிக்கப்பட்டிருந்தது. அது சம்பந்தமான விளக்கம் கீழே தரப்பட்டுள்ளது.

தமிழ் நாடு சர்வ சேவா சங்கம், கதர் கிராமத் தொழில் போர்டு, காந்தி ஆசிரமம், திருச்செங்கோடு காந்தி கிராமம், சென்னை நகர கதர் அபிவிருத்திக் கூட்டுறவு சங்கம் ஆகிய ஸ்தாபனங்கள் கதர் உற்பத்தியிலும் விற்பனையிலும் ஈடுபட்டுள்ளன. இவைகளின் நடவடிக்கைகளில் போட்டி மனப்பான்மையே கிடையாது. மேலே குறிப்பிட்டுள்ள ஸ்தாபனங்களின் விற்பனை நிலையம் உள்ள ஏதாவது ஊரில் மற்றொரு ஸ்தாபனம் விற்பனை நிலையத்தைத் திறக்க

வேண்டும் என்றால் அதைப் பரிசீலனை செய்ய 'சர்டிபிகேஷன் கமிட்டி' என ஒரு கமிட்டி உள்ளது. தமிழ் நாட்டில் இயங்கும் கதர் ஸ்தாபனங்கள் அனைத்தும் இந்தக் கமிட்டியில் அங்கம் வகிக்கின்றன. எந்த ஊரில் கதர் விற்பனை நிலையம் திறக்க வேண்டும் என்றாலும் இந்தக் கமிட்டியின் அங்கீகாரம் பெற்ற பின்பே திறக்கப்பட வேண்டும். அவ்வாறு அங்கீகாரம் பெற்றபின்பு திறக்கப்பட்ட விற்பனை நிலையங்களுள் மூசிரி கதர் கிராமத் தொழில் போர்டு விற்பனை நிலையமும் ஒன்று.

கதர் கிராமத் தொழில் போர்டு விற்பனை நிலையங்களில் விற்பனை செய்யப்படும் கதரின் தரத்தைப் பற்றி மேற்சொன்ன கடிதத்தில் குறை கூறப்பட்டுள்ளது. தரக் குறைவு என்றால் நிச்சயம் விற்பனை பாதிக்கப்படும். மாறாக விற்பனை அதிகரித்துக் கொண்டே வருகிறது என்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

சென்னை
6–11–61
காதி டைரக்டர்

கருத்துக்கு உகந்த மலர்

'கல்கி' தீபாவளி மலரைப் படித்துப் பார்த்து மகிழ்ந்தேன். அழகிய கவிதைகள். கருத்துப் பொதிந்த கதைகள். கலைச் சுவை மிக்க வண்ணச் சித்திரங்கள். இசை மணிகள், பிள்ளைத் தமிழ், காவியத் தோற்றுவாய் போன்ற சித்திரத் தொடர்கள் மலருக்கு விசேஷச் சிறப்பூட்டுகின்றன. பிள்ளைத் தமிழ் இலக்கியத்தைச் சித்திர உருவில் காண்பது மிகவும் ரசிக்கத்தக்கதாய் உள்ளது.

கலைநயம் கொண்ட அட்டைப்படத்தோடு கண்ணுக்கும், கருத்துக்கும் உகந்ததாய் அமைந்துள்ள கல்கி மலர் மிகவும் பாராட்டுதற்கு உரியது.

எழும்பூர்
10–11–61
ஆர். சூடாமணி

அச்சுப் பிறந்த பயன்

கல்கி மலர் நெடுகிலும் தெய்வமணம் கமழ்கிறது. கண்ணைக் கவருவதோடுமட்டுமின்றி நெஞ்சையுமள்ளும் உருவங்கள் காட்சி தருகின்றன. இலக்கியச் சேவையைவிட, சிற்ப சித்திரக் கலைக்குக் கல்கி 1961-ம் ஆண்டில் பெரிய சேவை செய்துள்ளது. பேச்சாளர்களும் பிரசங்கிகளும்செய்யமுடியாத அற்புதங்களை மணியமும், வினுவும் செய்துள்ளனர். தெய்வத்தின் அருள் முழுதும் மலரில் கண்டு ரசித்தேன். கோவில்களிலும் கோபுரங்களிலும் கண்ட காட்சியைக் கல்கிமலரிலும் காண முடிகிறது. அச்சுக்கலை, பிறந்த பயனை அடைந்து விட்டது.

சென்னை-4
6–11–61
சுகி சுப்பிரமணியன்

கலைக் கருவூலம்

'கல்கி' தீபாவளி மலர் கண்ணுக்கும் கருத்துக்கும் என்றும் இன்பம் பயக்கவல்லதொரு கலைக் கருவூலம். 'நடமாடும் தெய்வம்', பக்திமணம் கமழும் ஓவிய மலர். 'பிள்ளைத் தமிழ் அமுதம்', வாதாபி கலைமடல்' இரண்டும் வண்ண விந்தைகள். 'இசைமணிகள்', 'காவியமும் ஓவியமும்'—இந்தத் தொடர் சித்திரங்கள் அழகின் அணிவகுப்பு. கவியரங்கம் தமிழ்க் கவிதையின் மறுமலர்ச்சிக்குக் கட்டியம் கூறுகிறது. 'பொய்க்கால் குதிரையாட்டம்' சிந்தனையைத் தூண்டி விடும் சிறந்த எழுத்து. 'சேதாரம்', 'ரயில் தண்டவாளத்தில் ஓடும்', உனக்குப் புரியாது' மூன்று சிறுகதைகளும் நெஞ்சைத் தொட்டுத் தட்டியெழுப்பும் புது நடைப் படைப்புக்களாகச் சிறந்து விளங்குகின்றன.

திருப்பதி
13–11–61
அ. நடராஜன்

படிக்கவோ? பார்க்கவோ?

மலரைப் பார்க்கலாம் என்று புரட்டினால் படிக்கத் தோன்றியது; படிக்கலாம் என்று தொடங்கினால் பார்க்கத் தோன்றியது. புற அழகும், அக அழகும் கண்களுக்கும், உள்ளத்துக்கும் இன்பம் பயக்கின்றன.

மலர் முழுவதையும் பார்த்துப் படித்து முடித்து, உள்ள நிறைவுடன் இக் கடிதம் எழுதுகிறேன். நாம் ஓவியத் துறையிலும் இலக்கியத் துறையிலும் எவ்வளவு உயர்ந்துள்ளோம் என்பதைக் 'கல்கி' மலர் வெகு அழகாக நிரூபித்திருக்கிறது.

கும்பகோணம்
13–11–61
எம். வி. வெங்கட்ராம்

திருமூலர் தவமொழி

ராஜாஜி - சோமு

33

தியானமும் பக்தியும் வழிபாட்டு உருவம் எடுக்கும்பொழுது சில கிரியைகள் சிறிதாயினும் பெரிதாயினும் பூஜையில் அங்கமாகச் சேர்கின்றன. இதுவே மனத்தினால் மட்டும் செய்யும் தியானத்துக்கும் பூஜை வழிபாட்டுக்கும் உள்ள வேறுபாடு. திருமூலர் இறை வழிபாட்டின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார்.

புண்ணியம் செய்வார்க்குப்
பூஉண்டு நீர்உண்டு

வழிபாடு செய்வது நிலையான புண்ணியம். இதைச் செய்யும் எண்ணம் தோன்றுவது பெரும் பாக்கியம். அதனால் 'புண்ணியம் செய்வார்க்கு' என்றார் முனிவர். அந்த வழிபாட்டுக்கு வேண்டியன பூவும் தண்ணீருமே. அவை யாருக்கும் எப்போதும் எந்த இடத்திலும் கிடைக்கக் கூடியவை.

புண்ணியம் செய்வார்க்குப்
பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு
அருள்புரியா நிற்கும்

[அண்ணல் — இறைவன். அருள் புரியா நிற்கும்—அருள் புரிந்துகொண்டு நிற்பான். புரியா நிற்றல் என்றால் புரிந்து கொண்டு நிற்றல் என்று பொருள். இது ஒரு பழைய தமிழ் வழக்கு.]

எண்ணிலி பாவிகள்
எம்இறை ஈசனை
நண்ணறி யாமல்
நழுவுகின் றாரே

[எண்ணிலி பாவிகள்—எண்ண முடியாத அத்தனை கணக்கற்ற பாவிகள். நண்ணறியாமல்—நண்ணுவதற்கு அறியாமல். நண்ணுதல்—நெருங்குதல்.]

பாவத்தினால் அறியாமையடைந்து, இறைவனை எவ்வாறு எளிதில் நெருங்கலாம் என்பதை அறியாமல் நற்பேறு இன்றிக் கெடுகிறார்களே என்று முனிவர் வருந்துகிறார்.

'பூவும் தண்ணீரும்' என்றால் நித்திய வழிபாட்டுக்கு உரிய பொருள்களைச் சொல்ல வந்த மொழிகள். தினந்தோறும் மூர்த்தியை வழிபடுவதற்கு மிக எளிய சாதனங்கள் எங்கும் கிடைக்கின்றன. அப்படியிருந்தும் மக்கள் இந்த எளிய பூஜை மார்க்கத்தை உணராமல் தெய்வ அருளிழந்து நழுவிப் போகிறார்கள் என்பது முனிவரின் அனுதாபம். இதற்குக் காரணம் முன் ஜன்மத்தில் செய்த பாவம் என்பதைக் காட்டப் பாவிகள் என்கிறார். இந்த எளிய மார்க்கத்தை அனுசரிக்காமல் போவதால் பாவத்தில் மீண்டும் சிக்குவார்கள் என்கிற கருத்தும் பாட்டில் பொதிந்திருக்கிறது.

புண்ணியம் செய்வார்க்குப்
பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண்டு
அருள்புரியா நிற்கும்
எண்ணிலி பாவிகள்
எம்இறை ஈசனை
நண்ணறி யாமல்
நழுவுகின் றாரே

இந்த விஷயம் கீதை ஒன்பதாவது அத்தியாயம் 26-வது சுலோகத்திலும் சொல்லப்படுகிறது.

மூர்த்தியில் வைத்து வழிபடுகிற முறை இது. இனி இன்னொரு வழிபாட்டைச் சொல்லுகிறார். மூர்த்தி வழிபாட்டுக்குக் குன்றந்ததல்ல அந்த வழிபாடு.

படமாடக் கோயில்
பகவற்குஒன்று ஈயில்
நடமாடக் கோயில்
நம்பர்க்குஅங்கு ஆகா

[படமாடக் கோயில்—சிற்ப சித்திரங்கள் அமைந்த பெரிய கோயில். அங்கேயுள்ள பகவற்கு—பகவானுக்கு, இறைவனுக்கு. ஒன்று ஈயில்—நிவேதனமாக ஒன்று ஈந்தால். நடமாடக் கோயில்—நடமாட்டமுள்ள கோயிலான மனிதத் திருமேனி. நம்பர்க்கு—அடியார்களுக்கு. அங்கு ஆகா—அந்த நிவேதனம் அப்போது பயன்படாது.]

கோயிலிலே மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால், அது அப்படியே அடியார்களுக்குப் போய்ச் சேராது. ஆனால்,

நடமாடக் கோயில்
நம்பர்க்குஒன்று ஈயில்
படமாடக் கோயில்
பகவற்குஅது ஆமே

சற்பாத்திரம் பார்த்து ஏதேனும் சமர்ப்பித்தால், அவர்களுக்குப் பயன்படுவதோடு அது அப்படியே பகவானுக்கும் போய்ச் சேருகிறது.

முனிவருடைய கருத்து என்னவென்றால் சற்பாத்திரம் பார்த்துச் செய்யும் ஈகை கடவுள் வழிபாடே ஆகும். இதை வற்புறுத்துவதற்காக அதை மூர்த்தி பூஜையைவிட ஒரு படி உயர்த்தியே சொல்கிறார். இது ஓர் இலக்கிய உத்தி.

படமாடக் கோயில்
பகவற்கொன் றீயில்
நடமாடக் கோயில்
நம்பர்க்கங்கு ஆகா;
நடமாடக் கோயில்
நம்பர்க்கொன்று ஈயில்
படமாடக் கோயில்
பகவற்கது ஆமே

அத்தியாயம் முப்பத்திநான்கு

இரு பெண்களும் வாய் ஓயவில்லை. அப்படிப் பேசினார்கள், சிரித்தார்கள். பத்திரிகை, சங்கீதம், சினிமா, புடவை, துணி, இரண்டு பேருக்கும் பொதுவான பல செய்திகள், மோஸ்தர்கள்எல்லாம் அடிபட்டன. இவ்வளவையும் இப்பொழுதுதான் விவரம் தெரிந்த பையனைப் போல் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார் அனந்தசாமி.

இரண்டு பேரும் அழகு. மங்களப் பாட்டி லட்சணமான பெண்களை வர்ணிப்பதுபோல் படத்தில் எழுதிப் பார்க்கலாம். இருவரும் ஒரே உயரம். இருவரும் புத்திசாலிகள். எதைப் பார்த்தாலும் சொன்னாலும், கேட்டாலும், அந்தக்கணமே மனத்தில் பதித்துப் புருபுருவென்று இயங்கும் கூர்மையும், விழிப்பும் இருவர் கண்களிலும் மின்னின.

ஒரே உயரம்தான். ஆனால் சந்திராவின் உடலில் ஒரு பளபளப்பு கூடியிருந்தது. அவள் நல்ல வெள்ளைச் சிவப்பு. கைகள், விரல்கள் எல்லாம் நீளமாக உருண்டு திரண்டு அவளைப் பெரிய வடிவமாக எடுத்துக் காட்டின.

அந்தக் குடும்பத்துக்கு வளர்த்தி குறைவு. ராஜாங்கம் நடுத்தர உயரம், நடுத்தரக் கட்டு. அவர் மனைவி ஒடிந்து விழுகிறவள்.

ஒரே அழகு, புத்தி, கவர்ச்சி— ஆனால் இரு நாற்றுகளைப் பிடுங்கி, படுகையோரமாக ஒன்றையும், வீட்டுக் கொல்லையில் ஒன்றையும் நட்டதுபோலிருந்தது.

மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தார் அவர்.

இவ்வளவு சுறுசுறுப்புக்கும் கூர்மைக்குமிடையே சந்திராவின் பார்வையிலும் பேச்சிலும் ஓர் அமர்வும் இன்னதுதான் பேசப் போகிறோம் என்று தெரிந்து, பிறகு அதை வார்த்தையாக மாற்றுகிற உணர்வும் வெள்ளி மூடியைப்போல் ஆண்டு கொண்டிருந்தன.

அன்பே ஆரமுதே



சுப்புசாமி, நாகம்மாள் இவர்களைப் போல் பரந்து நெடிந்து வளரும் வகை. வசதியும் ஊட்டமும் ஒரு காரணம். அதைவிடக் குடும்பத்தின் இயற்கையான வளர்த்தி முந்திக் கொண்டு எடுப்பாகத் தெரிந்தது.

டொக்கி அதே உயரம்தான். ஆனால் பருவத்தின் பொலிவு மட்டுமே அந்த உயரம் முழுவதிலும் விரவியிருந்தது.


வெண் முகிலுக்குள் ஒளிந்தும் தோன்றியும் மெதுவாக ஊரும் நிலவாகப் பரவிற்று அவள் பேச்சு. டோக்கியின் நாக்கும் கண்ணும் 'ஜிவ் ஜிவ்'வென்று குதித்தன. துணி துவைக்கையில் வெயிலில் தெறிக்கும் சாரல்போல் வர்ணமும் ஜொலிப்புமாகத் துள்ளிப் பாய்ந்தன.

ஒன்றை விட்டு இன்னொன்றைப் பற்றிக் கொண்டானே ரங்கன்! எதற்கு? சந்திராவின் ஆழ்ந்த அமர்வைக் கண்டு மிரண்டுவிட்டானா? அவனுடைய வேகத்தையும் கட்டற்ற ஓட்டத்தையும் அது தன்னறியாமல் ஆண்டு விடும் என்று அஞ்சி விட்டானா! இல்லை, நின்று பொழியும் நிலவை விடச் சுள்ளென்று குத்தும் நீர்த்திவலைகளின் சில்லிப்புக்கும் மயிர்க் கூச்சுக்கும் வெறி கொண்டு அலைகிறானா!

ஆழ்ந்து ஓடிக்கொண்டிருந்த மனம் சட்டென்று கட்டைபோட்டு நின்றது.

எதற்காக இந்த அக்கறை, ஆராய்ச்சி எல்லாம்? நாம் யார்? காக்கைக்கு எத்தனை பல், ஆட்டுக்கு எத்தனை வயது என்பதுபோல இதென்ன அர்த்தமற்ற ஆராய்ச்சி! நமக்கும் இவர்களுக்கும் என்ன சம்பந்தம்! இவர்கள் யார்! எதற்காக இங்கு வந்து உட்கார்ந்திருக்கிறார்கள்!

நாலு நாட்கள் படுத்த படுக்கையில் கண்ணை மூடி ஆடாமல் அசையாமல் சிலையாக அமர்ந்து, மனத்தை அழித்து வெளியில் மிதக்கும் ஆனந்தம் வரத் தவறி விட்டது. ஏதோ பால்காரனைப் போல, வேலைக்காரனைப்போல, அதற்கே ஜுரம் வந்ததுபோல் நின்று விட்டது.



அதைப் பற்றி நாம் எந்தக் கவலையும் படவில்லை! இது என்ன?

எங்கேயோ விலகி நின்றார் அவர். இந்த ஒய்ச்சலும் வழி தெரியாமல் நிற்பதும் அவருக்குப் புதிதல்ல. பள்ளிப் படிப்பு முடிந்து கல்லூரியில் சேரும்பொழுது, தகப்பனார் அலைந்து திரிந்து சம்பாதித்துக் கொடுத்த இரண்டு வேலைகளை ஒப்புக் கொள்ளாமல் தயங்கிய பொழுது, கலியாணம் செய்து கொள்வதற்காகப் பெண்ணின் ஊருக்கே சென்று முதல்நாள் மாலை மிரண்டு பின் வாங்கியபொழுது, நிமாய்ஜி விட்டு விட்டுப் போய்விடுவாரோ என்று ரிஷிகேசம் வரையில் நிழலாகத் தொடர்ந்து

அலைந்தபொழுது பல சமயங்களில் அவர் இப்படி எதிரே மலை எழுந்தாற் போல நின்றிருக்கிறார். துறவையும் அன்பையும் கலந்து சாப்பிட்டுக் கொண்டே இந்தப் பட்டணத்தில் அலையும் பொழுதும் பழகும்பொழுதும் இப்படித் திடீர் திடீரென்று நின்றிருக்கிறார்.

இவ்வளவு தனித்து நின்ற பொழுதும் சந்திராவிடம் உள்ள பாசம் மட்டும் அவரை விடவில்லை. அம்மாவுக்கு அடுத்தபடியாக அந்தக் குழந்தையும் துறவைப் போட்டுத் துலங்கிய அவர் நெஞ்சில் திரௌபதியின் அட்சயப் பேலாவில் ஒட்டியிருந்த கீரைத் துளி போல் விடாமல் ஒட்டிக் கொண்டிருந்தது. ஆமாம். குழந்தைதான். அவள் ஏழெட்டு வயதுக் குழந்தையாக இருந்தது முதல் அவளைப் பார்த்துத் தூக்கி விளையாடி வந்திருக்கிறார். வேறு எந்தக் குழந்தையையும் அவர் அப்படித் தூக்கிக் கொஞ்சினதில்லை.

இவளுக்காகக் கரைந்து உருகின சமயத்தில் காசியின் வீட்டில் ரங்கனைப் பார்த்தது எங்கெங்கோ அவரை இழுத்துப் போயிருக்கிறது. ஏதோ சோதனை ஒன்று வடிவம் கொண்டு வந்தது போல் ருக்மிணி வந்த அதிசயம்.... அவ்ன் சொல்லைத் தட்ட முடியாத கூச்சம் வேறு. அவனை நினைக்கும்பொழுது....

இப்பொழுதுதான் ஆறி வாய் மூடி வருகிற காயத்தின் மீது பட்டு விட்டாற் போல் ஒரு நுட்பமான வலி....

ஒதுங்கி நின்றவர் மீண்டும் ஓடும் வெள்ளத்தில் கலந்து கொண்டார்.

சிறிது நேரம் அவர்கள் பேச்சைக் கவனிக்காத காது மீண்டும் கேட்டது. சந்திரா, அனந்தசாமி ஒரு நாள் சினிமாப் பார்த்துவிட்டு, "இரண்டு பேர்கள் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து பாடுகிறார்கள். பக்கத்தில் யாருமே இல்லை. ஆனால் பாட்டோடு வாத்தியம் கேட்கிறதே, எப்படி?" என்று கேட்டதைச் சொல்லிச் சிரித்துக் கொண்டிருந்தாள்.

"மாமா அந்தமாதிரி கேட்டபோது எனக்குக் கூட அவர் கேட்கிறது சரிதானே என்று தோன்றிற்று" என்றாள் சந்திரா.

"தேவலையா.... இன்னுமா ஜுரம் இருக்கு — எனக்கு நேத்திக்குத்தான் தெரியும்" என்று மாடிப் படியில் குரல் கேட்டது.

சந்திரா திகைத்து விழித்தாள்.

டொக்டரின் முகம் சிணுங்கிற்று.

"என்ன சார் உடம்பு?" என்று கத்திக் கொண்டே ரங்கன் உள்ளே வந்தான். உள் நிலை வரையில் வந்து விட்டான். சட்டென்று அவருக்கு முன்னால் இருந்த இருவரையும் பார்த்தான்.

"வாங்கோ" என்றார் அனந்தசாமி.

ரங்கன் பதில் பேசவில்லை. ஒன்றும் சொல்லாமல் அவன் நின்றது அவன் ஏதோ குமுறிக் கொண்டு தவிப்பது போல் அவர் காதுக்குப் பட்டது.

"ஜுரமாமே!"

"தேவலை...."

"தேவலையா, சரி. அதுதான் இப்படிப் போய்க் கொண்டிருந்தேன். எட்டிப் பார்த்து விட்டுப் போகலாம் என்று வந்தேன். அவசரம். பிறகு வருகிறேன்" என்று சொல்லி நகர்ந்தான்.

"என்ன வந்ததும் வராததுமா....!"

"இல்லை. அவசரம். போய்விட்டு வந்து விடுகிறேன்" என்று வேகமாக நடந்தான். மறைந்து விட்டான். எல்லாம் ஒரு கணத்துக்குள்!....

சந்திராவின் முகம் வதங்கி விட்டது. தலையைக் குனிந்து புடவைத் தலைப்பை விரலால் முறுக்கினாள். பெரிய கூட்டத்தைக் கூட்டி அத்தனை கண்களும் பார்க்க அவமானப்படுத்தியது போல, இகழப் பட்டது போல அவள் நசுங்கிச் சாவது தெரிந்தது.

வறட்டு, மூச்சுவிடமுடியாத, துன்பம் தரும்


இருமலிலிருந்து

விரைவாக , நிச்சயமாக

குணமளிக் கக்கூடிய வீட்டு மருந்து

Alembic **க்ளைகோடின்**

டெர்ப் வசாகா



GTV-590 EVEREST

உங்களுடைய அயல்நாட்டு வியாபார பிரச்னைகளுக்கு எங்களைக் கலந்து ஆலோசியுங்கள்

உங்கள் வியாபாரம் அல்லது வெளிநாட்டு பிரயாணம் ஆகியவைபற்றி ஏதாவது விசேஷ பிரச்னைகள் உள்ளனவா ?

அந்நிய நாடுகளின் நாணயம் அல்லது வரிகளைப் பற்றி விவரமாக அறிய விரும்புகிறீர்களா ?

அந்நிய மார்க்கெட்டுகளில் வியாபார வாய்ப்புகளைப்பற்றி குறிப்பிட்ட விவரங்கள் தேவையா ? ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா உங்கள் நன்மையை உத்தேசித்து, இலவசமாயும், யாதொரு நிர்ப்பந்தமுமின்றி இந்தக் கேள்விகளுக்கும் மற்றும் இதர கேள்விகளுக்கும் பதிலளிக்க, திறமைவாய்ந்த "இன்பர்மேஷன் ஸர்வீஸ்" ஒன்றை பெற்றிருக்கிறது.

உங்களுடைய அந்நிய நாட்டு வியாபார சம்பந்தமான தற்போதைய தொடர்புகளை விவரிக்கவும், புதிய தொடர்புகளை வளர்க்கவும் இதோ அரியதொரு வாய்ப்பு உள்ளது. உங்களுடைய கேள்விகள் தனிப்பட்ட முறையில் துரிதமாகக் கவனிக்கப்படும்.

இவ்விஷயங்களைப் பற்றி உங்கள் அருகிலிருக்கும் பாங்க் ஏஜெண்டிடம் கலந்து பேசவோ அல்லது விபரங்களுக்கு எங்களுக்கு எழுதவோ செய்யுங்கள்.



இந்தியாவெங்கும் உங்களுக்குச் சேவை புரியக் காத்திருக்கும் ஸ்டேட் பாங்கின் 909க்கு மேற்பட்ட ஆபீஸ்களில் ஒன்றான மௌண்ட் ரோடு மதராஸிலுள்ள கிளை ஆபீஸ்

ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா

இந்திய பாங்குகளில் மிகப் பெரியது

12 R

SISTA'S-SB. 12-TAM

''நான் இங்கே வந்திருக்கிறேனே இல்லையோ, அவரை வர வேண்டாம் என்று சொல்லி விட்டு! அதுதான் துரைக்குக் கோபம் — போய் விட்டார் போலிருக்கிறது'' என்று மௌனத்தைக் கலைத்தான் டொக்கி. குகையில் சிறு கௌளியின் சொல் பெரிதாக எதிரொலிப்பது போல் அவன் சொற்கள் உரத்துக் கேட்டன.

சந்திரா நிமிர்ந்து பார்த்தாள். டொக்கியைப் பார்த்தாள். அனந்தசாமியைப் பார்த்தாள்.

''ஆனால் இது புதுசு இல்லே. சுபாவமே அப்படித்தான் போலிருக்கிறது. வீட்டுக்குத்தான் வருகிறாரே! திடீரென்று வருவார். சரி, அப்புறம் வரேன் என்று கிளம்பி விடுவார். வேறு ஒருத்தரும் இருக்கப்படாது அவருக்கு. இவர் வரப்போகிறார்னு எப்பவும் வீடு ஒழிஞ்சா இருக்கும்? தெரிஞ்சவா வரத்தான் வருவா. மூன்றும் மனுஷாளைப் பார்த்ததுமே முள்ளு மேலே நிக்கறாப்பல நிற்பார். எப்படி ஓடலாம் என்று காத்துக் கொண்டு நிக்கறாப்பல இருக்கும். உடனே ஓடியும் விடுவார். ஞாபகம் இருக்கா! முதல் முதல்லே நீங்க அன்னிக்கு வந்த போது வந்து நின்று விட்டு ஓடினாரே.''

''ம்க்கும்....'' என்ற அனந்தசாமி சந்திராவைப் பார்த்துக் கொண்டிருந்தார். சந்திரா குழப்பமும் வியப்புமாக டொக்கி பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தாள்.

''சதா பறப்புத்தான். இந்தமாதிரி கால் ஒரு இடத்திலே நிற்காது. தரிக்காது. ஒரு காரியம் செய்யறபோது இன்னொரு காரியத்திலே நினைவு. சரி சரி சரின்னு அவசரம். மனசு அந்த அந்தக் காரியத்திலே இராது. 'ம்க்கும் ம்க்கும்' என்று கவனிக்காமல் தலையாட்டல். அலுத்துக்கறது — இல்லே?'' என்று கூறினான் டொக்கி.

''ஆமாம்'' — பதில் சொல்ல வேண்டுமே என்பதற்காக ஆமாம் போட்டுக் கொண்டே அனந்தசாமி சந்திராவைத்தான் பார்த்துக் கொண்டிருந்தார்.

சந்திரா அவரை ஒரு தடவை பார்த்தாள். இரண்டு விநாடிகள் பேசாமலிருந்தாள். உதட்டை இறுக்கிக்கொண்டாள்.

''உனக்குச் சொந்தக்காரரா?'' என்று டொக்கியைப் பார்த்துக் கேட்டாள்.

''சொந்தமில்லே. தெரிந்தவர்.''

''ரொம்பத் தெரிந்தவராக்கும்?''

''ஆமாம்.''

''அதானே கேட்டேன். எப்படி ஓடுவார், நிற்பார், தரிக்கமாட்டார் என்று அக்கக்காக அலசிச் சொல்கிறாயே? ரொம்பத் தெரிந்தவரானால்தானே இப்படிச் சொல்ல முடியும்?''



''ரொம்பத் தெரிந்தவர் என்றும் சொல்லி விட முடியாது. இப்ப தெரியாதவர் மாதிரி ஒரு வார்த்தை பேசாமல் பொட்டைச் சாரை போகிறாற் போல விர்ரென்று போனாரே, பார்த்தீர்களா? எப்ப வந்தே, எப்ப போகப் போறே? ஏதாவது கேட்கத் தோன்றுதே! அவ்வளவு ஆத்திரம்!''

''என்னத்துக்கு ஆத்திரம்?''

''நேற்றுச் சாயங்காலம் வீட்டுக்கு வந்திருந்தார். இந்த மாதிரி அனந்தசாமி மாமாவுக்கு உடம்பு ஜுரம் என்று சொன்னேன். நாலைந்து நாட்களுக்குத் தொந்தரவு செய்யாமலிருந்தால் நல்லதென்று சொன்னேன். சொல்லிவிட்டு நான் வந்திருக்கிறேனேல்லியோ, அந்தக் கோபம்...''

''நீ எதற்காக அப்படிச் சொல்ல வேண்டும்? நானும் நீயும் வந்து தொந்தரவு கொடுக்கிறாற் போல் அவரும் சற்று நேரம் கொடுத்து விட்டுப் போகட்டுமே என்று இருந்திருக்க வேண்டும்.''

''அதுக்காக முன்னே பின்னே பார்க்காதவர் மாதிரியே போகணுமா என்ன? இப்படி எடுத்ததற்கெல்லாம் முகத்தைத் தூக்கிக் கொண்டால்! ஏ அப்பா!'' என்றாள் டொக்கி.

''இப்பொழுதே இப்படி இருக்கிறது. கலியாணம்ஆகிவிட்டால் எப்படியோ?'' என்றார் அனந்தசாமி.

''பார்த்தீர்களா! அந்தப் பேச்சே வேண்டாம் என்று சொன்னேனா இல்லையா....?''

''உன்னைக் கலியாணம் பண்ணிக் கொண்டால் என்றா சொன்னேன்? பொதுவாகக் கலியாணம் ஆகிவிட்டால் என்றுதானே நான் சொன்னது.''

''அதுதானே பார்த்தேன். பண்ணிக் கொள்கிறவள் திண்டாடி விட்டுப் போகிறாள்....''

''என்ன மாமா இது! என்ன பூடகம் இது? இவளைத்தானே கலியாணம் பண்ணிக் கொள்ளப் போவதாகச் சொன்னீர்கள் முன்னால்?''

''சொன்னேன். அவள் பேசினதைப் பார்த்து மாற்றிக்கொண்டு விட்டேன்.''

''மறுபடியும் பார்த்தீர்களா?'' என்று உதட்டைக் குவித்தாள் டொக்கி.

''ஏன் இவரைக் கல்யாணம் பண்ணிக்கொண்டால் என்ன? கசக்கிறதா உனக்கு?'' என்றாள் சந்திரா.

''எனக்கு ஏதுக்குக் கலியாணம்?''

''எதுக்கா?''

''ஆமாம். ஆடுகிறதையும் பாடுகிறதையும் பார்த்து விட்டுக் கலியாணம் என்பார்கள். கலியாணம் ஆனதும் எல்லாவற்றையும் மூட்டை கட்டி வை. வீட்டோடு இரு. வாழைக்காய் பஜ்ஜி பண்ணு. பொரிச்ச ரசம் பண்ணு. வீட்டோடு அடைந்து கிட என்பார்கள்.''

''சரி, அப்படிச் சொல்லாமல் உன்னை இஷ்டப்படி இரு என்று சொன்னால்...?''

''யாரு இவரா? இப்பொழுதே தெரியவில்லையா இவர் சந்தம்?''

''இது பொய்க் கோபம். தெரியவில்லையா! ரொம்ப ஆசையாக இருந்தால் தான் இப்படிக் கோபம் வரும்'' என்றாள் சந்திரா.

''சரி, இந்தப் பேச்சை இதோடு நிறுத்திக் கொள்ளலாம். எனக்குக் கலியாணம் கிலியாணம் என்று பேசவே பிடிக்கவில்லை. எத்தனையோ சமாசாரம் இருக்கிறது பேச. வேறு வேலைகளும் இருக்கின்றன. கலியாணம் என்ன கலியாணம்?'' என்று முகத்தைச் சிணுங்கின டொக்கி, திரும்பி மேஜைமீதிருந்த ஒரு புத்தகத்தைப் புரட்ட ஆரம்பித்தாள்.

''அதெல்லாம் சரி, நீ அவள் கேட்டதற்குச் சரியாகப் பதில் சொல்லவில்லையே — உன்னைத்தான், டொக்கி!'' என்றார் அனந்தசாமி.

''என்ன?''

''நீ இஷ்டப்படி இருக்க அனுமதித்தாலும் அவரைக் கலியாணம் பண்ணிக் கொள்ள மாட்டாயா என்று கேட்கிறாளே சந்திரா.''

''நான் பண்ணிக் கொள்ள மாட்டேன்....''

''அதுதான் ஏன் என்று சொல்லேன்.''

''ஏன் என்ன ஏன்? அது என் இஷ்டம். பார்க்கும்படியா யிருக்கிறவர்கள் எல்லாரையும் கலியாணம் செய்து கொள்ள முடியுமா? இல்லை, உன் மேல் ஆசையாயிருக்கிறேன் என்று சொல்கிற எல்லாரையும் தான் பண்ணிக் கொண்டு விட முடியுமா?''

''ஓகோ, இரண்டு மூன்று பேர்கள் இவளைச் சுற்றிச் சுற்றி வருகிறாற் போலிருக்கிறது மாமா!'' என்று சிரிக்கிறாற்போல் சொன்னாள் சந்திரா.

''ஆமாம்!'' என்றாள் டொக்கி. புருவம் இலேசாகச் சுருங்கியது. இதயத்தின் மிருதுவான தசைகள் குத்தல் எடுத்து நோவது போலச் சற்று மூச்சையடக்கிக் கண்ணை மூடிக் கொண்டாள்.

முகம் சட்டென்று ஏதோ ஞாபகம் வந்தாற்போல மாறியது. ''அடெடெ! பாட்டி காத்துக் கொண்டிருப்பாள் இழே. பாட்டிக்கு அம்மியில் கை அழுந்தாது என்று பருப்புத் துவையல் நானே அரைத்துக் கொடுப்பதாகச் சொன்னேனே! இதோ வந்து விட்டேன்''



"என்ன இந்த நியூஸ் பேப்பர் காரங்க இப்படிச் செய்யறாங்க! பெரிய மனிதருங்க யாரேனும் இறந்தால் பெரிசா எழுதிவிடறாங்க... ஆனால் ஒரு பெரிய மனிதர் பிறந்தால் அதைப்பத்தி ஒரு வரி கூட எழுதுகிறதில்லையே?"

என்று கூறி டொக்கி எழுந்தாள்.... விறு விறுவென்று கீழே ஓடி விட்டாள்.

சந்திரா அனந்தசாமியை நிமிர்ந்து பார்த்தாள்.

"என்ன மாமா இது?"

"குழந்தை அவள்."

"ஆமாம் மாமா! ஆனால் இந்த ஒரு குழந்தைதானே!" — என்று கேட்டாள் சந்திரா. குரல் கம்மி நடுங்கியது.

"அவன்கூடக் குழந்தை மாதிரிதான் இருக்கிறான்."

சந்திரா நாலைந்து கணம் பேசவில்லை. பிறகு. "ஒரு நாளுமில்லாத திருநாளாக உங்களிடமிருந்து கடிதம் வந்திருக்கிறதே என்று பார்த்தேன்...." என்று பாதியில் நிறுத்தி விட்டாள்.

"அவன் இங்கே வருவான் என்று நான் எதிர்பார்க்கவில்லை. உன்னை இந்தப் பெண் பார்க்கட்டுமே என்றுதான் வரச் சொன்னேன். நீ அவனைப் பார்க்க வேண்டும் என்று வரச் சொல்லவில்லை."

"நான் அவனைப் பார்த்திருக்கிறேன் என்று நினைக்கிறேன்."

"எங்கே?"

"இப்பொழுது ஞாபகம் வருகிறது. காரில் முன் சீட்டில் அவரோடு உட்கார்ந்திருந்தான் ஒரு தடவை. இரண்டு மூன்று தடவைகள் ஸ்கூட்டரில் பின்னால் உட்கார்ந்திருந்தாள் என்று நினைக்கிறேன்...."

"உட்கார்த்தி வைத்துக் கொண்டு போகலாம். அவ்வளவுதான்" என்றார் அனந்தசாமி. சந்திரா அவரை உற்றுக் கவனித்தாள்.

"குழந்தை என்றீர்களே!"

"இருக்கட்டுமே. குழந்தை எல்லோரிடமும் ஏமாந்து போய் விடாது. சாதாரணக் குழந்தை கூட யார் கூப்பிட்டாலும் வந்து விடுமா? அதற்கு வர வேண்டும் என்று தோன்றினால்தான் வரும்..."

"ரொம்ப அழகாக இருக்கிறாள் மாமா!" என்று சாதாரணமாகச் சொன்னாள் சந்திரா.

"அதற்கு மேல் பொறுப்பும் அதிகம். ஒரு கலியாணத்தை ஒப்படைத்தால் ஒன்றியாகவே சமையல், உபசாரம் எல்லாவற்றையும் செய்து விடுவாள்."

"ம்?"

"ஆமாம். எது செய்தாலும் பணிக்காக, நருவிசாக இருக்கும். சில பேர்கள் எதைச் செய்தாலும் அழகாக இருக்குமே, அந்த வகை."

"தெரிகிறது."

"பழகினால் உனக்கு ரொம்பப் பிடித்து விடும்."

"பழகத்தான் வேணும். ஆனால் இப்பொழுதே அவளைப் பார்த்தால் பரிதாபமாக இருக்கிறதே எனக்கு!"

"பரிதாபமா! ஏன்?"

"என்னமோ சொல்லத்தெரியவில்லை. ஆனால் சிறிது நேரம் அவளை நினைத்துக் கொண்டிருந்தால் அவளுக்காக அழுது கூட விடுவேனோ என்னவோ...அப்படி உள்ளுக்குள்ளே என்னமோ பண்ணுகிறது...."

"வேறு ஒன்றும் இல்லை. இத்தனை அழகு, திறமை, சமர்த்தோடு அவள் பணக்காரக் குடும்பம் இல்லை. மமதை இல்லை. வெடுப்பு இல்லை. தன்னையே அறியாத குழந்தையாக இருக்கிறாளே, அதுவே காரணமாக இருக்கலாம்."

சந்திரா சற்றுப் பேசாமலிருந்து விட்டு, "இவளைத் தெரியும், அவர் இங்கே வருகிறார் — இதெல்லாம் நீங்கள் சொல்லவே யில்லையே?" என்றார்.

"ஐயையோ, இப்பொழுதுதான், சில நாட்கள் பழக்கம்தானே அம்மா இதெல்லாம்... மேலும் நான் உங்கள் வீட்டுக்கு வந்தே ஒரு வாரத்துக்கு மேலாகிவிட்டதே. வந்தால்தான் உன்னைப் பார்க்க முடியுமா? நீ காலேஜுக்குப் போய்விடுவாய். புதிதாக வேலை வேறு ஆகியிருக்கிறது."

பேச்சு அப்படித் திரும்பி விட்டது. கல்லூரி வேலையைப் பற்றி விசாரித்தார் அவர். சம்பளம் வேலை நேரம் எல்லாவற்றையும் பற்றி விசாரித்தார்.

பேசிக் கொண்டிருக்கும்போதே குருசாமி வந்துவிட்டான். சந்திரா புறப்படத் தயாரானாள். அதுவரையில் டொக்கி கீழேயிருந்து திரும்பவில்லை. (தொடரும்)


மிக அழகிய ...
அடர்ந்த நீண்ட ஒளியுள்ள கூந்தல்!
பிரதிதினமும் கால்கேட் பெர்பியூம்டு காஸ்டர் ஹேர் ஆயில் தடவி வந்தால், கூந்தலானது அடர்த்தியாகவும், நீளமாகவும் வளருவதுடன் இளமையின் ஒளியுடனும், அற்புத ஜ்வலிப்புடன் விளங்குவதைக் கண்டு நீங்கள் பரவசமடைவீர்கள். அது உங்கள் கூந்தலின் இயற்கை அழகை எடுத்துக்காட்டி எல்லோரையும் பிரமிக்கச்செய்யும்.
மகிழ்ச்சியூட்டும் நறுமணம்—
உங்கள் குடும்பம்
முழுவதும் விரும்புவது!
COLGATE
HAIR OIL
கால்கேட்
பெர்பியூம்டு
காஸ்டர்
ஹேர் ஆயில்
எக்கானமி சைஸை வாங்கி பணத்தை மிச்சப்படுத்துங்கள்!


க்ளூகோவிடா விரைவில்
தருவது
கூடுதலான
சக்தி
Glucovita
GLUCOSE-D
MANUFACTURING LICENCE NO
அன்றுடம் அருந்துவீர்!
களைப்பின்றி செயலாற்றும் சக்தி
இரத்தத்திற்கு வேண்டிய சர்க்கரைச் சத்து
விரைவில் ஜீரணிக்கப்பட்டு பலன் தருகிறது
க்ளூகோவிடா
கார்ன் பிராடக்ட்ஸ் கோ (இந்தியா) பிரைவேட் லிட்.

உங்கள் சிந்தனைக்கு...

சவரன் என்பது சுத்தத் தங்கம்–சரியா?

இல்லை. சவரனில் 91 ⅔ பாகம் தங்கமும் 8⅓ பாகம் செம்பும் சேர்ந்திருக்கிறது. இதைத்தான் சவரன் என்று சொல்கிறோம். சுத்தத் தங்கம் மிருதுவாக இருக்குமாதலால் அத்துடன் சிறிதளவு செம்பையும் சேர்த்து உறுதி வாய்ந்ததாக்குகிறார்கள்.

பேனாமுனையில் என்ன உலோகத்தை வைத்திருக்கிறார்கள்?

ஆஸ்மியம் இரிடியம் என்ற இரண்டு உலோகங்கள் சேர்ந்த ஆஸ்மிஇரிடியம் என்ற கலப்பு உலோகம்தான் நிப் முனையில் வைக்கப்படுகிறது. இது உறுதியாகவும் வளையாமலும் தேயாமலும் இருக்கிறது.

வாணிபத் துறையில் செல்வாக்குள்ள உலோகம் யாது?

இரும்பு. இதுதான் வாணிபத் துறையில் மிகவும் முக்கியமான உலோகம். இது இல்லாவிட்டால், யந்திரங்கள், இன்ஜின்கள், கப்பல்கள், பாலங்கள், கார்கள், வானளாவும் உயரமான கட்டடங்கள் இவையனைத்தும் இல்லை. இரும்புடன் சிறிது கரியைச் சேர்த்தால் எஃகு என்கிறோம். எஃகு எத்தனையோ விதங்களில் பயன்படுகிறது.

பித்தளை ஒரு தனி உலோகமா?

இல்லை. பித்தளை தனிப் பொருளல்ல. செம்பும் துத்த நாகமும் சேர்ந்த கலப்பு உலோகம். மஞ்சள் நிறம் கொண்டது. செம்பும் வெள்ளீயமும் சேர்ந்த கலப்பு உலோகம் வெண்கலமாகும். வெண்கலப் பாத்திரம் போட்டால் உடையும். பித்தளை நசுங்கும். இவ்விரண்டிலும் எவ்வளவோ வகைகள் உள்ளன.

பூமியின் அடியில் மேலாகக் கிடைக்கும் உலோகங்களில் அதிக அளவில் இருப்பது எது?

பூமிமீது பல இடங்களில் குழாய் இறக்கி ஆராய்ந்ததில் பிராணவாயு அதிகமாகவும் அதற்கடுத்து சிலிகன் என்பதும் மூன்றாவதாக அலுமினியமும் இருப்பதாகக் கணக்கிட்டிருக்கிறார்கள். ஆகவே அலுமினியம் தான் அதிகமாகக் கிடைக்கும் உலோகம். இது மேலோட்டைப் பொறுத்தவரை. அதற்கும் கீழே போனால் இரும்பும் நிக்கலும் இருக்கலாமென்று கருதுகிறார்கள்.

வௌவாலுக்கு இரவில் கண் தெரியும்–இக்கூற்று சரியா?

தவறு. கண் தெரிவதில்லை. கண் மூலம் பார்த்து வழியைத் தெரிந்துகொள்வதில்லை. வௌவால் வாயிலிருந்து நம் காதுகளுக்குக் கேட்காத சத்தத்தை எழுப்புகிறது. எதிரே தடை இருக்குமானால் அந்தச் சத்தம் திரும்பி வந்து வௌவாலின் காதில் எதிரொலியாக விழுகிறது. இப்படி எதிரொலி கேட்பதையும் கேட்காததையும் கொண்டு வௌவால் எதிலும் மோதிக்கொள்ளாமல் செல்கிறது.

கடல், ஆழத்தில் என்ன நிறமாய் இருக்கிறது?

ஒரே இருள். கன்னங்கரேல் என்ற கருப்பு நிறம். இது கடலின் ஆழத்தில் பல மைல்களுக்கு அப்பால். கடல் மட்டத்துக்கருகில் மஞ்சள் கலந்த நீலமாகவும், அதனடியில் நீலமாகவும், அதற்கும் கீழ் கருநீலமாகவும் ஆழத்தில் கறுப்பாகவும் காட்சி தருகிறது. அங்கே வசிக்கும் மீன்களின் உடலில் வெளிச்சம் உண்டு பண்ணும் பல்வேறு உறுப்புக்கள் இருக்கின்றன. இவற்றிலிருந்து தோன்றும் ஒளிதான் அங்கே உண்டு.

காரிருளில் கூடப் பூனை வழியைக் கண்டுபிடிக்கும். உண்மையா?

இல்லை. பூனைக்கு இரவில் கண் தெரியாது. வழக்கமாக ஏதாவது ஒரு சிறு ஒளி கிடைத்தால்கூட அதைத் தன் கண் மூலம் பிரதிபலித்து வழியைக் காணும். அதனால்தான் மங்கிய இருளில் அதன் கண்ணைப் பார்த்தால் நெருப்புக் கோளம் போல் மின்னும். ஒரே இருளாக இருக்குமானால் அதுவும் நம்மைப் போல்தான் தடுமாறும்.

மின்மினிப்பூச்சி எப்படி ஒளிவிடுகிறது?

மின்மினிப் பூச்சியின் உடலில் லூசிபெரின், லூசிபெரேஸ் என்ற இரு பொருள்கள் இருக்கின்றன. லூசிபெரேஸ் முன்னிலையில் லூசிபெரின் பிராண வாயுவுடன் சேர்ந்து ஆக்சி லூசி பெரினாக மாறி ஒளி விடுகிறது. சுவாசக் குழல்களிலிருந்து இவை பிராண வாயுவைப் பெறுகின்றன. பெரும்பாலும் ஒளிவிடும் உறுப்புக்கள் மூச்சுக் குழல்களுக்கு அருகிலேயே அமைந்திருக்கின்றன. மின்மினிப்பூச்சியின் ஒளி மிகவும் குளிர்ச்சியாய் இருப்பதனால் சூடு பரவாது.

மனித உடலில் உண்டாகும் பொருள்களைச் சோதனைச் சாலையில் தயாரிக்க முடியுமா?

'உயிர்த் தீபம்'தான் உடலுக்குள் பல பொருள்கள் உருவாகக் காரணம் என்று பழங்கால விஞ்ஞானிகள் நம்பிக்கொண்டிருந்தார்கள். 'தவறு, சோதனைச் சாலையிலும் தயாரிக்கலாம்' என்றார் 'வோலர்' என்ற ஜெர்மானியர். அவர் தயாரித்தது சிறுநீரிலுள்ள யூரியா.

தொகுத்தவர்: உதயமூர்த்தி



புது வெள்ளம்

அத்தியாயம் 33

பணமோ பணம்!

முருகையனுடைய தகப்பனார் சிவப்பிரகாசம் பெரியபாளையத்திலிருந்து எழுதிய கடிதம் ஒரு துயரச் செய்தியைத் தாங்கி வந்திருந்தது. இரண்டு நாட்களுக்கு முன்பு திடீரென்று முருகையனின் பாட்டி இறந்துவிட்டாளாம். ஒரு வாரம் காய்ச்சலாகப் படுத்திருந்தவள் பிறகு எழுந்திருக்கவே இல்லை.

சிவப்பிரகாசம் உடனே முருகையனுக்குத் தெரிவிக்க முடியாமற் போனது பற்றி அந்தக் கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

''தந்தி கொடுப்பதற்கு நம்முடைய ஊரில் வசதி இல்லை. தந்தி கிடைத்து நீ பட்டணத்திலிருந்து வந்து சேருகிற வரையில் காத்துக் கொண்டிருக்க முடியாது போல் தோன்றியது. நடந்தது நடந்து விட்டது. அதனால் தெரிந்தவர்களை வைத்துக் கொண்டு நானே எல்லாக் காரியங்களையும் முடித்துவிட்டேன். நீ வீணாகக் கவலைப்பட்டுக் கொள்ளாதே. பட்டணத்தில் நீ இப்போதுதான் புது வேலையில் சேர்ந்திருக்கிறாய். அதை நீ நன்றாய்க் கவனித்து முன்னுக்கு வந்தால் போதும். நீ வேலை பார்க்கும் இடத்தில் அதற்குள் லீவு கேட்டால் என்ன நினைத்துக் கொள்வார்கள்? நீ இங்கு இப்போது வர வேண்டுமென்பதில்லை. நீ நன்றாய் இருப்பது ஒன்றே எனக்கு ஆறுதல்.''

பாட்டி எப்படியோ இந்த உலகத்துத் துன்பங்களிலிருந்து விடுதலை பெற்றுவிட்டாள். பெரிய பாளையம் கிராமத்தில் வைத்திய வசதிகளும் கிடையாது. வைத்திய வசதிகள் இருந்தாலும் அவை பண வசதி உள்ளவர்களுக்குத்தான் பயன்படும். பாட்டிக்கு வேறு எந்த நோய் வந்திருக்கப் போகிறது? இல்லாமை என்ற நோய் தள்ளாமைக் காலத்தில் வந்து அவளை அள்ளிக் கொண்டு போயிருக்கிறது.

முருகையன் பாட்டியை நினைத்து வருந்தவில்லை. அவள் தப்பித்துக் கொண்டு விட்டாள். 'பேரன் பட்டணத்தில் உத்தியோகம் பார்க்கிறான்' என்ற ஆறுதல் கட்டாயம் அவளுக்கு இருந்திருக்கும். ஆனால் சிவப்பிரகாசத்தின் நிலை? குழந்தையிலும் குழந்தையான அவரை யார் கவனிப்பார்கள்?

மறு நாள் காலையில் சுந்தரத்திடம் முருகையன் தான் கிராமத்துக்குப் போய்விட்டு வருவதாகத் தெரிவித்தான். ''அப்பாவுக்கு என்னைப் பார்த்தால் தெம்பாக இருக்கும்; போய் இரண்டு நாட்கள் தங்கி யிருந்துவிட்டுத் திரும்புகிறேன்'' என்றான்.

சுந்தரத்துக்கு அந்த யோசனை பிடிக்கவில்லை. ''அவர் நீ இங்கு நல்ல வேலையிலிருப்பதாக நினைத்துக் கொண்டு இருக்கிறார். அங்கு போனால் எப்படியாவது உண்மையைச் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்பட்டுவிடும். தூரத்துப் பச்சைதான் கண்ணுக்குக் குளிர்ச்சி. உனக்கு ஒரு நிலையான வேலை கிடைக்கும் வரையில் அவரைச் சந்திக்காமல் இருப்பது நல்லது.....''

முருகையன் யோசித்தான். பெற்ற தந்தையிடமே உண்மையை மறைத்து நடித்துத் தீர வேண்டுமா?

''முருகையா! நான் சொல்வதைக் கேள். உன் அப்பாவின் கவலைகளை மாற்றுவதற்காக நீ ஒரு விரிவான கடிதம் எழுது. உன் வேலையால் கிடைத்த

முதல் மாதச் சம்பளத்தின் மிச்சம் என்று சொல்லி ஒரு முப்பது ரூபாயை அவருக்கு அனுப்பி வை. ஐந்தாறு மாதங்களில் வேலையில் உயர்வு கிடைக்குமென்று அவருக்கு நம்பிக்கையூட்டு. அவருக்கு அதுதான் உண்மையான ஆறுதல். ரயிலுக்குச் செலவாகும் பணத்தை அவருக்கு அனுப்பிவைத்தால் அதுவே அவர் கவலைக்கு மருந்து. உடனே பணத்தை அனுப்பி வை.''

உண்மையை மறைத்து நடிப்பதனால், தன் தந்தைக்கு மன அமைதி ஏற்படும் என்று தெரிந்துகொண்ட முருகையன் சுந்தரத்தின் யோசனைகளைத் தட்டவில்லை. சுந்தரமும் அவனை வற்புறுத்தி ஒரு கடிதம் எழுதச் செய்தான். பணத்தையும் முருகையனைக் கொண்டே அனுப்பச் செய்தான்.

பெரியபாளையத்தில் கடிதம் முதல் நாளும் பணம் மறு நாளும் சிவப்பிரகாசத்துக்குக் கிடைத்தன. கடிதத்தைப் பத்து முறைகளுக்கு மேல் படித்தார் சிவப்பிரகாசம். பாட்டியம்மாள் இறந்து போன கவலை பஞ்சாய்ப் பறந்து விட்டது அவருக்கு. தாம் அதைப் படித்தது போதாதென்று மற்றும் சிலரிடமும் கொடுத்து அதைப் படித்துக் காட்டச் சொன்னார். அவருடைய மகனின் நிலைமையை ஊருக்குள் உள்ள நாலு பேர் தெரிந்துகொள்ள வேண்டுமென்ற துடிப்பு அவருக்கு.

மறு நாள் தபால்காரரைக் கண்டவுடன் அவருக்கு அதிகமான வரவேற்பு நடந்தது. ''பையன் பணம் அனுப்பியிருப்பானே?'' என்று சிரித்துக் கொண்டே கேட்டார். கையெழுத்துப் போட்டுப் பணத்தை வாங்கிக்கொண்டு அவரிடம் ஒரு ரூபாயைத் தூக்கிக் கொடுத்து வைத்துக் கொள்ளச் செய்தார்.

''பட்டணத்தில் அவனுக்கு ஏகப்பட்ட செலவு! இல்லாவிட்டால் ஐம்பது ரூபாய் அனுப்பியிருப்பான்.— இது முதல் மாதச் சம்பளம்!'' என்றார் சிவப்பிரகாசம்.

கையில் முழு ரூபாய் வந்தவுடன் தபால்காரர் அங்கு சிறிது நேரம் தங்கி முருகையனைப் பற்றி அக்கறையோடு விசாரித்தார்.

''தம்பிக்கு அங்கே என்ன வேலை?''

''என்ன வேலையா! பி. ஏ. படித்த பிள்ளைக்கு வேறு என்ன வேலை கிடைக்கும்? பெரிய கம்பெனியில் பெரிய வேலையாம். மாதம் பிறந்தால் நூறு ரூபாய் சம்பளம்!''

''நூறு ரூபாயா?''

''ஆரம்பத்தில் நூறு. அப்புறம் கூடிக் கொண்டே போகும்!''

தபால்காரர் தெருவுக்குப் பத்து வீடுகள் வீதமாவது நுழைந்து வெளியில் வருபவர். வீடு தவறாமல் சிவப்பிரகாசத்துக்கு வந்திருக்கும் நல்ல காலத்தைப் பற்றிச் சொல்லிப் பெருமைப்பட்டுக் கொண்டார். மத்தியில் அவர் நொடித்துப் போனதற்கப்புறம் இப்போது அவருடைய மகனால் அவருக்கு அதிர்ஷ்டம் பிறந்திருக்கிறது என்ற செய்தியை ஊருக்குள் பரப்பினார்.

பெரியபாளையத்தில் சிவப்பிரகாசத்தின் மதிப்பு மீண்டும் சிறிது சிறிதாக உயரத் தொடங்கியது. தெருவில் அவரைச் சந்தித்தவர்கள் அவருக்கு மரியாதை செலுத்தினார்கள். முருகையனைப் பற்றி அவரிடம் விசாரித்தார்கள். அவர் பரப்பி விட்ட செய்தியின் சுழலுக்குள் அவரே அகப்பட்டுக் கொண்டு உயர்ந்து வந்தார்.

''தம்பிக்கு எப்போ கல்யாணம் செய்து வைக்கப் போறீங்க?''

''நீங்களும் பட்டணத்துக்குப் போய்ப் பிள்ளையோடே சுகமாக இருக்கிறது தானே......?''

''நல்லவேளை! நீங்க இருந்த இருப்புக்கு இப்பவாவது கடவுள் கண் முழிச்சுப் பார்த்திருக்கிறார்!''

பையனுக்கு வேலை கிடைத்துவிட்டது என்றவுடன், அவனுடைய கல்யாணத்தைப் பற்றி அவரிடம் விசாரிக்காதவர்களே கிடையாது. அவருடைய பழைய பண்ணையாட்கள் முதல், அவருக்குத் தெரிந்தவர்கள் அவ்வளவு



பேரும் அதைத் தங்களுடைய கடமையாகவே நினைத்துக் கொண்டார்கள்.

''பெண் பெரிய இடத்துப் பெண்; நல்லாப் படிச்சிருக்கு; வேகமாய்க் கார் ஓட்டுது! தம்பி முருகையன் மேலே அதுக்குக் கொள்ளை ஆசை! எல்லாம் சீக்கிரம் முடிக்க வேண்டியதுதான்.''

ஒரு வாரம் பத்து நாட்களுக்குள் சிவப்பிரகாசம் தமக்குத் தாமே உருவாக்கிக் கொண்ட மனக்கோட்டையின் மன்னராக மாறினார். தெருக்களில் அடிக்கடி நிமிர்ந்த தலையோடு அவர் நடமாடுவதை மற்றவர்கள் கவனித்தார்கள். புன்சிரிப்பும், மதிப்பும் மரியாதையும் அவரை அவ்வப்போது வரவேற்றன. அவருடைய கண்களில் புத்தொளி, பேச்சில் கலகலப்பு, உடம்பில் ஒரு தனி வலிமை இவ்வளவும் கலந்து விட்டன.

எல்லாம் அந்த முப்பது ரூபாய் 'முதல் மாதச் சம்பளம்' செய்த ஜாலவித்தைகள்! மகனுடைய வருமானம் மலையிலும் பெரியதாகத் தோன்றியது அவருக்கு. முப்பதாயிரம் ரூபாய்க்கு இல்லாத மதிப்பை அவர் அதில் கண்டு விட்டார்.

ஒரே ஒருவேளைச் சாப்பாட்டை வீட்டில் பொங்கிச் சாப்பிடுவார். வருகிறவர்களை அழைத்து வைத்துப் பேசுவார். அல்லது தாமே மனிதர்களைத் தேடிப் பிடித்துப் பேசப் போய் விடுவார். முருகையனைத் தவிர வேறு எந்தப் பேச்சுமே அவருக்குப் பேசத் தெரியாது. மகன், மகன், மகன்தான்!

பேசுவதற்கு மனிதர்கள் கிடைக்காத போது தமக்குத் தாமே அவர் பேசிக் கொள்வதும் உண்டு. ''முருகையா! நான்தான் படிக்காத முட்டாளாயிருந்து பிழைக்கத் தெரியாமல் பிழைத்து விட்டேன். உன் பாட்டன் காலத்துச் சொத்து என்னால் கரைந்து போய் விட்டது. நீ தலையெடுத்துத்தான் அந்த மாடி வீட்டையும் காணி கரைகளையும் திருப்பி வாங்க வேண்டும்.''

அவர் நன்றாக இருந்த காலத்தில் எத்தனையோ முப்பது ரூபாய்களைத் தண்ணீர் பட்ட பாடாகச் செலவு செய்திருக்கிறார். ஒரு நாள் செலவே அவ்வளவு ஆகியிருக்கிறது. ஆனால் இடையில் அவருக்கு மூன்றணாக்கூடக் கிடைக்காத காலம் வந்து விட்டது. அதை அவரால் மறக்க முடியவில்லை; மறக்கவே முடியவில்லை.— அந்த நிலையிலிருந்து பார்த்தபோது மகன் அனுப்பிய பணம் மலைபோன்றதுதான்! பாசம் என்ற பூதக் கண்ணாடியை வைத்துக் கொண்டு அந்த மலையைப் பார்த்து மகிழ்ந்தார் அவர்.

தகப்பனார் மலையின் உச்சியில் மிதந்து மனப்பால் குடித்துக் கொண்டிருந்த போது, மகன் சென்னைக் கடற்கரையின் மணல் வெளியில் தகரடப்பாவும் தோளுமாய் அலைந்து கொண்டிருந்தான். அரையணாக்களும் ஓரணாக்களும் பெறுவதற்காக அந்த மணற்பரப்பில் அவன் அலைமோதித் திரிந்தான்.

பல நாட்கள் பழகியும் முருகையனின் இதயத்தில் ஒட்டவில்லை அந்தத் தொழில். தான் அந்த வேலைக்காக இந்த உலகத்தில் பிறக்கவே இல்லை என்பதை ஒவ்வொரு கணமும் அவன் மனம் சொல்லத் தவறவில்லை. உலகமான நாடக மேடையில் அவன் மேற்கொண்ட நடிப்பு அந்தத் தொழில்.

இடையில் ஒரு ஞாயிற்றுக்கிழமை சித்திரா கடற்கரைக்கு வரவில்லை. மறுவாரம் வந்திருந்தாள். வாரத்தில் அவளைச் சந்திக்கும் சில மணி நேரங்கள் அவனால் மறக்க முடியாத பொழுதுகளாக மாறியிருந்தன.

''சித்திரா! போன வாரம் உன்னை இங்கே காணுமே? ஏன், வரவில்லை?''

''என்னுடைய அப்பா திடீரென்று இறந்து விட்டார்......''

''என்ன!''- முருகையன் அவளைத் தேற்ற முற்பட்டான். காரணத்தை விசாரித்தான். பரிவோடு அவளிடம் மனம் விட்டுப் பேசினான்.

அவர் எதற்காக இறந்தார் என்ற காரணத்தைக் கேட்டபோதுதான் அவனுக்குத் தலை சுற்றியது.

''ஆயிரம் ரூபாய் நோட்டுக்கள் செல்லாதென்று திடீரென்று ஒரு சட்டம் கொண்டு வந்தார்களல்லவா? அதைப் பத்திரிகையில் படித்தவுடன் மாரடைப்பால் மயங்கி விழுந்தார். பிறகு எழுந்திருக்கவில்லை.—நாங்களும் இந்த விஷயத்தை வெளியில் சொல்லவில்லை.''

''அப்படியானால்....?''

''கணக்கில் இல்லாத பணம் எங்களுக்கே தெரியாமல் ஐம்பதாயிரம் ரூபாய் வைத்திருக்கிறார். அது அவர் இறந்தவுடன்தான் எங்களுக்குத் தெரிந்தது.''

சமுதாயத்தில் கள்ளத்தனம் செய்பவர்களைப் பற்றி முருகையன் கேள்விப்பட்டிருக்கிறான். ஆனால் ஒரு குடும்பத்தின் தலைவர் தம் குடும்பத்துக்கே தெரியாத கள்வராக மாறுவதுண்டா?

முருகையன் வேதனையோடு சிறிது நேரம் மௌனம் சாதித்தான். சித்திராவோ அவன் தன் தந்தையின் பிரிவுக்காக வருந்துகிறான் என்று நினைத்து அவனைத் தேற்றலானாள்.

'மனிதர்கள் சாகலாம்; ஆனால் மனிதத்தன்மை சாகக்கூடாது' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் முருகையன்.

அத்தியாயம் 34

நண்பனுக்கு நல்ல காலம்

சுந்தரத்தின் வீட்டுச் சமையலறைக்குள் புகுந்துகொண்டு மூன்று பெண்கள் சுறுசுறுப்பாக வேலைகளில் ஈடுபட்டிருந்தனர். கடலையை வறுத்தாள் மீனாட்சி; முறுக்குச் சுற்றினாள் சாந்தா; சுண்டலை வேகவைத்தாள் சுகுணா. வாய் ஓயாத பேச்சுக்களும் கை ஓயாத வேலைகளுமாக அடுப்படி கலகலப்பாக விளங்கியது.

இப்படிப் பரபரப்போடு வேலைகளைக் கவனித்த யாருக்குமே, வேறு ஓர் அன்னியனுக்காகத் தாங்கள் அவற்றைக் கவனிப்பதாகத் தோன்றவில்லை. ஏதோ ஒவ்வொருவரும் தங்கள் வீட்டுச் சொந்த வேலைகளைப் போல் இழுத்துப் போட்டுக் கொண்டு உற்சாகமாக உழைத்தார்கள். அதிலும் அங்கே குருசாமி வந்து நாடகக் குழுவுக்கான தேவையைச் சொல்லிவிட்டுப்போன பிறகு, சுகுணா மீனாட்சியிடமிருந்து சரி பாதி வேலையைத் தனதாக்கிக் கொண்டாள்.

ஏற்கனவே வேறு நாடக ஒத்திகைகளுக்குச் சுகுணா போய் வருவதுண்டு. அப்போதெல்லாம் இவ்வளவு துடிப்போடு அவள் காணப்பட்டதில்லை. ஒவ்வொரு நாள் புறப்படும்போதும் தன்னை நன்றாக அலங்கரித்துக் கொண்டு, கையில் பலகாரக் கூடையை எடுத்துக் கொண்டுதான் கிளம்பினாள். நாடகக் குழுவில் அந்தப் பொட்டலங்களுக்கு இருந்த வரவேற்பை அவள் தெரிவித்தபோது, மற்ற இரு பெண்களுக்கும் பெருமை தாங்கவில்லை.

வெகுளிப் பெண்ணான சுகுணா குருசாமியைப் பற்றி மற்றவர்களிடம் அளவுக் கதிகமாகப் புகழ்ந்து விட்டு, பிறகு அவர்களிடம் அகப்பட்டுக் கொண்டு விழித்திருக்கிறாள். அதுவரையில் ஒதுக்கப்பட்ட பெண்ணைப் போல் தனித்திருந்த அவளுக்கு இப்போது மீனாட்சியோடும் சாந்தாவோடும் தாராளமாய்க் கலந்து பழகுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைத்தது. மற்றப் பெண்களின் அன்பினாலோ, அல்லது அவளுடைய மனத்துக்குள் ஏற்பட்ட ஒரு மலர்ச்சியாலோ அவளுடைய முகத்தில் புதுக் களை தோன்றியது.

கலைக்கூடத்துக்கு வேண்டிய பொருள்களை எடுத்து வைத்துக் கொண்டு ஒத்திகைக்குக் கிளம்பினாள் சுகுணா. புறப்படுவதற்கு முன்பு தன் வீட்டுக்குள் நுழைந்து கண்ணாடியில் ஒருமுறை தன் முகத்தைப் பார்த்து விட்டுத்தான் நடந்தாள். திடீரென்று ஏனோ அவளுக்குத் தன்னுடைய வாழ்க்கையில் என்றுமில்லாத பற்றுதல் ஏற்பட்டிருந்தது.

அடுத்தாற்போல், சாந்தா தகரப் பெட்டியில் தின்பண்டங்களை நிரப்பிக் கொண்டு வெளி அறைப் பக்கம் வந்தாள்.

நன்றியோடு அவளைப் பார்த்துச் சிரித்துவிட்டு, ''எனக்காக நீங்கள் எல்லோரும் சிரமப்படுவது தான் எனக்கு என்னவோபோல் இருக்கிறது'' என்றான் முருகையன். ''இதையெல்லாம் கூட நானே செய்து கொண்டால் என்ன?''

சாந்தா அவனைத் தலைதூக்கிப் பார்த்துவிட்டுப் புன்னகை பூத்தாள். ''வேலையில்லாத் திண்டாட்டம் என்று சொல்லிக் கொண்டு, எங்களுடைய வேலைக்கே போட்டியாய் அடுப்படியில் நுழைந்து விடுவீர்கள் போலிருக்கிறதே! இதை மட்டும் நாங்கள் விட்டுக் கொடுக்க மாட்டோம்.''

முருகையன் பெட்டியை எடுத்துக் கொண்டு படிகளில் இறங்கிச் சென்றான். அநுதாபத்துடன் அவன் தெருவில் நடப்பதைக் கவனித்து விட்டு உள்ளே வந்தாள் சாந்தா. அவளையுமறியாமல் பெருமூச்சொன்று அவள் இதயத்திலிருந்து கிளம்பிக் காற்றில் கலந்தது. தன் வீட்டுக்குள் நுழைந்து தாயாருக்கு மருந்து ஊற்றிக் கொடுத்து விட்டு, மீண்டும் மீனாட்சியிடம் சென்றாள். குழந்தைகள் இன்னும் பள்ளியிலிருந்து திரும்பி வரவில்லை.




சுந்தரம் அன்றைக்கு வழக்கமான நேரத்துக்கு முன்பே அலுவலகத்திலிருந்து திரும்பி வந்தான். அவனுடைய முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது. ''புது வேலை கிடைத்து விட்டது, மீனாட்சி! இனி பட்டணத்திலிருந்து மூட்டை கட்ட வேண்டியதுதான்!'' என்று உற்சாகமாய்ச் சொல்லிக்

கொண்டு வந்தவன், அங்கு மீனாட்சியோடு சாந்தாவும் இருந்ததைக் கவனிக்கவில்லை.

''என்ன அண்ணா விஷயம்?'' என்று வியப்புடன் கேட்டாள் சாந்தா.

''ஹைதராபாத் சமஸ்தானத்தில் உள்ள வெள்ளைக்காரர்களின் நிலக் கரிச் சுரங்கக் கம்பெனி ஒன்றில் எனக்கு ஒரு புது வேலை கிடைத்திருக்கிறது, சாந்தா. சம்பளமும் இதைவிட அதிகம்.



செலவும் குறைவு. முன்பே முயற்சி செய்து கொண்டிருந்தேன். இப்போது தான் கிடைத்தது.''

அந்தச் செய்தியை மீனாட்சி எந்த அளவுக்கு மகிழ்ச்சியோடு வரவேற்றனோ, அந்த அளவுக்குச் சாந்தா வரவேற்கவில்லை.

''அப்படியானால் எங்களையெல்லாம் விட்டு விட்டுப் போகப் போகிறீர்களா, அண்ணா?'' என்று ஏக்கத்தோடு கேட்டாள் சாந்தா. அவளுடைய குரல் கலங்கி யிருந்தது.

சுந்தரத்துக்கு உடனே பதில் சொல்ல நா எழவில்லை. அவனுடைய உற்சாகமெல்லாம் ஒரே கணத்தில் எங்கோ போய் ஒளிந்து கொண்டது. அவள் அந்த வீட்டுக்குக் குடி வருவதற்கு முன்பு அவள் யாரோ, அவன் யாரோ? ஆனால் இப்போது சாந்தா அவன் தங்கையாகவே மாறி விட்டிருந்தாள். தங்கை என்ற உரிமையுடன்தான் அவன் சாந்தாவிடம் விவரமாகத் தனது குடும்ப நிலையைக் கூறினான்.

''சாந்தா! மனிதன் என்னதான் இருந்தாலும் சுயநல உணர்ச்சியிலிருந்து தப்ப முடியவில்லை. குழந்தைகளை நன்றாக வளர்ப்பதற்கு இந்த வருமானம் போதாது. அதற்காக நானும் எவ்வளவோ முயற்சிகள் செய்து பார்த்து விட்டேன். இந்தப் பட்ட

> சர்க்காருக்கு எவ்வளவு அதிகாரம் வழங்கப்பட வேண்டும், தனி மனிதனுக்கு எவ்வளவு அதிகாரம் வழங்கப்படவேண்டும் என்று பார்க்கும்போது, தனி மனிதனுடைய உரிமை முதல் உரிமையாகக் கருதப்பட வேண்டும். இதற்கு மாறாகச் சென்றால் தனி மனிதனின் சுதந்திரம் மிகவும் குறைந்து போய், அரசாங்க அதிகாரிகளும் மந்திரிகளும் சர்வாதிகாரம் பெற்று விடுவதில் போய் முடியும். —ராஜாஜி

ணத்திலிருந்து தப்பித்துக் கொண்டு ஓடினால் போதுமென்றாகி விட்டது.''

சாந்தா தன் கவலைகளை மறைத்துக் கொண்டு, ''உங்களுக்கு நல்ல காலம் பிறந்திருக்கிறது, அண்ணா!'' என்றாள். ''தாராளமாகப் புது வேலையை ஒப்புக் கொள்ளுங்கள். எங்கே யிருந்தாலும் நீங்கள் எல்லோரும் நன்றாக இருக்க வேண்டும். எங்களையும் மறக்காமல் நீங்கள் நினைத்துக்கொள்ள வேண்டும்.''

''இன்பம் தனியாக வருவதில்லை, சாந்தா! துன்பத்தையும் துணை சேர்த்துக் கொண்டுதான் வருகிறது'' என்று உருக்கமாய்க் கூறினான் சுந்தரம். ''இவ்வளவு நாட்கள் பழகிய உன்னையும் நாங்கள் பிரிந்திருக்க வேண்டியிருக்கிறது. என்னிடம் வந்து சேர்ந்த முருகையனையும் என்ன செய்வதென்று எனக்குத் தெரியவில்லை.''

''பாவம்! அவருக்குத்தான் இனிமேல் சிரமம் அதிகம்'' என்றாள் மீனாட்சி.

''தாராள மனம் படைத்த பெரிய குடும்பத்துப் பிள்ளை அவன். அவனுடைய தகப்பனார் எவ்வளவோ பேருக்கு உதவிகள் செய்திருக்கிறார். என் படிப்புக்கு வழிகாட்டி எனக்கு ஆதரவு தந்தவரே அவர்தான். அவருடைய மகனுக்கு இன்றைக்கு நான் கை கொடுக்க முடியாமல் இருக்கிறேன்.''

''அவரை என்ன செய்யப் போகிறீர்கள்?'' என்று கேட்டாள் மீனாட்சி.

''என்ன செய்வது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை.''

எல்லோரும் சில விநாடிகள் முருகையனைப் பற்றிய சிந்தனையில் ஆழ்ந்திருந்தார்கள். பிறகு சுந்தரமே மௌனத்தைக் கலைத்தான். ''வீட்டுக்காரரிடம் சொல்லி, அந்த வெளி அறையை அவனுக்குக் குறைந்த வாடகைக்கு விடச் சொல்லலாம். நானும் சில இடங்களில் அவனுக்கு வேலைக்குச் சொல்லி வைத்திருக்கிறேன். கிடைப்பது சிரமந்தான்.''

''எனக்கு ஒரு வழி தோன்றுகிறது'' என்றாள் மீனாட்சி. ''நம் வீட்டில் செய்து அனுப்பும் பொருள்களையே வேறு எங்காவது வெளியில் வாங்கி லாபத்துக்கு விற்றால் என்ன? அல்லது வேறு தின்பண்டங்களையாவது அவர் வாங்கி விற்கலாமே!''

''வாங்கி விற்றால் அவனுக்கே அது கட்டிவராது. விற்பனையாகாவிட்டாலோ அது அவனுக்கு நஷ்டம். வீடும் குழந்தைகளுமாக இருந்ததால் நமக்கு ஒன்றும் தோன்றவில்லை. எப்படியும் வேறு ஏதாவது யோசித்துப் பார்க்க வேண்டும்.''

''ஏன், நான் செய்து கொடுத்தால் என்ன?'' என்று கேட்டாள் சாந்தா. சுந்தரமும் மீனாட்சியும் திடுக்கிட்டு அவளைத் திரும்பிப் பார்த்தார்கள்.

''ஏன், அண்ணிக்குத் துணையாக இருந்து செய்ததை இனி நானே செய்கிறேன்....!''

சுந்தரம் பரிவோடு அவளைப் பார்த்தான். ''சாந்தா! நீ நினைப்பதுபோல் மற்றவர்கள் நினைக்க மாட்டார்கள். முருகையன்கூட இதற்குச் சம்மதிக்க மாட்டான். நீயோ கல்யாணமாகாத பெண்; அவனும் சிறு பிள்ளை. நாலு குடிகளுக்கு மத்தியில் நாம் இருக்கிறோம். அவர்கள் ஏதாவது பேசி விட்டால், பிறகு உன் அம்மாவாலேயே அதைத் தாங்க முடியாது. நாளைக்கு உனக்குக் கல்யாணம் நடக்கும் சமயத்தில் இதெல்லாம் கூட ஒரு தடையாக வந்து நிற்கும்.''

''எனக்குக் கல்யாணமா?'' என்று வருத்தத்தோடு கேட்டுச் சிரித்தாள் சாந்தா.

''ஏன், எவ்வளவு நாளைக்குத்தான் இப்படியே இருந்து விடலாமென்று பார்க்கிறாய்?'' என்றாள் மீனாட்சி.


''அது எப்போதாவது நடக்கும் போது நடக்கட்டும் அண்ணி! அதற்கும் இதற்கும் என்ன வந்தது? இது ஒரு தடையாக இருந்தால் இருந்து விட்டுப் போகட்டுமே!'' என்றாள் சாந்தா.

''குடும்பத்துக்கு ஆண்பிள்ளை போலவே இருந்துவிடப் பார்க்கிறாய். அது நடக்காது சாந்தா, நடக்காது!'' என்று சிரித்தாள் மீனாட்சி.

''சரி, அண்ணி! நான் வருகிறேன்!'' என்று, எதையோ நினைத்துக் கொண்டவள்போல் எழுந்தாள் சாந்தா. ''நான் எதற்கும் அம்மாவிடம் கேட்டுப் பார்க்கிறேன். அவர்கள் மறுக்கவில்லையென்றால் எனக்கொன்றும் சிரமமில்லை.''

சாந்தா அங்கிருந்து சென்றவுடன் கணவனும் மனைவியும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டார்கள்.

''துணிவுள்ள பெண் இவள்!'' என்றான் சுந்தரம். (தொடரும்)



நுட்பமான சிற்ப–வேலை

...ஆனால் ஆக்பா ஸிங்க்ரோ பாக்ஸ் காமராவில் நுட்பமொன்றுமில்லை. அது மிகவும் சாதாரணமானது. பிரகாசமான, மகிழ்ச்சிதரும் விடுமுறை ஸ்தலங்களையும், யாத்ரிகர்களுக்கு கவர்ச்சியூட்டும் பலவகைகளையும், உல்லாசப் பிரயாணங்கள் மற்றும் இன்பமூட்டும் சந்தர்ப்பங்களையும், இந்த எளிதில் உபயோகிக்கக்கூடிய, குறைந்த சிலவுள்ள காமரா மூலம் யாரும் படம் எடுக்க முடியும். அதை உங்கள் பிரயாணத்தின்போது எடுத்துச் சென்று இன்பமான நினைவுகளுடன் திரும்புங்கள்.



ரூ. 29. 50—வரி தனி.

ஆக்பா ஸிங்க்ரோ பாக்ஸ் காமரா

Agfa

இந்தியாவின் முதன்மையான அதிநுட்ப புகைப்படத் தொழிலின் தயாரிப்பு.

ஏகபோக வினியோகஸ்தர்கள்: **ஆக்பா இந்தியா** லிமிடெட்

பம்பாய் • நியு டில்லி • கல்கத்தா • மதறாஸ்.

AICB.13 R. TAM

5–26-11



பரிசீலனைக்குப் பின் விநியோகம்

மோட்டார் உறுப்புகள் உற்பத்தியாளர் நம் நாட்டில் பலர். உறுப்புகள் விநியோகத்தை மேற்கொள்ளுமுன், நாங்கள் ஒவ்வொரு உறுப்பையும் தரம், நயம், உழைப்பு முதலியவற்றிற்கு பரிசீலனை செய்து, பின்புதான் ஏற்றுக்கொள்கிறோம். இக்காரணத்தினால்தான், "டிவிஎஸ் விநியோகிக்கும் உறுப்பு, உழைப்பில் சிறந்தது" என்பது பழமொழிபோல் உலவுகிறது.

நாங்கள் விற்பனை செய்யும் இந்தியாவில் தயாரித்த உறுப்புகளில் சில:

'ஸ்டாண்டர்ட்' பாட்டரி; 'அல்லைட்' பல்புகள்; 'பெரோடோ' பிரேக் லைனிங்; 'பென்னர்' பான் பெல்டுகள்; 'டபிள் லைப்' சேஸிஸ் பாகங்கள்; 'எச் அண்ட் டி' பிரேக் டிராம்கள்; 'மைகோ' பியூயல் இஞ்செக்ஷன் பாகங்கள்: 'டிரான்கோ' (இந்தியன்) வால்வுகள்; 'கானரா' ஸ்பிரிங், லீவுகள்; QHL - RANE டை ராடு எண்டுகள் ; 'ஹெல்லா' ஹாரன்கள் (இந்தியன்)

டி. வி. சுந்தரம் அய்யங்கார் & ஸன்ஸ் பிரைவேட் லிமிடெட்.

மதுரை-திருச்சி-திருநெல்வேலி-புதுக்கோட்டை-சேலம்-கோயமுத்தூர்

சுந்தரம் மோட்டார்ஸ் பிரைவேட் லிமிடெட்

மதருஸ்-பெங்களூர்-செகந்திராபாத்

மதருஸ் ஆட்டோ சர்விஸ் பிரைவேட் லிமிடெட்

மதருஸ்-பெங்களூர்

JWT/TVS-1499*

கிரிக்கெட் முதல் டெஸ்ட்

குண்டுமணி

இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டிக்கும் இந்திய கோஷ்டிக்கும் நடைபெற்ற முதல் டெஸ்ட் பந்தயம் வெற்றி தோல்வியின்றி முடிந்துவிட்டது. இந்தக் கோஷ்டி இந்தியக் கட்சியோடு இன்னும் நான்கு டெஸ்ட் பந்தயங்கள் ஆடப் போகிறது. இந்த டெஸ்ட் பந்தயம் முதன் முதலில் எப்பொழுது தோன்றியது, எங்கே ஆடப்பட்டது என்பதைத் தெரிந்துகொள்ளலாமா?

முதன் முதலில் டெஸ்ட் பந்தயத்தை ஆஸ்திரேலிய கோஷ்டியினரும் இங்கிலாந்து கட்சியினரும் 1876-77ம் ஆண்டு ஆஸ்திரேலியாவில் மெல்போர்னில் ஆடினர். இந்த முதல் டெஸ்ட் ஆடுவதில்தான் எத்தனை இடையூறுகள்!

சிட்னிக்கும் மெல்போர்னுக்கும் ஏற்பட்ட போட்டாபோட்டியிலே டெஸ்ட் பந்தயம் எங்கே ஆடுவது என்பதே தொங்கலில் வந்து விட்டது. கடைசியில் மெல்போர்னில் ஆடுவது என்பது தீர்மானமாயிற்று. ஆல் ரௌண்டர் ஜான்ஸ் லீவு கிடைக்காததால் ஆடவில்லை. மர்டாக் விக்கெட் கீப்பராகத் தேர்ந்தெடுக்கப்படவில்லை என்பதற்காக ஆலனும், ஸ்பாபோர்த்தும் விளையாட முன் வரவில்லை. அவர்கள் ஆடி இருந்தாலும் ஆஸ்திரேலியா இங்கிலாந்து கோஷ்டிக்கு இணையாக விளையாடுமோ என்று பலருக்குச் சந்தேகம். இப்படிப்பட்ட தருணத்திலே ஆஸ்திரேலியர் இங்கிலாந்து கிரிக்கெட் கோஷ்டியினரைத் தோற்கடித்துப் பெரும்புகழ் பெற்றனர்.

இந்த முதல் டெஸ்ட் பந்தயத்திலே சார்லஸ் பானர்மன் முதல் சதம் போட்டுப் பெருமையைத் தட்டிக் கொண்டார். 165 ரன்கள் எடுத்து இவர் ஆடும்போது கைவிரலில் அடிபட்டு விட்டதால் மேற்கொண்டு ஆட முடியவில்லை. ஆஸ்திரேலியாவின் வெற்றிக்குக் காரணமானவர்களில் இவர் முக்கியமானவர்.

அந்தக் காலத்தில் கிரிக்கெட் ஆட்டக்காரர்களுக்கு எந்த விதப் படியும் கிடையாது. அவர்கள் செலவுக்குச் சிறிது பொருள் கொடுக்கப்படும்; அதுவும் அவர்கள் நன்றாக ஆடினார்கள் என்று தீர்மானிக்கப்பட்டால்தான்!

ஆஸ்திரேலியா முதல டெஸ்டில் வெற்றிக் கொடி நாட்டியபோது, அந்த வெற்றி என்றும் நிலைத்திருக்கும்படியாக ஒவ்வொரு கிரிக்கெட் ஆட்டக்காரருக்கும் தங்கப் பதக்கம் பரிசளிக்கப்பட்டது. காப்டன் கிரிகெரியின் திறமை மிக்க தலைமைப் பதவிக்காக அவருக்குப் பெரிய அளவில் தங்கப் பதக்கம் அளிக்கப்பட்டது. சார்லஸ்பானர்மன் முதல் டெஸ்டில் முதல் சதம் போட்டதற்காக அவருக்குக் கிரிக்கெட் ரசிகர்கள் நூறு பவுன் பரிசளித்தனர்; கெண்டால், பிளாக்காம் ஆகியவர்களுக்குப் பந்து வீசியதற்காகவும், விக்கெட்கீப்பராகப் பந்தைத் தடுத்ததற்காகவும் ஒரு சிறிது தொகை வழங்கப்பட்டது. ஆங்கில கிரிக்கெட் ஆட்டக்காரர்கள் தோற்றாலும் அவர்களுக்கு நூற்றி ஐம்பது பவுனும், செலவுத் தொகையும், ஆஸ்திரேலிய ரயில்வேக்களில் இலவசப் பயணச் சீட்டுக்களும் கிடைத்தன.

ஆங்கில கிரிக்கெட் கோஷ்டியின் காப்டன் லில்லிவொயிட், மெல்போர்ன் மைதானத்தை விளையாட்டுக்குத் தேர்ந்தெடுத்த போதும் தகராறு எழுந்தது. ஆங்கில ஆட்டக்காரர் கிரேஹாம் ஆஸ்திரேலியாவில் தம் கிரிக்கெட் கோஷ்டியோடு சுற்றுப் பிரயாணம் செய்வதாக இருந்தார். மெல்போர்ன் கிரிக்கெட் மைதானத்தை அவர்கள் ஆடுவதற்காக ஒப்பந்தம் செய்தார் கிரேஹின் ஏஜண்ட்; காப்டன் லில்லிவொயிட்டின் ஏஜண்ட் கிழக்கு மெல்போர்ன் மைதானத்தை ஒப்பந்தம் செய்திருந்தார். கிரேஹின் பிரயாணம் தடைப்படவே, லில்லிவொயிட் பந்தயத்தை மெல்போர்ன் மைதானத்துக்கு மாற்றினார். இது கிழக்கு மெல்போர்ன் கிரிக்கெட் சங்கத்தினருக்கு மனக் கசப்பைக் கொடுத்தது. அவர்கள் நீதி மன்றத்தில் வழக்குத் தொடரவும் சித்தமாக இருப்பதாகத் தெரியவந்தது. அந்தத் தருணத்தில் லில்லிவொயிட் கிழக்கு மெல்போர்ன் சங்கத்தினருடன் சமாதானம் செய்து கொண்டு, அந்தச் சங்கத்துக்கு 230 பவுனும், அந்தச் சங்கத்தின் ஐந்நூறு அங்கத்தினர்களுக்கு டெஸ்ட் மாட்ச் பார்க்க இலவச அனுமதிச் சீட்டும் வழங்கி அந்த ஆபத்திலிருந்து தப்பினார்.

புலியைப் பலி கொண்ட குரங்குகள்

பிலோ இருதயநாத்

ஒரு சமயம் கசவர்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக நான் அவர்களிடையே சிலகாலம் தங்கும்படியாக நேர்ந்தது. இந்தக் கசவர்கள் எனக்கு எத்தனையோ ரசமான கதைகளை யெல்லாம் சொல்லி யிருக்கிறார்கள்.

ஒரு நாள் காட்டில் விறகு வெட்டச் சென்ற ஒரு கசவன் குடியிருப்பை நோக்கி ஓடி வந்தான். உட்கார்ந்து பேசிக் கொண்டிருந்த எங்கள் அருகில் வந்து, "வாங்க, வாங்க. ஓடியாங்க! ஓர் அதிசயமான காட்சி. இதைப் போல் நான் பார்த்ததே இல்லை" என்றான்.

வியப்புடன் அவனைப் பின்தொடர்ந்து சென்றோம். அடர்ந்த கானகத்தின் வழியே அவன் எங்களை அழைத்துச் சென்றான். புதர்களையும் பாறைகளையும் கடந்து சென்ற நாங்கள் 'கீச் கீச்' என்ற குரங்குகளின் கூச்சலைக் கேட்டோம். "அதோ பாருங்கள்" என்று ஒரு காட்சியைக் காட்டினான் அந்தக் கசவன்.

இருநூறு முந்நூறு குரங்குகள் இருக்கும். எல்லாம் சத்தமிட்டபடி கும்பலாகக் கூடியிருந்தன. எங்களுக்கு ஒன்றும் விளங்கவில்லை. எங்கள் குழப்பத்தைக் கண்ட அந்தக் கசவன் "நான் விறகு பொறுக்க வந்தபோது இங்கே இத்தனை குரங்குகளும் இத்தனை கூச்சலும் இல்லை. அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தான் சில குரங்குகள் தென்பட்டன. அடிவயிற்றில் ஒட்டிப் பிடித்துக் கொண்டிருக்கும் குட்டியோடு சாவதானமாகச் சென்று கொண்டிருந்த ஒரு தாய்க் குரங்கின் வேகம் திடீரென்று அதிகரித்தது. ஏன் இத்தனை வேகமாக மரத்துக்கு மரம் தாவுகிறது என்று எண்ணிய நான், பீதியைத் தரும் எதையோ அது கண்டிருக்க வேண்டும் என்று தீர்மானித்தேன்" என்றான். மேலும் தொடர்ந்தான்:

"அப்போது தாய்க் குரங்கு ஓடும் வேகத்தைத் தாங்க முடியாத குட்டியின் பிடி தளர்ந்து விட்டது போலும். குட்டி தரையில் பொத்தென்று விழுந்து விட்டது. விழுந்த அதிர்ச்சியில் அது இறந்தும் போய் விட்டது.

"குட்டி கீழே விழுந்த அதே சமயத்தில் ஒரு புதர் மறைவிலிருந்து பயங்கரமான புலி ஒன்று வெளிப்பட்டுக் கீழே விழுந்த குரங்குக் குட்டியை முகர்ந்து பார்த்தது. அவ்வளவு தான்: அதைச் சாப்பிட அது முயற்சிகூடப் பண்ணவில்லை. உடனே எங்கிருந்துதான் அத்தனை குரங்குகள் வந்தனவோ தெரியாது. 'கீச் கூச் கீச்' என்று இருநூறு முந்நூறு குரங்குகள் தபதபவென்று நான்கு பக்கங்களிலிருந்தும் புலியைத் தாக்க ஆரம்பித்தன. புலிதான் அந்தக் குரங்குக் குட்டியைக் கொன்று விட்டது என்று குரங்குகள் நினைத்து விட்டன போலும். திடீரென்று தன் மீது குரங்குக் கூட்டம் பாய்ந்து தாக்கவே புலியும் ஒரு விநாடி செய்வதறியாது திகைத்தது." குரங்குகள் புலியை எதிர்த்துத் திக்குமுக்காட வைக்கும் இந்த அதிசயத்தை நானும் மரக் கிளையில் பதுங்கியபடியே பார்க்கலானேன்.

"புலி உறுமிற்று. வாலைத் தரையில் அடித்தது. பாய்ச்சல் காட்டியது. ஆனால் குரங்குகளோ கொஞ்சமும் அஞ்சவில்லை. மெள்ள மெள்ளப் புலியைச் சூழ்ந்து அமைத்துள்ள வட்டத்தை இறுக்கிக் கொண்டே குரங்குகள் புலியின் அருகே வரலாயின. புலி தப்பிச் செல்ல முயன்றது. குரங்கு அரணைப் பிளந்து கொண்டு புலியினால் வெளியேற முடியவில்லை. எல்லாக் குரங்குகளும் ஏககாலத்தில் புலியைத் தாக்க ஆரம்பித்தன. கடுமையான போர். புலியின் மீது குரங்குகள் தாவி விழுந்து பிடுங்கின. குரங்குகளின் கூச்சல்; உறுமல்; காடே கிடுகிடுக்கும்படியான சத்தம். புலியின் வீராவேசமான தாக்குதலுக்கு இலக்காகிப் பல குரங்குகள் மாண்டன. ஆனால் இறக்கும் ஒரு குரங்குக்கு நாலு குரங்குகள் ஓடிவந்து ஈடு செய்தன. தங்கள் இனத்தான் இறப்பதைக் காணக் காண அவைகளுக்கு ஆவேசம் அதிகமாகி விட்டது. அதோ பாருங்கள்" என்று காட்டினான் கசவன். அப்போதுதான் அந்தக் குரங்குக் கூட்டத்தின் நடுவே தள்ளாடியபடி நிற்கும் புலியை நாங்கள் கண்டோம்.

அந்தக் கசவன் கூறியது உண்மை என்பதை அந்தப் புலியின் நிலை நிரூபித்துக் கொண்டிருந்தது. மூர்க்கத்துக்குப் பெயர் போன புலி, யானையையே தாக்கிக் கொல்லும் புலி தன் வலிமிழந்து தள்ளாடித் தடுமாறிக் கொண்டிருந்தது. அதன் உடலின் பல இடங்களிலிருந்து ரத்தம் ஒழுகிக் கொண்டிருந்தது. புலியின் இரண்டு கண்களையும் குரங்குகள் தாக்கி அதனால் பார்க்க முடியாதபடி அதைக் குருடாக்கி விட்டன. எந்தத் திசையிலிருந்து எப்படிக் குரங்குகள் தாக்குகின்றன என்பதைப் புலியினால் உணர முடியவில்லை. அந்த நிலையில் புலியைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது. புலியைச் சுற்றி அதன் தாக்குதலுக்கு இலக்காகி இறந்த குரங்குகள் விழுந்து கிடந்தன. ஆனால் வெற்றி என்னவோ குரங்குகளுக்குத்தான். நிற்கமாட்டாமல் புலி தரையில் படுத்தபடியே ஈனமான குரலில் உறுமிக் கொண்டிருந்தது. அதுவும் சிறிது நேரம் தான். கொஞ்ச நேரத்தில் அதன் தலை தொங்கி விட்டது. சலனமற்று விழுந்துகிடந்த புலியைச் சுற்றி இருபது முப்பது குரங்குகள் வெகு நேரம் வரை பாராக் காப்பது போலச் சூழ்ந்து நின்று கொண்டிருந்தன. சண்டையிட்ட குரங்குகள் சற்றுத் தூரம் சென்று ஏதோ பச்சிலைகளைத் தின்று விட்டு வந்து காவல் காக்கும் குரங்குகளை அனுப்பி விட்டு, 'டூட்டி' மாற்றிக் கொண்டன.

புலியைக் கொன்றதுகூட எங்களுக்கு ஆச்சரியமாகப்படவில்லை. இறந்த புலிக்கு அவை மாறி மாறிக் காவல் காத்து நின்றதை எண்ணி எண்ணி வியந்தவாறு குடிசைக்குத் திரும்பினோம். கானகத்தின் தன்னிகரில்லாத வீரன் புலி. ஆனால் அதுவும் கூடச் சில சமயங்களில் இப்படிக் கேவலம் குரங்குகளிடம் பலியாவதுண்டு என்பதைக் கேட்டால் நம்ப முடியாது. கண்கூடாகப் பார்த்த பிறகு நம்பாமல், அதை எண்ணி வியப்படையாமல் இருக்க முடியவில்லை.



ஒரு சிறந்த
கட்டழகி

ஒரு சிறந்த கட்டழகியாக விளங்குங்கள். பரிசுத்தமான மேனியழகை அளிக்கக் கூடிய **ஜி-11*** சேர்க்கப்பட்டுள்ள **சிந்தால்** சோப்பை உபயோகித்து குளியுங்கள்.

ஓர் சிறந்த அழகியாக தோற்றமளியுங்கள். **ஜி-11*** சேர்க்கப்பட்டு மனோகர நறுமணமும் மிருதுத்தன்மையும் கொண்ட சிந்தால் சோப், சருமத்தில் உள்ள துர்நாற்றத்தைப் போக்கி பரிசுத்தமாக்குகிறது என்று நிருபணம் செய்யப்பட்டிருக்கிறது. இதனை காரணமாகத்தான் எழிலை விரும்பும் யாவரும் **சிந்தால்** சோப்பை உபயோகிக்கிறார்கள்.

வியர்வை நாற்றத்தைப் போக்கி, எழிலுடன் விளங்கச்செய்யும் சோப்

பூரணப் பாதுகாப்பிற்கு, சிந்தால் சோப்பினுல் குளித்த பிறகு, இனிய மணங்கமழும், இதமான ஜி-11 அடங்கியுள்ள கோத்ரெஜ் சிந்தால் டாய்லெட் பவுடர் உபயோகியுங்கள்.

* படங்களுடன் கூடிய "ஜி-11 என்பது என்ன?" என்ற இலவச புத்தகத்திற்கு கோத்ரெஜ், பம்பாய்-12 என்ற விலாசத்திற்கு எழுதுங்கள்.

கோத்ரெஜ் ஹேர்டானிக்கிலும் ஜி-11 அடங்கியுள்ளது.

Godrej கோத்ரெஜ் சோப்புகளில் முதன்மையான பெயர்

டியூடோரியல் விளம்பரங்கள் பார்டர் கட்டி நிற்கப் பல்வேறு பரீட்சை முடிவுகள் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கி விட்டன. அதை ஒட்டிப் பல திடுக்கிடும் சம்பவங்களும், ரஸமான விளம்பரங்களும் வெளி வருவதுண்டு. அத்தகைய செய்தித் துணுக்குகள் சிலவற்றைச் செப்டம்பர் வீரர் ஒருவர் சேகரித்துத் தந்திருக்கிறார்.

ரிஸல்ட் வந்ததும்...

திருப்பழனம் சீனிவாசன்



மூன்றும் முறையாகப் பரீட்சையில் குண்டடித்து விட்ட தமது சளைக்காத பையனின் நிலையைக் கண்டு சளைத்த தகப்பனார் இனி இதற்கு வேறு வழி இல்லை என்று உணர்ந்து உண்ணாவிரதம் மேற்கொண்டார். அடுத்த முறை சிரத்தையுடன் படிப்பதாக மகனும், தாராளமாக விடைத் தாள் ஃளேட் பரிசீலிப்பதாக உபாத்தியாயர்களும் உறுதியளித்த பின் இன்று பழரஸம் அருந்தினார்.



ஜெயில் வாசத்தில் இருக்கும்போது பரீட்சை எழுதி ஒரு கைதி வெற்றி பெற்றார் என்ற செய்தி கேட்டு ஒரு 'எம். எஸ். எம்.' மாணவர் சிறைவாசம் மேற்கொள்ளத் தீர்மானித்துள்ளார்.

ஐந்தாம் கடவையாகக் 'கோட்' அடித்துவிட்ட அறிவு ரத்தினத்துக்கு அனுதாபக் கூட்டம் நிகழ்த்திக் 'கோட்டாடை' போர்த்தும் முயற்சி நடக்கையில், அந்தக் கஜினியின் மீது கோபம் கொண்ட தகப்பனார் 'வாக்கிங் ஸ்டிக்'கால் அடித்துவிடவே பையன் மயங்கி விழுந்தான். இச்செய்தி தேர்தல் முடிவு போல் பரவிப் பாஸ் செய்த—செய்யாத மாணவ கோஷ்டி கூடி, உதை வாங்கிய ரத்தினத்தை ஊர்வலமாக எடுத்துச் சென்று ஆஸ்பத்திரியில் சேர்ப்பித்தது. அங்குள்ள வேப்ப மர நிழலில் கூட்டம் கூடி, இது சம்பந்தமாக விசாரணைக் கமிட்டி நியமிக்க வேண்டும் என்று மந்திரிக்கு மகஜர் ஒன்று தயாரிக்கப்பட்டது. பின்னர் கூட்டம் அமைதியாகக் கலைந்தது.

இவ்வூர்ப் பள்ளிக்கூடத் தலைமை ஆசிரியர் மூன்று நாட்களாகக் காணப்படவில்லை. தமது பள்ளியில் தேர்வு சத விகிதம் மிகவும் குறைவு என்பதை முன்னதாக உணர்ந்த அவர் முடிவு வருவதற்கு முதல் நாளே ஒரு வார 'அஞ்ஞாத வாசம்' புரிய வெளியூர் புறப்பட்டுவிட்டதாகக் கேள்வி. பூட்டிய வீட்டைக் கண்டு ஆத்திரம் அடைந்த மாணவர் கூட்டம் ஆர்ப்பாட்டம் நிகழ்த்தியது.

பரீட்சை ஒழிப்பு சம்பந்தமான மசோதா ஒன்றை இப்போது பிரேரேபிப்பதன் மூலம் மாணவ சமூகத்தின் ஆதரவைத் தேர்தல் சமயத்தில் பெறலாம் என்ற சமயோசிதக் குறிப்புடன் அரசியல் கட்சி ஒன்றின் ஆலோசனைக் கூட்டம் இதனை விவாதித்தது.



தேர்வு ஜாபிதாவில் தனது நம்பரைக் காணாத மாண

வரை ஒரு நிருபர் பேட்டி கண்டபோது அவர் வெளியிட்ட கருத்தாவது: ''கல் லூரியில் என்னைச் சேர்ப்பதற்காக மார்க் லிஸ்டுடன் அலையப் போகும் எனது தகப்பனாரின் தொல்லையைக் குறைக்க வேண்டும் என்றே நான் தோல்வியைத் தேடிக் கொண்டேன்.''

✿

ரிஸல்ட் வாரத்தில் தேங்காய் விலை தென்னையளவு உயர்வதைத் தடுக்க அர சாங்கம் தக்க நடவடிக்கை எடுக்கும்படி மாணவர் கவுன்சில் ஆட்சியாளரை வேண்டிக் கொண்டது.


✿

'பன்முறை' டியூடோரியல் ஸ்தா பனத்தில் வெற்றி பெற்ற மாணவர் சதவிகிதம் நூறு. —விளம்பரம்

பரீட்சைக்குச் சென்ற மாணவன் எண்ணிக்கை ஒன்று. —வராத செய்தி

✿

உங்கள் பெண் தேர்வு பெற்று விட்டாளா? புஸ்தக மூட்டை ஒழிந்து



ஜாதக மூட்டையைத் தூக்க வேண்டுமே என்ற கவலையற்க. தகுந்த வரனைப் பற்றிய விவரங்களுக்கு இரண்டு ரூபாய் போஸ்டல் ஆர்டருடன் எழுதவும்.

—ஜாதகப் பரிவர்த்தனைக் கேந்திரம்

✿

''கோபாலா, உடனே திரும்பி வந்து விடு. தோல்வி பற்றி வருந்தாதே. தந்தை படுத்த படுக்கை. அதனால் எழுந்து வந்து அடிக்க முடியாது. அடுத்த வீட்டுக்காரருக்கு ஒரே கவலை. காரணம் நீ எடுத்துச் சென்ற தோற் பெட்டி அவ ருடையது.'' —வரி விளம்பரம்

✿

வயது பதினாறு. நிறம் – புறப்படும் பொழுது மாநிறம். உடை – லாண்டிரி ரசீது ஒன்று காணவில்லையாதலால் இன்ன வர்ணம் என்று திடமாகக் கூற முடியாது. பரீட்சை முடிவு வந்ததி



லிருந்து காணவில்லை. அவனைக் கண்டு பிடிப்பவர்கள் அவன் எடுத்துச் சென்ற நூறு ரூபாயில் மிகுதியுள்ள பணத்தை யாவது ஜாக்கிரதையாக வாங்கி வந்து சேர்ப்பிக்கவும். —ஓடுகாலியைப் பெற்றவர்

✿

தயவுசெய்து இன்னும் இரு மாதங் களுக்காவது பரீட்சையில் தோல்வியுற்ற மண்டுகத்தைப் பற்றியோ, மாகாணத் தில் முதலாவதாகத் தேறிக் கல்யாண மார்க்கெட்டில் குதித்த அறிவுக் களஞ் சியங்களைப் பற்றியோ எந்தச் சிறுகதை யும் வெளியிட்டு எங்கள் மனத்தை நோகடிக்க வேண்டாம் எனக் கேட்டுக் கொள்கிறோம். —ஆசிரியருக்குக் கடிதம்

✿


இம்மாதம் இந்த ராசிக்காரர்களுக் குப் பொதுவாக மனக் கவலை இருந்து கொண்டே யிருக்கும். சிலருக்கு அனு கூலமாகவும் பலருக்குப் பாதகமாகவும் பரீட்சை முடிவு அமையக்கூடும். ஆத லால் ரிஸல்ட் வரும் தேதிகளில் பேப்ப ரைப் பார்க்காமல் இருப்பது நல்லது.

—சோதிடப் பகுதி

✿


விநாயகருக்கு வயிற்றுக் கோளாறு. அளவுக்கு மீறினால் அமுதமும் விஷம் என்பதை உணராமல் கொழுக்கட்டை சாப்பிட்டதே காரணம்.

—நாரதர் செய்தி ஸ்தாபனம்



நடிப்பும் நடப்பும்

சியாமா



"குழந்தைகள் என்றாலே எனக்கு உயிர்" என்று சொல்லிக் கொண்டே ஐந்து வயதுச் சிறுவன் ரவியைத் தூக்கி வைத்துக் கொண்டான் பாஸ்கரன்.

"ஒரு முழு நாள் இவனுடன் இருக்கும்படி நேரிட்டால் உங்கள் உயிரே போய் விடும்" என்று சொல்லிச் சிரித்தாள் பக்கத்து வீட்டுக் கல்லூரி மாணவியான சுதா.

திடீரென்று வானத்திலிருந்து மல்லிகை மலர் மாரி பெய்வது போலும் குளுகுளு வென்று தென்றல் வீசுவது போலும் பாஸ்கருக்குத் தோன்றியது. ஆனல்உண்மையில் புரட்டாசியின் ஒன்பது மணி வெயில்தான் பொசுக்கிக் கொண்டிருந்தது.

"விஷமம் செய்யாத குழந்தையும் ஒரு குழந்தையா? ஒரு சிறுவனின் விஷமத்திலிருந்தே அவன் வருங்கால மேன்மையைச் சொல்லிவிட முடியுமே" என்றான் அவன்.

சுதாவுக்குப் பெருமையாக இருந்தது. அவளுக்குப் பதினொன்று வயதான பின் பிறந்த அவளுடைய ஒரே சகோதரன் ரவி.

விஷயம் பாஸ்கருக்குத் தெரியும்.

"பேசும் பொற் சித்திரம்" என்று குழந்தையைக் கொஞ்சினான்.

"உங்களுக்குப் பாரதி பிடிக்குமா?" என்று கேட்டாள் சுதா, கண்கள் மலர.

"பிடிக்குமா? அதென்ன அப்படிக் கேட்கிறீர்கள்? கவிதைக்காகத்தானே நான் உயிரே வாழ்கிறேன்" என்றான் பாஸ்கர்.

"மன்னிக்க வேண்டும். தமிழில் பேசுவதோ அல்லது எழுதுவதோ குறைவு என்று — அதுவும் ஆங்கிலப் படிப்பில் மோகம் கொண்ட மாணவ மாணவிகள் என்னும் இக்காலத்தில்.."

"அந்தக் காலம்தான் மலையேறிப் போச்சே. இந்தக் காலத்தில் நாம் பேசுவது, எழுதுவது, வாழ்வது, மூச்சுவிடுவது — எல்லாமே தமிழில்தானே, தமிழுக்காகத்தானே? அந்தத் தமிழின் தனிச் சிறப்பே அதன் கவிதையில்தானே இருக்கிறது? இப்படியிருக்க, அதில் ஒருவனோ அல்லது ஒருத்தியோ ஈடுபடுவதில் விந்தை என்ன இருக்கிறது? ஈடுபடாமல் இருந்தால் விந்தை என்று ஒப்புக் கொள்கிறேன்" என்று பிரசங்கமே செய்தான் பாஸ்கர்.

"எனக்கும் கவிதை என்றால் உயிர்.... அது போகட்டும், நீங்கள் கவிதை புனைந்திருக்கிறீர்களா? உங்கள் பெயர், அல்லது புனைபெயர்—"

"பாஹுலேயனின் கவிதைகள் ஏதாவது உங்கள் கண்களில்பட்டிருக்கிறதா?"

"பாஹுலேயனின் கவிதைகளா? அவருடைய எழில் நடை எனக்கு மிகவும் பிடித்ததாயிற்றே. போன வாரம்கூட அவருடைய பாலைவனப் பூஞ்சோலையைச் சித்தாமணியில் படித்தேன்."

"கவிதை எப்படி இருந்தது?"

"எப்படியிருக்கும்? பாலைவனப் பூஞ்சோலையாகத்தான் இருந்தது...ம்.. சற்றுப் பொறுங்கள்...அப்படியானால்.....

ஒரு வேளை......நீங்கள்தான் அந்தப் பாஹுலேயனோ?''

தலையைப் பெருமையுடன் அசைக்க முயன்றான் பாஸ்கர். ஆனால் முடிய வில்லை. அவனுடைய காது ரவியின் கைகளில் சிக்கியிருந்தது.

''பக்கத்து வீட்டிலேயே பிரசித்தி பெற்ற பாஹுலேயன் இருப்பது தெரியாமல் என் வாழ்நாள் வீண் நாளாகி விட்டதே! அப்பா வந்தவுடன் சொல்ல வேண்டும்'' என்றாள் சுதா மிகுந்த மகிழ்ச்சியுடன்.

''ஆமாம். அப்பா எங்கே?'' என்று கேட்டான் பாஸ்கர்.

''அப்பா, அம்மா இருவருமே தாம்பரத்தில் இருக்கும் சித்தியைப் பார்த்து வரப் போயிருக்கிறார்கள். ராத்திரி எட்டு மணிக்குத்தான் திரும்புவார்கள். நான் இன்று ஸ்டேடியத்தில் நடக்கும் கிரிக்கெட் டெஸ்ட் மாட்சுக்குப் போவதாக இருந்தேன். என் சிநேகிதி ஒருத்தி வேறு எனக்காக 'கேட்'டில் காத்திருப்பாள். கடைசி நிமிஷத்தில் ரவியை என் கழுத்தில் கட்டி விட்டு அப்பாவும் அம்மாவும் தாம்பரம் சென்று விட்டார்கள். அதுதான் என்ன பண்ணுவது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருக்கிறேன்.''

இதெல்லாம் அதிகாலையிலேயே பக்கத்து வீட்டிலிருந்து காற்றில் மிதந்து வந்து பாஸ்கரை எட்டியிருந்த விஷயம்.

''அப்போ நீங்கள் கிளம்புங்கள். மாட்ச் ஆரம்பிக்க இன்னும் முழுசாக ஒரு மணி நேரம்கூட இல்லை. இந்த ஒரு நாளாவது ரவியுடன் பொழுது போக்கும் பாக்கியம் எனக்குக் கிடைக்கட்டும்'' என்றான் பாஸ்கர்.

''அத்தனை சிரமம் உங்களுக்குக் கொடுப்பது நியாயமா என்றுதான் தயங்குகிறேன்'' என்று இழுத்தாள் சுதா.

''சிரமம் என்று சொல்வானேன். என்னிடம் அவனை விட்டுச் செல்ல நம்பிக்கையில்லை என்று சொல்லுங்கள். ஆனால் நீங்கள் டெஸ்ட் மாட்சுக்குப் போனாலும் போகாவிட்டாலும் ரவியை உங்களிடம் விடுவதாக உத்தேசமில்லை'' என்றான் பாஸ்கர் தீர்மானமாக.

''அய்யய்யோ! உங்கள் காதைக் கருணைக் கிழங்காகக் கடித்து விட்டானே! டே, ரவி! மாமாவோட காதை விடப் போகிறாயா, இல்லையா?'' என்று அதட்டினாள் சுதா.


பதிலுக்கு ரவி பாஸ்கரின் இன்னொரு காதையும் எட்டிப் பிடித்துக் கொண்டான். பாஸ்கரின் கைகளோ பழி வாங்கப் பதறிக் கொண்டிருந்தன.

''அப்போ நிஜமாகவே என்னைப் போகச் சொல்கிறீர்களா?'' என்றாள் சுதா, ஆவலுடன். கிரிக்கெட், அங்கு காத்துக் கொண்டிருந்த அவள் தோழியின் நினைவு, பாஹுலேயனைத் தெரிந்து கொண்ட செய்தியை அவளுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற ஆவல், எல்லாமாக அவளை உந்தித் தள்ளின.

இதற்குப் பதில் ஒன்றும் சொல்லாமல் தன் அறையை நோக்கி நடந்தான் பாஸ்கர், தோளில் ரவியுடன்.

வீட்டிற்குள் நுழைந்த பாஸ்கர் சற்று ஆத்திரத்துடனேயே ரவியைக் கீழே இறக்கிவிட்டு, கண்ணாடி முன் நின்று தன் காதுகளுக்குக் 'கோல்ட் க்ரீம்' தடவிச் சிகிச்சை செய்து கொண்டிருந்தான்.

நீங்கள்



கதவின் அருகிலிருந்து அவனைப் பின் தொடர்ந்த அவன் நண்பன் கௌரி சங்கர் ''என் வாழ்நாள் முழுதுமே இதை மறக்க முடியாது'' என்றான் நன்றி உணர்ச்சி பொங்க.

''அவ்வளவு மோசமாக இருக்கா, என்ன?'' என்றான் பாஸ்கர் காதைக் கவலையுடன் தடவிக்கொண்டே.

''நான் உன் காதைச் சொல்லவில்லை. நீ செய்த உதவியைச் சொன்னேன்'' என்றான் கௌரி சங்கர்.

''இனிமேல் சுதாவைப் பற்றிய உன் காதல் புராணம் என் காதில் விழுமென்று தோன்றவில்லை. இந்த வாண்டுப் பயல் என் காதை அந்த அளவுக்குத் திருகி விட்டான்'' என்றான் பாஸ்கர் காதுகளை வருடிக்கொண்டே.

'அப்போ மேற்கொண்டு நான் என்ன செய்ய?'' என்று திகைத்தான் கௌரி சங்கர்.

''அநேகமாக அவள் இன்னும் பஸ் ஸ்டாண்டில்தான் இருப்பாள். ஓடிப் போய் நீயும் அவளுடன் பஸ்ஸில் ஏறிக் கொண்டு, 'பாஹுலேயனோட ரசிகன், ரூம்மேட்' என்ற முறையில் அவளுடன் பேச்சுக் கொடுத்து உன்னை அறிமுகப் படுத்திக் கொள். கேட்டில் தோழியை அவள் சந்திக்கவொட்டாமல் கிரிக்கெட் மைதானத்துக்குள் அவளை அழைத்துச் செல்வது உன் சமர்த்து. அதைச் சாதித்தால் ஒரு நாள் முழுதுமே அவளும் நீயும்தான். கிரிக்கெட் விளையாட்டில் அந்த வசதி இருக்கத்தான் இருக்கு. உன் இதயத்தை அவளுக்குத் திறந்து காட்டவோ, அல்லது அதை எடுத்தே அவள் காலடியில் வைக்கவோ, எல்லாம் உன் சாமர்த்தியம்'' என்றான் பாஸ்கர்.

மாலையில் மிகுந்த உற்சாகத்துடன் வீடு திரும்பிய கௌரிசங்கர், தலையில் ஒரு பெரிய கட்டுடன் ஈஸிசேரில் பாஸ்கர் படுத்திருப்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

''பிற்பகல் இரண்டு மணி யிருக்கும். ரவிக்கு ஒரு கப் பால் கொடுத்து விட்டு ஈஸிசேரில் சாய்ந்தபடியே கண்ணயர்ந்திருப்பேன். அறையின் ஒரு மூலையில் விளையாடிக் கொண்டிருந்த அவன் திடீரென்று கிரிக்கெட் பந்தால் என் தலையைக் குறி வைத்திருக்கிறான். கண்ணைத் திறந்தால் கோடி சூரியன்கள் மண்டைக் குள்ளிருந்து சிதறுவது போன்ற ஓர் அதிர்ச்சி. அதன் விளைவுதான் இந்தக் கட்டு'' என்று பாஸ்கர் விளக்கம் செய்தான்.


''ரவி என்ன ஆனான்?'' என்றான் கௌரி சங்கர் கவலையுடன்.

''உனக்காகத்தான் அவனை உயிரோடு விட்டேன். மூன்று மணிக்கு அவர்கள் வீட்டுத் தாயி கேட்டைத் திறந்து கொண்டு உள்ளே நுழைவதைக் கண்டேன். 'ஆதிமூலமே' என்றலறிக் கொண்டு அவள் கையில் ஒரு ரூபாயையும் ரவியையும் கொடுத்து உயிர் தப்பினேன்....ஆமாம், நீ போன காரியம்?'' என்றான் பாஸ்கர், நண்பனை நோக்கி ஆவலுடன்.

''விரும்பியபடியே நடந்தது அவள் தோழியின் கண்களிலிருந்து தப்ப டெரஸ்ஸிற்கே அவளை அழைத்துச் சென்று விட்டேன். நேரம் போனதே தெரியவில்லை. ஆனால் நீ உன்னை ஒரு கவிஞன் என்று அறிமுகம் செய்து கொள்ளாமல் இருந்திருக்கலாம்.''

''ஏனோ?''

ரிடையரானால்...



"முழுக்க முழுக்க அவள் உன்னைப் பற்றியும், உன்னுடைய கவிதைகளைப் பற்றியுந்தான் பேசிக் கொண்டிருந்தாள். அவளே பல கவிதைகளைப் புனைந்திருக்கிறாளாம். இன்றிரவோ, அல்லது நாளைக்கோ உனக்கு ஒழிந்தபோது, அவை பற்றி உன்னுடைய அபிப்பிராயம் வேண்டுமாம்."

"லீவு போட்டுவிட்டு ஊரைவிட்டே நான் ஓட வேண்டியதுதான்."

"அப்போ என் விஷயம் என்ன ஆவது? எங்கள் கல்யாணத்துக்கு நாள் வைத்த பிறகுதான் நீ என்னிடமிருந்து தப்ப முடியும்."

"வேறு இடம் பாரென்று அதற்குள்ளேயே நோட்டீஸ் வேறு கொடுத்து விட்டாயா? ஆனால் அதற்குள் ரவியும், பாஹுலேயனுமாகச் சேர்ந்து என்னைத் தீர்த்துக் கட்டி விடுவார்கள்."

"அதனால்தான் நான் சொல்ல வந்தேன். உன்னையே ஒரு கவிஞன் என்று சொல்லிக் கொள்ளாமல், உனக்குக் கவிதையில் ஈடுபாடுண்டு என்று மட்டும் நீ சொல்லியிருக்கலாம்."

"நீதானே அவள் ஒரு கவிதைப் பைத்தியம். அதனால் அவளோடு பேசக் கொடுக்க எனக்கும் கவிதையில் ஈடுபாடுண்டு என்று சொல்லச் சொன்னாய். அஸ்திவாரத்தை மேலும் பலமாக்க நானே ஒரு கவிஞன் என்று சொல்லி வைத்தேன். இப்படி என் பேரிலேயே அது திரும்பும் என்று நான் எப்படி எதிர்பார்த்திருக்க முடியும்?"

"ஆனால் உண்மை என்னவோ உன்னுடைய அந்த அதிகப் பிரசங்கந்தான் விஷயத்தை இப்போ சிக்கலில் கொண்டு வந்து விட்டிருக்கு. பாஹுலேயனின் கவிதைகளைப் படித்து நீ அறிந்து புரிந்து கொள்ளும் சிரமம் போகட்டும். நாங்கள் பேசிக் கொண்டிருந்த ஐந்து மணி அவகாசத்தில் நான்கு மணி ஐம்பத்தைந்து நிமிஷங்கள் அவள் உன்னையும் உன் கவிதைகளையும் பற்றித்தான் பேசிக் கொண்டிருந்தாள்."

"அப்போ நான் இந்த இடத்தைக் காலி பண்ண வேண்டியதுதான். எனக்கும் கவிதைக்கும் ஸ்நானப் பிராப்தி கூடக் கிடையாது. உனக்கே தெரியும். அவள் இந்தட பாஹுலேயனுடைய கவிதை ஒன்றைக் கொண்டு வந்து என்னிடம் அர்த்தம் கேட்டால்....?"

"அவஸ்தைதான். ஆனாலும் அவசரப்பட்டு ஒன்றும் செய்து விடாதே. அவள் ஏதாவது கவிதையுடன் உன்னோடு பேச வந்தால், உனக்கு 'மூட்' சரியாக இல்லை என்று சொல்லி அனுப்பி விடுகிறேன். இந்த 'மூட்' சாதாரணமாகக் கவிஞர்களுக்கு உதவும் ஒரு பெரிய கவசம். பிறகு சமயோசிதம் போல் பார்த்துக் கொள்ளலாம்" என்றான் கௌரி சங்கர்.

நான்கைந்து நாட்களுக்குப் பின், சுதா தன் கவிதைகளுடன் அவர்கள் அறைக்கு வந்தபோது, தனியாக வராமல் தன் தந்தையையும் அழைத்து வந்திருந்தாள். கௌரிசங்கர்தான் அறையில் இருந்தான். பாஸ்கர் ஆபீஸிலிருந்து அப்போது வரவில்லை.

"உங்கள் நண்பர்..?" என்றாள் அவள் வாசற்படியிலேயே தயங்கிக் கொண்டு. அச்சமயம் அவள் முகத்தில் பரவிய ஏமாற்றம் கௌரிசங்கரை என்னவோ செய்தது.

"வாருங்கள், உள்ளே வாருங்கள், வாசலிலேயே நிற்கிறீர்களே?" என்று வந்தவர்களை வரவேற்று உபசரித்தான் கௌரிசங்கர். "பாங்கில் குமாஸ்தாவென்றால் ஆறு மணிக்கு வந்துவிட முடியுமா? அவன் வீடு திரும்பச் சாதாரணமாக எட்டு, ஒன்பது மணி வரை ஆகிவிடும்" என்றான்.

குமாஸ்தா என்று அவன் அப்படி அழுத்தந்திருத்தமாகச் சொன்னது தனக்குப் பிடிக்கவில்லை என்பதைக் காட்டுபவன்போல் சுதா முகத்தைச் சுளித்தாள்.

"உங்களுக்கு எங்கே உத்தியோகம்?" என்று குறுக்கிட்டார், சுதாவின் தந்தை, இதை ஒன்றுமே உணராமல்.

"நான் ஒரு பிரபல மருந்துக் கம்பெனியின் நகரப் பிரதிநிதி. எனக்கு ஆபீஸ் வேலை போன்ற பந்தங்கள் கிடையாது. இஷ்டப்பட்டால் போகலாம், இஷ்டப்பட்டால் வரலாம்" என்றான் கௌரிசங்கர் சற்றுப் பெருமையாக.

"ஆனாலும் கணக்குப் பார்த்தால் உங்கள் உத்தியோகத்துக்கு அலைச்சல் அதிகமாகவே இருக்கும். அதுவும் கல்யாணம், குடும்பம் என்று ஏற்பட்டால் உங்களைப் போன்ற உத்தியோகங்களில் இருப்பவர்களின் குடும்பங்களுக்குத் தொல்லைதான். அதைவிடச் சம்பளம் சற்றுக் குறைவாக இருந்தாலும் பாங்க் உத்தியோகத்தில் அம்மாதிரிச் சிரமங்கள் கிடையாது பாருங்கள்" என்றார் சுதாவின் தந்தை.

அன்று அதற்குப் பின் அவர்கள் படிப்பு, ஊர், குடும்பம் போன்ற பல விஷயங்களைத் தெரிந்து கொண்டுதான் சுதாவின் தந்தை அங்கிருந்து கிளம்பினார். அவர் கேள்விகள் ஓரளவு கௌரிசங்கருக்கு நம்பிக்கையைக் கொடுத்தாலும், தன்னுடன் பாஸ்கரையும் சேர்த்து அவர் விசாரித்தது தான் அவனுக்குப் பிடிக்கவில்லை.

இரவு பத்து மணிக்கு அறைக்குள் வந்த பாஸ்கர், "அவர்கள் எத்தனை நேரம் தங்கி யிருந்தார்கள்?" என்று கேட்ட போது கௌரிசங்கர் மூர்ச்சைபோட்டு விழாததுதான் பாக்கி. தான் எட்டு மணி சுமாருக்கு அறைக்குத் திரும்பியதாகவும் கேட்டிலிருந்தே அப்பாவும் பெண்ணும் உள்ளே பேசிக்கொண்டிருந்ததைக் கண்டு நழுவி விட்டதாகவும் பாஸ்கர் சொன்னான். அது கௌரிசங்கருக்கு ஒருவிதத்தில் ஆறுதலைத் தந்தாலும், இவன் கவிஞன் என்ற பொய்யை எப்படி அவிழ்ப்பது என்ற கவலையில் மூழ்கியிருந்தான்.

குடும்ப வாழ்க்கைக்குத் தன் ஊதியம் போதாது என்ற எண்ணத்தால் தன் வாழ் நாட்கள் முழுதுமே பிரம்மச்சாரியாகக் காலம் கழிக்கத் திட்டமிட்டிருந்த பாஸ்கரையும் அதே கவலை வாட்டிக் கொண்டிருந்தது. நண்பனுக்கு உதவ ஏதோ ஒரு பொய் சொல்லப் போய், ஒரு வேளை அது கல்யாணம் என்ற விலங்கைத் தனக்கே பூட்டி விடுமோ என்ற கிலி அவனைப் பிடித்துக் கொண்டது.

ஒரு நாள் அவன் ஆபீசுக்குக் கிளம்பி, கேட்டை அடைந்தபோது, சுதா ஒரு பத்திரிகையுடன் வழியில் நிற்பதைக் கண்டு திடுக்கிட்டான்.

"சொல்லவே இல்லையே?" என்றாள் சுதா, நாத் தழுதழுக்க.

"என்ன, என்ன?" என்று அவன் தடுமாறினான், தன் குட்டு வெளிப்பட்டு விட்டதோ என்ற கவலையில்.

"சிந்தாமணியின் பொங்கல் இதழில் தமிழ்நாட்டின் தலைசிறந்த கவிஞர்களின் போட்டோக்களையும், அவர்கள் கவிதைகளையும் பிரசுரிக்கப் போகிறார்களாமே! இந்தப் பத்திரிகையில் அவர்கள் அது பற்றிச் செய்துள்ள விளம்பரத்தில் உங்கள் பெயரையும் பார்த்தேன்" என்றாள் சுதா குரலில் மகிழ்ச்சி கொந்தளிக்க.

பொங்கலுக்கோ பதினைந்து நாட்கள் கூட இல்லை. அவனுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. அவன் பொய் அத்தனை சீக்கிரமா அம்பலத்துக்கு வர வேண்டும்? விஷயம் வெளியானால் எப்படி அவள் முகத்திலும், அவள் தந்தையின் முகத்திலும் விழிப்பது?

அவளோ அவன் தடுமாற்றத்தை உணராமல் பேசிக்கொண்டேபோனாள்.

"விளம்பரத்தைப் பார்த்தவுடனேயே அப்பாவிடம் சிந்தாமணியின் பொங்கல் மலருக்கு மணியார்டர் பண்ணச் சொல்லி விட்டேன். நீங்கள் அதற்கான கவிதை எழுதியாகி விட்டதா, அல்லது இனிமேல்தானா? பாவம், பாதி நாள்

இரவு பத்து மணிக்கு வீடு திரும்புகிறீர்கள். எப்படி எங்கே இதற்கெல்லாம் உங்களுக்கு நேரம் கிடைக்கிறது?''

பாஸ்கருக்கோ பூமியே காலின் கீழிருந்து நழுவுவதுபோன்ற உணர்ச்சி.

''அய்யய்யோ! லேட்டாயிடுத்தே'' என்று கைக்கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே பதறினான் பாஸ்கர்.

''அப்போ போய் வாருங்கள். ஆனால் இன்று மாலை அவசியம் நீங்கள் ஐந்து மணிக்கு வீடு திரும்பியாக வேண்டும். என் கவிதைகளைப் பார்த்து நீங்கள் இன்னும் உங்கள் அபிப்பிராயத்தைச் சொல்லவில்லை என்பதை மறந்து விடவேண்டாம்'' என்று சொல்லிக் கொண்டே அவள் வழியிலிருந்து நகர, பாஸ்கரும் ஒரே தாவலில் விடுதலையை நோக்கிப் பாய்ந்தான்.

அறையினுள்ளே, ஜன்னலருகே, இந்தக் காட்சியைக் காணச் சகிக்காமல் கண்டு கொண்டு முக க்ஷவரம் செய்து கொண்டிருந்த கௌரிசங்கர், முகத்தில் மூன்று நான்கு இடங்களில் கத்தியால் வெட்டிக் கொண்டு விட்டதில் விந்தை என்ன......?

அன்றிரவு பாஸ்கர் அறைக்குத் திரும்பியபோது பதினொரு மணி இருக்கும். அடுத்த நாள் அவன் அந்த இடத்தைக் காலி பண்ணி மயிலாப்பூரிலேயே நாச்சியப்பத் தெருவிலுள்ள ஒரு நண்பனின் அறைக்குச் சென்றபோது சரியாகப் பொழுதுகூட விடியவில்லை.

அதற்கு முன் இரவு பாஸ்கரிடமிருந்து அவனுடைய அந்தத் தீர்மானத்தை அறிந்தபோது கௌரிசங்கர் ஒன்றும் ஆட்சேபிக்கவில்லை. அன்று காலை கேட்டிற்கருகே அவன் கண்ட காட்சி பாஸ்கரைக்கூட அவனைச் சந்தேகிக்கச் செய்திருக்க வேண்டும். அடுத்து வந்த நாட்களில்தான் மேற்கொண்டு என்ன செய்வதென்று புரியாமல் கௌரிசங்கர் தத்தளித்தான். அதற்கேற்றாற் போல் தங்களிடம் சொல்லிக் கொள்ளாமல் கூடப் பாஸ்கர் அந்த இடத்திலிருந்தே போய்விட்டதைக் கௌரிசங்கரிடமிருந்து அறிந்தது முதல் சுதாவும் அவள் தந்தையும் அவனுடன் பேசுவதையே நிறுத்திவிட்டார்கள். அச் சூழ்நிலையில் மேலும் தான் அங்கிருந்தால் சிந்தாமணியின் பொங்கல் மலர் வெளிவந்தபின் நிலைமை மேலும் மோசமாகிவிடலாம் என்ற பயத்தில் கௌரிசங்கர் பொங்கலுக்கு இரண்டு நாட்களுக்கு முன்னாலேயே மாம்பலத்தில் ஓரிடம் பார்த்துக்கொண்டு சென்றுவிட்டான்.

பட்டப்பகலில் பகிரங்கமாகத்தான் பெட்டி படுக்கையுடன் அவன் அங்கிருந்து கிளம்பிப் போனான். தான் அப்படிப் போவதைச் சுதா, அவள் அப்பா, அம்மா எல்லோரும் ஜன்னலிலிருந்து பார்த்துக் கொண்டிருந்ததை அவன் அறிவான். கடைசி நிமிஷத்தில் கூட அவர்கள் ஏதேனும் பேசித் தான் அங்கேயே தங்கும்படி நேரக்கூடாதா என்றுதான் அவன் பிரார்த்தனை. ஆனால் அவர்களோ அவன் போவதைப் பார்த்ததாகவே காட்டிக் கொள்ளவில்லை.

அன்று மாலை கடற்கரையில் கௌரிசங்கர் பாஸ்கரிடம் நடந்ததைச் சொன்னபோது, பஸ்ஸிலோ, ரோட்டிலோ எதேச்சையாக அப்பாவையோ, பெண்ணையோ சந்திக்கும்படி நேரிட்டால் நிலைமையைத் தான் எப்படிச் சமாளிப்பது என்ற பயம் பாஸ்கரைத் தொற்றிக் கொண்டது. தன்னை அவர்கள் எளிதில் அடையாளம் கண்டு கொள்ளாமலிருக்கத் தாடி வளர்க்கத் தீர்மானித்தான். அத்துடன் ஆஞ்சநேயரின் வழிபாட்டில் மேலும் தீவிரமாக ஈடுபட்டு வியாழன், சனி அவன் கோயிலை வலம் வரலானான்.

இப்படி நான்கைந்து மாதங்கள் ஓடி விட்டன. பாஸ்கர் மயிலாப்பூரிலும் கௌரிசங்கர் மாம்பலத்திலுமாக நிலைத்து விட்டார்கள். நண்பர்கள் இப்போது ஒருவரை யொருவர் சந்தித்துக் கொள்வதுகூட அபூர்வமாகி விட்டது.

அன்று சனிக்கிழமை. வழக்கமாக இரவு எட்டு மணிக்குக் கோவிலுக்குப் போய் வரும் பாஸ்கர், மாலை ஆறு மணிக்கே பிராகாரத்தை வலம் வந்து விட்டுச் சுவாமியைக் கும்பிட்டுக் கொண்டிருந்தான். திடீரென்று பின்புறத்திலிருந்து ''அக்கா, அக்கா! மாமா பூச்சாண்டி வேஷம் போட்டுண்டு அதோ நிற்கிறு பாரு'' என்ற குரல் கேட்டுத் திடுக்கிட்டுத் திரும்பினான். கோவில் வாசலில் ஒரு கையில் ரவியும் இன்னொரு கையில் புஷ்பத்தையும் பழத்தையும் தாங்கியிருந்த பிளாஸ்டிக் கூடையுமாகத் தோற்றமளித்தாள் சுதா.

அவள்தான் முதன் முதலில் பேசினாள். ஆனால் ஏனோ அவள் கண்கள் பளபளத்திருந்தன.

''எதற்கு இந்த வேஷமெல்லாம்?''

''முன்னொரு சமயம் டைபாய்டில் நான் படுத்தபோது அம்மா வேண்டிக் கொண்டாளாம். நானும் ரொம்ப நாள் தட்டிக் கழித்துப் பார்த்தேன், அம்மா விடுவதாக இல்லை'' என்று மென்று விழுங்கினான்.

''பொங்கல் மலரைப் பார்த்தேன்'' என்றாள் சுதா, அவன் மனப் போராட்டத்தை உணராமல்.

அவன் பதில் சொல்ல முடியாமல் திணறினான்.

''பல நாட்கள் வரை ஏன், எதற்காக அப்படி ஒரு அசட்டுப் பொய்யைச் சொன்னீர்கள் என்பது எனக்கு மட்டும் புரியவில்லை. கடைசியில் ஒரு நாள் திடீரென்று உண்மை மனத்தில் பளிச்சிட்டது. என்னைத் தெரிந்து கொள்ள, என்னோடு பேசிப் பழக நீங்கள் அப்படிச் சொல்லியிருக்க வேண்டும். எளிதில் உண்மை வெளிவரக் கூடியது என்பதை மறந்து என்னோடு பேசிப் பழக உங்களுக்கு இருந்த ஆர்வத்தைப் புரிந்து கொண்டேன். அன்று முதல் உங்களைச் சந்தித்து இப்படி மனம் விட்டுப் பேச ஒரு சந்தர்ப்பத்துக்காகத்தான் நான் காத்துக் கொண்டிருந்தேன்.

''கடவுள் இல்லை, இல்லை என்று மக்கள் சுலபமாகச் சொல்லி விடுகிறார்கள். ஆனால் இந்த ஆஞ்சநேயரைப் போல் பிரத்தியட்சக் கடவுளை எங்கே காண முடியும்? உங்களை எப்படியாவது என் முன் கொண்டு வந்து நிறுத்த வேண்டும் என்று நான் அவரை வேண்டிக் கொண்டு முழுசாக ஒரு மாதம்கூட ஆகவில்லை. அதற்காகத் தான் நான் கொஞ்ச காலமாக இப்படிச் சனிக்கிழமை தோறும்—'' என்று சொல்லிக் கொண்டே வந்தவள் அப்போதுதான் தன் பேச்சின் போக்கை உணர்ந்தவள் போல் வாயடைத்து நின்றாள். அவள் முகம் குங்குமமாகச் சிவந்து விட்டது.

குருக்கள் ஆஞ்சநேயருக்கு வடைமாலை சூட்டித் தீபாராதனை காட்டிக் கொண்டிருந்தார். அத்திசையில் திரும்பிய பாஸ்கர், அவரே இப்படிச் சூழ்ச்சியில் ஈடுபடலாமா, தன் பிரார்த்தனை என்னவாயிற்று என்பது போல் ஆஞ்சநேயரைப் பார்த்தான். தீபத்தின் ஒளியில் ஆஞ்சநேயரின் முகம் சுடர்விட்டுப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. மனிதனின் நீதிமன்றத்தைப்போல் தன் சந்நிதானத்திலும் யாராவது ஒருவருக்குத் தானே தான் சாதகம் செய்ய முடியும் என்று அந்தப் பிரம்மச்சாரிக் கடவுள் சொல்வது போல் பாஸ்கருக்குத் தோன்றியது.......ஆனாலும் நேற்று மாலை லஸ்ஸில் ஆஞ்சநேயர் கோவிலுக்கருகில் பாஸ்கரைச் சந்தித்து அவன் கல்யாணத்துக்காக என் பாராட்டுதலை நான் தெரிவித்த போதுகூட, அவன் அதை அந்தப் பிரம்மச்சாரிக் கடவுளின் சூழ்ச்சி என்றுதான் குறிப்பிட்டான்.

போராட்டம்

"மூன்ஷி"

ஆசிய யுத்தத்தின் தொடக்கத்தில் ஜப்பானியர் அதிவேகமாக வெற்றியுடன் முன்னேறியது சரித்திரப் பிரசித்தி. அதற்குப் பல காரணங்கள் உண்டு. ''ஆசிய நாடுகளின் சுபிட்சக் கூட்டு வாழ்க்கை'' என்னும் கொள்கையை அடிப்படையாகக் கொண்டு அவர்கள் செய்த தந்திரமான பிரசாரம் அன்னியர் காலடியில் மிதிபட்டுத் தவித்த எளிய நாடுகளின் மனத்தைக் கவர்ந்தது. ஜப்பானியரின் தீவிர ராஜ விசுவாசமும் தற்கொலை மனப்பான்மையும் 'நேச தேசத்தாருக்கு'ப் புரியாத விஷயங்கள். உதாரணமாக, முதலைகள் நிறைந்த ஓர் ஆற்றின் ஒரு கரையில் ஜப்பானியரும், மறு கரையில் நேச தேசத்தாரும் முகாம் போட்டிருக்கையில், நேச தேசத்தார் பாலமில்லாத இடத்தில் ஜப்பானியரை எதிர்பார்க்கவில்லை; ஜப்பானியரோ, ''நூறு முதலைகள் உள்ள நதியில் முந்நூறு பேர் இறங்கி நீந்தினால், குறைந்தது இருநூறு பேர்கள் அக்கரை அடைவோம்'' என்று கணக்கிட்டார்கள். உடனே தம் மாட்சிமை தங்கிய சக்கரவர்த்தியை மனத்தால் வணங்கி, உயிரைத் திருணமாகக் கருதி அவர்கள் தண்ணீரில் இறங்கினார்கள். நேச தேசத்தாருக்கு உயிர் வெல்லமாக இருந்தது; ஜப்பானியருக்கோ அது கூட்டல் கழித்தலில் ஓர் எண்ணிக்கையாக மாத்திரமே தோன்றியது.

பிரிட்டிஷார் சிங்கப்பூரின் பாதுகாப்பு ஏற்பாடுகளைப் பற்றி மிகவும் பெருமை கொண்டிருந்தனர். அதன் அழகிய தெருக்களுக்கும் கட்டடங்களுக்கும் துறைமுகத்திலுள்ள வசதிகளுக்கும் ஆபத்தே நேர முடியாது என்று நினைத்திருந்தார்கள். அவர்கள் பரந்த கடல் புறத்திலிருந்து மாத்திரமே தாக்குதலை எதிர்பார்த்தார்கள்; மலேயாவில் ஜொஹோரை நோக்கிப் பீரங்கி வகையறா அதிகம் வைக்கவில்லை. ஆனால் பல தந்திரங்களிலும் குறுக்கு வழிகளிலும், பிராணத் தியாகத்திலும் கைதேர்ந்த ஜப்பானியர் ஜொஹோர் பக்கத்திலிருந்து எதிர்பாராத விதங்களில் தாக்கித் துறைமுகத்தையும் அதன் பாதுகாப்புச் சாதனங்களையும் உபயோகமற்றதாக்கித் தீவைக் கைக்கொண்டனர்.

தோல்வியின் முதல் அதிர்ச்சி சற்றுத் தணிந்ததும் நேசதேச ராணுவ டாக்டர்கள் ஜப்பானிய அதிகாரிகளின் மேல்பார்வையில் ஆஸ்பத்திரிகளுக்கு அனுப்பப்பட்டனர். அவர்களுள் காப்டன் முகுந்தலால் கபூர் என்னும் இளைஞர் ஒருவர். காயமடைந்தவர்கள் ஆறாகப் பாய்ந்து வந்தனர். இரவு பகல் என்று கருதாமல் கபூரும் மற்ற டாக்டர்களும் உழைத்தார்கள். இரண்டு மூன்று மணி நேரம் கூடத் தூங்க வசதி கிடைக்கவில்லை, அவர்களுக்கு. காயங்களுடன் புதுக் கூட்டம் வந்த வண்ணமிருந்தது. ''மன்னிக்கவும் டாக்டர் சார்! (கோமென்னஸாய் ஸென்ஸை-ஸான்) வேலை இருக்கிறது'' என்று சொல்லி ஜப்பானிய ராணுவ அதிகாரி எழுப்பி விடுவான்.

நெருக்கடியான சமயத்தில் ஜனங்களின் நடத்தை பலவிதப்பட்டது, வெகு விசித்திரமானது. நெஞ்சு தெறிக்கும் முழக்கத்துடன் தலைக்குமேல் குண்டு வீச்சு. கட்டடங்கள் இடிந்து குவியும். தலைகால் தெரியாமல் ஜனங்கள் கதறிக் கொண்டு இங்குமங்கும் ஓடுவார்கள். பெட்டிகள் சிதறித் தெறிக்கும். அவற்றினுள் உள்ள சாமான்கள் நாலாபுறமும் சிந்திக் கிடக்கும். பண நோட்டுக்களாக இருந்தால் பார்த்து நிற்கும் சிலர் சட்டைப் பையில் திணித்துக் கொள்வார்கள். அடுத்த குண்டு பணத்துடன் ஆளைத் தீர்த்துவிடலாமே, அதுவுமின்றி இருபத்தேழு மைல் நீளம் பதினான்கு மைல் அகலமுள்ள அந்தத் தீவில் அச்சமயம் அந்நோட்டுகளுக்குச் செலாவணியில்லையே, தங்களுடைய சிவிலியன் மக்களை மலேயாவுக்குக் கடத்தியபின் க்ரா ஜலசந்திப் பாலத்தை பிரிட்டிஷார் தகர்த்து விட்டதால் தீவிலிருந்து வெளியேறச் சுலபமான மார்க்கமில்லையே— என்ற எண்ணமெல்லாம் உதிக்காது....

இது இவ்வாறிருக்க, ஆச்சரியத்திலும் ஆச்சரியம், தாக்கப்பட்ட ஒரு கன்னிப் பெட்டியில் புகைந்து கொண்டிருந்த புஸ்தகங்களைத் தண்ணீர் தெளித்துக் காப்பாற்றி அவற்றுள் ஒன்றை எடுத்து ஓர் இளைஞன் ஆவலுடன் மனப்பாடம் செய்து கொண்டிருந்தான். அப் புஸ்தகம் ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தாரால் பிரசுரிக்கப்பட்ட ஓர் உபநிஷத். போர் முனைகளுக்குப் புத்தகங்கள் அனுப்பிய கமிட்டியார் கதைப் புத்தகங்களுடன் தர்ம நூல்களையும் அனுப்பி வைத்தார்கள்.

இப்பொழுது ஜப்பானியருக்கு ஓர் இடைஞ்சல் ஏற்பட்டது. வெற்றியின் வேகத்தில் அவர்கள் அகலக் கால்வைத்து விட்டார்கள். கைப்பற்றிய இடங்களை

முறைப்படி நிர்வகிக்க அவர்களால் முடியவில்லை. ராணுவக் கைதிகள் சுமார் அறுபதினாயிரம் பேரும் சிவிலியன்கள் கணக்கில்லாமலும் இருந்தனர். அந்தச் சமயத்தில் ஒரு புது இயக்கத்தை ஆரம்பித்து வைத்து நிர்வாகப் பொறுப்பைப் பகிர்ந்து கொள்ள அங்கு வந்து சேர்ந்தார் நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ், இந்திய தேசியப் படையின் ஸ்தாபகர். ஜப்பானிய முள் புதரில் சிக்கிப் பிரிட்டிஷார் தவியாய்த் தவிக்கும் அதே சமயத்தில் அவர் ஜப்பானிய அதிகாரிகளுடன் அந்நியோன்யமாக இருப்பதும் இந்திய தேசியப் படையை நிறுவுவதும் பத்திரிகை உலகை அதிரச் செய்தன. அந்தக் காலத்தில் பிரிட்டிஷார் மீதிருந்த துவேஷத்தாலும் 'குள்ளர்'களிடம் வெள்ளையர் அடைந்த வெட்கக்கேடான தோல்விகளாலும் பல இந்தியருக்கு ஜப்பானியரிடம் அபார பக்தி இருந்தது. பழைய நோய் போய்ப் புது நோய் பிடித்தால் நிலைமை முன்னிலும் பயங்கரமாக இருக்கலாம் என்று நினைப்பவர் சிறுபான்மையோரே.

காப்டன் கபூர் தம் உடனடி மேலதிகாரி பிரிட்டிஷ்காரனா, ஜப்பானியனா, இந்திய தேசியப்படை உத்தியோகஸ்தனா என்பதைப் பற்றி அதிகம் நினைக்கவில்லை. கண்ணெதிரே காயம்பட்டோர் பலர்; கைக்கருகே சிறு அளவில் சில மருந்துகள்; அவற்றைக் கொண்டு தம்மாலான ஆதரவு அளித்துவந்தார்.

உணவு குறைவு; தூக்கம் குறைவு; பல கவலைகள். சிங்கப்பூருக்கு வந்தபிறகு அவர் வீட்டுக்கு மூன்று கடிதங்கள் எழுதினார்; வீட்டிலிருந்து ஒரு கடிதம் கிடைத்தது; அதன் பிறகு எல்லாத் தகவலும் நின்று போய் விட்டது. நல்ல துணி மணி கிடையாது. பாதரக்ஷை கிடையாது. வைட்டமின் குறைவால் மூட்டுக்கள் வீங்கி வலித்தன. ஈறுகளிலிருந்து ரத்தம் கசிந்தது; பார்வை மங்கிற்று; மனத்தளர்ச்சி ஏற்பட்டு இருள் சூழ்ந்தது.

இந்திய தேசியப் படையில் சேர்ந்திருந்த கம்பவுண்டர் ரங்கய்யர் தம் பழைய சோற்றுப் பானையிலிருந்து ஒரு டம்ளர் புளித்த நீர்



முதலாளி பேசுகிறார்: சம்பளத் தேதியன்று ஒருவர் ஆபீசுக்கு வராவிட்டால் 'லீவ்' லெட்டர் எழுதி யனுப்ப வேண்டாம். அவர் நிச்சயமாகப் படுமோசமான உடல் நிலையில் வீட்டில் படுத்திருப்பார் என நம்பலாம்.



ஃ

இந்த ஆபீசில் நான்கு பேர் வேலையை நான் ஒருவனே செய்கிறேன் என்று ஒரு தொழிலாளர் சொன்னால் அதுவரையில் அந்த நான்கு பேர் ஒரு வேலையுமில்லாமல் இருந்திருக்கிறார்கள் என்று அர்த்தம்.

தினமும் டாக்டர் கபூருக்குக் கொடுத்து உதவினார்.

சில நாட்கள் சாப்பிட்டபின் உடம்பில் தெம்பு ஏற்பட்டதை உணர்ந்த கபூர் அவருக்குத் தம் நன்றியறிதலைத் தெரிவித்தார்.

ஒரு நாள் ஐ. என். ஏ. அதிகாரி ஒருவர் கபூரை அழைத்து, அன்புடன் பேசினார். ஏராளமான நல்ல உணவளித்தார். - ஆஹா! சுத்தமான உணவு சுடச்சுட வயிறு புடைக்கச் சாப்பிட்டு எத்தனை யுகங்கள் ஆகிவிட்டன. — கையெழுத்துக்காக ஒரு காகிதத்தை நீட்டி, 'தேசியப் படையில் அவர் ஏன் இன்னும் சேரவில்லை, பிரிட்டிஷாரின் தொடர்பை ஏன் விட்டு விடவில்லை?' என்று விசாரித்தார்.

காப்டன் கபூர் மரியாதையாகவே, "நான் ஒரு வைத்தியன். அரசியல் விஷயம் எனக்குப் புரிவதில்லை. என்னை இங்கு அனுப்பின எஜமானனிடம் நான் சில வாக்குறுதிகள் செய்தேன். அவன் நிலை கெட்டிருக்கும்போது அவனைத் துன்பப் படுத்துவது அழகல்ல. பத்தாண்டுகளுக்கு முன், ஆங்கிலேயனின் கை வலுத்திருந்தபோது, நான் ஒத்துழையாமை இயக்கத்தில் சேர்ந்து அவனை எதிர்த்து நின்றேன், சிறை சென்றேன். இப்பொழுது அவன் படுத்திருக்கும்போது அவனை உதைக்க மாட்டேன்" என்றார்.

அப்படிச் சொன்ன கபூரை பிரிட்டிஷார் தம் குறிப்புக்களில் ஐ. என். ஏ. பட்டியலில் கையெழுத்திட்ட விசுவாசத் துரோகியாக வர்ணித்திருந்தனர். அவர்மேல் ருஜுவாகாத வேறு பல குற்றங்களையும் சுமத்தி யிருந்தனர். பிரிட்டிஷாருக்குக் காப்டன் முகுந்தலால் கபூர் இன்னும் கட்டுப்பட்டவர்; தம் விசுவாசப் பிரமாணத்தை அவர் வாபஸ் பெற்றுக் கொள்ளவில்லை. ஆகவே ஜப்பானியருக்கும் ஐ. என். ஏ. அதிகாரிகளுக்கும் அவர் வேண்டாத மனிதராகப் பட்டார். அது ஒரு விபரீதமான வரலாறு.

கபூரின் நடத்தையை வேவு பார்க்க ஒரு போலீஸ் அதிகாரி நியமிக்கப்பட்டிருந்தான். அவனை ஸ்மித் என்ற பெயரால் குறிப்பிடுவோம். கபூருக்கு ஆதியில் அந்தச் சமாசாரம் தெரியாது. ஸ்மித் டாக்டரின் நண்பன்போல் நடந்து கொண்டான். அவர் படிப்பை மெச்சினான். அவருடைய இன்னல்களுக்காக அனுதாபம் தெரிவித்தான். ஹோட்டலுக்கும் தன் வீட்டுக்கும் அழைத்துச் சென்று நல்ல உணவும் பானமும் அளித்தான். கபூருக்கு அதெல்லாம் மிக ஹிதமாக இருந்தது. ஒரு நாள் ஸ்மித் அவரைத் தன் மனைவிக்கு அறிமுகப்படுத்தினான். தான் வலை போட்டுப் பிடிக்க முடியாத ரகசியங்களை டயானா கண்டறிய வேண்டுமென்பது அவன் எண்ணம்; அவ்விதத்தில் அவன் அவளைப் பலமுறைகள் உபயோகித்திருக்கிறான்.

ஸ்ரீமதி ஸ்மித் ஒருவகையில் கட்டழகி. இன்பமளிக்கும் சக்தியே உருவெடுத்து வந்தாற்போல் அவள் கபூரின் வாழ்க்கையில் உற்சாகமூட்டி வந்தாள். பசிநேரத்தில் நல்லுணவு, ஓய்வு நேரத்தில் எளிய கானம், கபடமற்ற சிரிப்பு ஆகியவற்றால் கபூரின் துன்பத்தைத் துடைத்து வந்தாள். அவர்களது சம்பாஷணை முக்கியமாக இந்தியாவைப்பற்றி இருந்தது. ஸ்ரீமதி ஸ்மித்துக்குக் காந்திஜியைப்பற்றி நுட்பமான விவரங்களை அறிய ஆவல். அவர் கால்களை மடித்து உட்கார்ந்திருக்கும் முத்திரையில் பெரிய படம் ஒன்று சுவரில் தொங்கியது. கபூர் அதை நமஸ்கரித்து ஊக்கத்துடன் பல உதாரணங்களைக் கொண்டு அவளுடைய கேள்விகளுக்கு விடையளித்தார்.

ஒருநாள் அவர்கள் பேசிக் கொண்டிருக்கும்போது மூன்று வயதுப் பெண் கிட்டி அங்கு வந்தாள்.

டாக்டரின் கண்கள் அவளை அன்புடன் பருக அவருடைய பேனா கிட்டியின் படத்தை வரையலாயிற்று. அதைக் கவனித்த பெண் "அதென்ன?" என்று வெடுக்கெனக் கேட்டாள்.

"இதுவா? உன் படம்" என்றார்.

புது ஆவலுடன் திரும்பி அவள் படத்தைப் பார்த்தாள். முகம் கீழ் நோக்கி இருந்தது; கண்கள் குறு குறுவென்று மேல் நோக்கி இருந்தன;

பந்கள் ஆள்காட்டி விரலை நோகாமல் கடித்தவண்ணம் இருந்தன. அந்த மூத்திரையையும் மூருந்தலால் படம் பிடித்தார்.

மிஸஸ் ஸ்மித் "காப்டன் கபூர்! தத்ரூபமாய்ப் படம் வரைகிறீர்களே! உங்கள் மனைவியின் படம்—அதாவது பொதுவான தோற்றத்தை வரைய முடியுமா?" என்று கேட்டு விட்டு, பிறகு குடும்பத்தாரை நினைவூட்டும் அந்தப் பேச்சு இங்கிதமறியாத பிழையோ என்ற அர்த்தத்தில் மௌனமானாள்.

கபூர் புடவை, ரவிக்கை யணிந்த பெண் உருவத்தை நகைகள் குங்குமப் பொட்டு சகிதம் வரைந்து காட்டினார்.

மிஸஸ் ஸ்மித் "எவ்வளவு அழகாக இருக்கிறாள். இதை நான் வைத்துக் கொள்ளலாமா?" என்று கேட்டு வாங்கிக் கொண்டு "புடவை கட்டும் பாணியை நீங்கள் எனக்குக் கற்பிக்க வேண்டும்; எனக்குச் சரியாகவே வர மாட்டேன் என்கிறது" என்றாள்.

அதற்குள் அவள் கணவன் பத்துப் பன்னிரண்டு சிகரெட்டுகளைக் கொளுத்தி யாகி விட்டது; ஐந்தாறு கொட்டாவி யும் விட்டாகி விட்டது. கபூர் அரை மனத்துடன் எழுந்து உணவுக்காக நன்றி கூறி அதிக நேரம் தங்கி விட்டதற்காக மன்னிப்புக் கோரினார். விருந்தளித் தவர்கள் ஏற்ற உபசாரமொழிகள் ஒப்புவித்து, அடிக்கடி வந்து மகிழ் விக்கும்படி கேட்டுக் கொண்டனர். டாக்டர் பாதி விளையாட்டாக, "ஆதியில் இருந்ததற்கு எனக்கு இப்போது அவகாசம் அதிகம்; ஆனால் மிஸ்டர் ஸ்மித் பல ஜோலிக்காரர். என்னை உபசரித்துக் கொண்டே விருந்தால் எத்தனை முக்கியமான அலுவல்கள் அந்தரத்தில் நின்று விடுமோ! இந்த இரண்டு மணி நேரத்தில் அவர் இங்கு மாட்டிக் கொண்டிருப்பதை உளவறிந்து எத்தனை போக்கிரிகள் அக்கிரமச் செயல் நிகழ்த்தியிருக்கிறார்களோ?" என்றார்.

போலீஸ் அதிகாரி "காகிதத்தில் - அதாவது நியமப்படி இருபத்தி நான்கு மணி சேவகனாக இருக்கலாம். ஆனால் ரத்தத்துக்கும் சதைக்கும் ஓய்வு வேண்டாமா?" என்று சொல்லித் தன் நடத்தைக்குச் சமாதானம் தேடினான்.

அவன் மனைவி "அவரைப் பற்றிக் கவலை வேண்டாம்; டாக்டர்....காப்டன் என்று அழைப்பதைக் காட்டிலும் டாக்டர் என்றால்தான் என் மனத்தில் தேன் சொட்டுகிறது. என் பாட்டனார் —தாயின் தகப்பன் — ஒரு டாக்டர். காற்றானாலும் மழையானாலும் குதிரையேறிக் கரடுமுரடான பாதைகளில் கிராமம் கிராமமாகச் செல்வாராம். அங்கு டாக்டர் வந்து விட்டார் என்பதைத் 'தெய்வம் வந்து விட்டது' என்ற பாவனையுடன்தான் ஜனங்கள் சொல்வார்களாம். எனக்குக் கூட டாக்டர் படிப்பு படிக்க வேண்டும் என்று ரொம்ப ஆசை: ஏதோ சொல்ல வந்தேன். ஆமாம்; அவர் ஒரு சமயம் இருப்பார்; ஒரு சமயம் இருக்க மாட்டார்; அதற்காக நீங்கள் யோசிக்க வேண்டாம். எனக்கும் பொழுது போக வேண்டாமா? இல்லாவிட்டால் இந்நாட்களில் இந்த ஊரில் வாழ்வது எப்படி? ஆகா! எப்படியிருந்த சிங்கப்பூர் எப்படியாகி விட்டது!" என்றாள்.

"டயானா சொல்வதும் சரிதான்!" என்றான் அவள் கணவன்.

"சரி, நன்றி; சௌகரியப்படி பார்த்துக் கொள்வோம்" என்றார் டாக்டர்.


அதற்குப் பிறகு ஏழு எட்டு முறை அவருக்காக டயானா ஆள் அனுப்பினாள். ஒன்றிரண்டு சமயங்களில் அவருக்கு அவகாசம் கிடைக்க வில்லை. அழைப்பை ஏற்றுக் கொண்ட இதர சமயங்களில் மூன்று தடவைகள் மிஸ்டர் ஸ்மித் வீட்டில் இருக்க வில்லை.

ஸ்ரீமதி ஸ்மித் இதுதான் செய்வாள், இதுதான் பேசுவாள் என்ற நிச்சயமில்லை. இட்டிலிக்கு அரைத்து வார்த்துப் பலவித வியஞ்சனங்களுடன் தின்பது வரை விவரமாய்க் கேட்பாள்; படங்கள் வரைந்து காட்டச் சொல்வாள். தீபாவளி, பொங்கல், நவராத்திரிக் கொலு, சரஸ்வதி பூஜை முதலியவற்றின் கொள்கை, செய்முறை ஆகியவை பற்றி ஒவ்வொரு நுணுக்கமும் துருவித் துருவிக் கேட்டு அறிவாள்; பொழுது போக்குக்காக ஒரு காதில் வாங்கி இன்னொரு காது வழியே வெளியே விடமாட்டாள். "அயல்நாடுகளில் மனிதர்களை யந்திரமாகப் பாவிக்கிறார்கள்; தர்ம உணர்ச்சியுள்ள உங்கள் தேசத்தில் யந்திரங்களையும் மிருகங்களையும் தெய்வமாகக் கொண்டாடுகிறீர்கள்" என்று விமரிசனம் செய்வாள்; அடிக்கடி மகாத்மா காந்தியின் வாழ்க்கையைப் பற்றிக் கேட்பாள்.

ஆஸ்பத்திரியில் சகாக்களும் சிப்பந்திகளும் அவர்கள் சந்திப்பைப் பற்றி வெளிப்படையாகப் பேசுகிறார்கள் என்பது அவருக்குத் தெரியும். அதோடு அவரது சகாக்கள், அந்தப் பழக்கம் உயிருக்கே உலை வைத்து விடும் என்று பேசிக்கொண்டதும் தெரியும். அதற்கேற்றாற்போல் அவருடைய கடைசி நாள் ஆகவேண்டியது — அன்று மயிரிழையில் தப்பினார்.....

மூன்று நாட்களாகக் கிட்டிக்குச் சுரம்: ஒரு நிமிஷமும் சூடு தணியவில்லை. பிதற்

தென்னகத்திற்கு
1936ம் வருடம் முதல்
சேவை புரிகிறோம்




25 வருடங்கட்கு முன்பு, 1936ம் வருடம் நவம்பர்
மாதம் 23ம் தேதி, மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ் லிமிடெட் நிறுவப்
பட்டது. இந்த இருபத்தைந்து வருடங்களாக நாங்கள்
உற்பத்தி செய்யும் மல்கள், லாங்கிளாத்துகள், உயர் தரத்திற்கும்
பளிச்சென்ற வெண்மைக்கும் புகழ்பெற்று வருகின்றன.
இப்போது எங்களது மல்களும் லாங்கிளாத்துகளும்
சிக்கனத்திற்கும், நீடித்த உழைப்பிற்கும் சிறந்தவையென
தென்னாடெங்கும் எல்லோரும் அறிந்ததே.
இந்த மங்களகரமான தருணத்தில் வருங்காலத்தில் நாங்கள்
மேலும் அளிக்கக்கூடிய சேவையில் கவனமுற்றிருக்கிறோம்.
மேட்டூர் இண்டஸ்ட்ரீஸ்
லிமிடெட்
மேட்டூர் அணை ரயில்வே ஸ்டேஷன், சேலம் ஜில்லா
தென்னகத்தில்
25 வருடகால சேவை
மானேஜிங் ஏஜண்டுகள் :-
W. A. பியர்ட்ஸெல் அண்ட் கம்பெனி
(பிரைவேட்) லிமிடெட்
6, செகண்ட் லைன் பீச், சென்னை-1.

றலும் புலம்பலும் எழுந்து குதிப்பதும் பயங்கரமாக இருந்தன. பனிக் கட்டிகளும் மருந்துகளும் விரும்பிய விதம் கிடைக்க வில்லை. அவர்கள் குடும்ப வைத்தியன் நம்பிக்கை யிழந்தான். டாக்டர் கபூர் திருட்டுத்தனமாக ஆஸ்பத்திரியிலிருந்து சக்தி வாய்ந்த ஒரு மருந்து எடுத்துச் சென்று ஊசி போட்டு ஸ்ரீமதி ஸ்மித்திடம் ''தைரியம் இழக்கக் கூடாது'' என்று சொல்லிக் கொண்டிருந்தார். குழந்தையின் முகத்தில் சற்று ஜீவகளை தென்பட்டது; 'அம்மா' என்று ஈனஸ்வரத்தில் கூப்பிட்டான். அந்த இனிய தேன் காதில் பாய்ந்து ஒரு யுகம் ஆகிவிட்டது! தாய் கொஞ்சும் மொழிகளுடன் பெண்ணை உச்சி முகர்ந்து முத்தமிட்டபின் சிலுவையின் முன் மண்டியிட்டு நன்றியறிவித்து, ஆவேசத்துடன் எழுந்து டாக்டரின் மடியில் முகத்தைப் புதைத்துக் கொண்டு உடல் குலுங்க அழுதாள். அவள் உத்வேகம் சற்று அடங்கியதும் கபூர் ஆறுதல் மொழிகள் கூறினார்.

அவள் கீச்சுக் குரலில், ''''என்னிடம் அன்பு காட்டுங்கள்'' என்று கெஞ்சினாள்.

''எனக்கா அன்பில்லை? என் அந்தஸ்தையும் அரைகுறையான சுதந்திரத்தையும் பணயம் வைத்து அல்லவா இப்பொழுது இங்கே... இன்னும் இரண்டு ஊசி போட்டால்...''

அவள் ''அந்த அன்பில்லை. நீர் மனுஷரா, மரக்கட்டையா?'' என்று சிறிது நடுங்கினாள்.

முகுந்தலால் கபூர் மரக்கட்டையல்ல. ஆனால் சுவரில் தொங்கும் காந்தி படத்தின்மேல் அவர் பார்வை விழுந்தது. கபூர் காப்பாற்றப்பட்டார். சட்டென ஒதுங்கினார். டயானா தூண் போல் சாய்ந்தாள். அதே க்ஷணம் சடார் சடார் என்ற ஒலி தெறித்தது; தீப் பாம்புகளின் பாய்ச்சல்; படத்தின் கண்ணாடி படபடவென்று நொறுங்கி உதிர்ந்தது; படத்தில் புகையும் துவாரங்கள். யுத்தப் பழக்கம் பெற்ற டாக்டர் ஜன்னல் மட்டத்துக்குக் கீழே கவிழ்ந்தார். படம் இறந்தது; கபூர் பிழைத்தார். ஊர்ந்து கொண்டே கிட்டி யிருக்கும் அறைக்கு அவர் சென்றார். வெறி நீங்கிய தாயும் அங்கு வந்து சேர்ந்தாள். அவர் அவள் கையைப் பிடித்து இழுத்துப் பின்புறக் கதவைக் காட்டி ''என் கணவனின் வேலை; சீக்கிரம் ஓடும்'' என்று எச்சரிக்கை செய்தாள்.

மறு நாள் போலீஸ் அதிகாரி ஸ்மித்தைத் துப்பாக்கியால் சுடப்பட்டு இறந்தான். 'அது அவன் துப்பாக்கியே தானாம். ஆனால் தற்கொலையில்லையாம். அவன் மனைவியின் இடது கையில் ஒரு தோட்டா சிராய்த்திருக்கிறதாம். அவர்களுடைய குழந்தை இறந்து கிடக்கிறதாம். தாய் அழுது அறியாதவள், கண்ணீரும் கம்பலையுமாக வெறி பிடித்திருக்கிறாளாம்' என்ற வதந்தி ஊரெல்லாம் உலவிற்று.

கபூர் முன் நாள் மாலை ஸ்மித்தின் வீட்டுக்குச் சென்றிருந்தது ரகசியமல்ல. பலர் இரு நிகழ்ச்சிகளையும் இணைத்துச் சந்தேகங்களைக் கிளப்பினார்கள். ஒரு பிரிட்டிஷ் கர்னல் கபூரிடம் நடந்த சமாசாரத்தையெல்லாம் தனிப்பட்ட முறையில் விசாரித்தான். கபூர் உண்மையைக் கூறினார். ''அப்படியானால் ஸ்மித்தைக் கொன்றது யார்? டயானாவா?'' — என்ற கேள்விக்கு ''நான் இல்லை. தகுதி உள்ளவர்கள் உண்மையைக் கண்டு பிடிக்கட்டும். நியாயப் பிசகாக எனக்குத் தண்டனை கிடைத்தாலும் தலைவிதி என்று ஏற்றுக் கொள்ள வேண்டியதுதான்'' என்றார்.

கபூர் ஜப்பானியரால் சிறையில் அடைக்கப்பட்டார். கர்னல் தொடர்ந்து ஒன்றும் செய்ய முடியவில்லை.

சிங்கப்பூரில் கைதிகள் அதிகமாகி விட்டதாலும் நகர நிர்வாகத்துக்குப் பயிற்சி பெற்ற ஆட்கள் போதாததினாலும் பசிபிக் மகா சமுத்திரத்திலுள்ள பல்வேறு சிறு தீவுகளைக் கைதி முகாம்கள் ஆக்குதல் என்று ஜப்பானியத் தலைவர்கள் தீர்மானித்தனர். அதற்காகச் சில துருப்புக் கப்பல்கள் ஒதுக்கி வைக்கப்பட்டன. அவற்றில் ஒரு கப்பலில் காப்டன் கபூர் வெளியேற்றப்பட்டார்.

பிரயாணத்துக்காக அணிவகுத்து நிற்கும் கூட்டத்தை அவர் பார்வையிட்டார். ஒரு மனிதக் கடல்! புறப்படுவதற்குத் தயாராக இருக்கும் ஒரு கப்பலில் எண்ணூறு பேர்கள் சௌகரியமாகச் செல்லலாம்.

நான்கு மடங்கு ஐந்து மடங்கு ஏறுதல் பலவிதத்திலும் ஆபத்தானது அல்லவா?

பிரயாணத்தின் தொடக்கத்தில் ஓர் ஆழாக்குச் சோறும் அதே அளவு தண்ணீரும் ஒவ்வொரு கைதிக்கும் காலையிலும் மாலையிலும் கொடுக்கப்பட்டன. செல்லச் செல்ல இந்த அளவுகள் குறைந்து கொண்டு வந்தன. ஆனால் அதை உபயோகிக்கும் முறையில் அவர்களுக்கு முழு சுதந்திரம் உண்டு. ஆழாக்கு ஜலத்தை வயிறு புடைக்கக் குடிக்கலாம், பிறருக்குத் தானம் செய்யலாம், அதில் குளிக்கலாம், துணி துவைக்கலாம், கக்கூசுக்கு எடுத்துச் செல்லலாம். சிறை அதிகாரிகள் அவ்விஷயத்தில் தலையிடவில்லை. தண்ணீர்

குறைவாக இருக்கிறது என்று மாத்திரம் புகார் செய்யக்கூடாது. அது அவர்களுக்கு அடியோடு பிடிக்காத சங்கதி. அதிருப்தியுடன் பேசுவோருக்குத் தண்டனை உண்டு.

கபூருக்குச் சிகிச்சைச் சாலையில் வேலை கொடுக்கப்பட்டிருந்ததால் மற்றவர்களைக் காட்டிலும் அவருடைய துன்பம் சற்றுக் குறைவே. இருந்த போதிலும் அது மறக்க முடியாத ஒரு துர்ச் சொப்பனமே. அப்படியும் இப்படியுமாகக் கப்பல் ஒரு நாள் ஒரு தீவை அணுகியது. ஆஸ்திரேலியரிடமிருந்து ஜப்பானியர் கைப்பற்றிய தீவு அது.

பிற்கால வாழ்க்கையைப் பற்றிக் கபூர் கற்பனைகள் செய்து கொண்டிருக்கும் போதே கிழக்கேயும் வடக்கேயும் அடிவானத்தில் சில கறுப்புக் கோடுகள் தோன்றிச் சீக்கிரத்தில் போர்க் கப்பல்களாக உருவெடுத்தன. அதோடு ஜப்பானிய ராணுவ அதிகாரிக்குக் கீழ்க்கண்ட கருத்துடன் ஓர் எச்சரிக்கை திரும்பத் திரும்ப ஆங்கிலத்திலும், ஜப்பானிய மொழியிலும் வயர்லெஸ் மூலம் ஜப்பானியர் உபயோகிக்கும் அலைவரிசையில் அளிக்கப்பட்டது. ''உன் கப்பலைப் பற்றிய எல்லாத் தகவலும் எங்களுக்குத் தெரியும். அதை மூழ்கடிக்க நாங்கள் விரும்பவில்லை. தோல்வியை ஒப்புக் கொண்டு தாழ்ந்து போய் விடுவதே உனக்கு க்ஷேமம். உன் பீரங்கிக் குண்டுகளைக் காட்டிலும் அதிக தூரம் எங்கள் குண்டுகள் செல்லக் கூடியவை என்பதை நீ அறிவாய். எங்கள் வெடி குண்டு விமானங்களும் வந்து கொண்டிருக்கின்றன. ஆகவே தாழ்ந்து போ.''

அதற்குள் ஜப்பானிய ஜீரோ விமானங்கள் அங்கு வந்து சேர்ந்தன. அவை மெலிந்த உடலும் அதிக பலமும் தந்திரமான மூளையும் உள்ள விளையாட்டுக்காரனைப் போல் மேலும் கீழும் வலது புறமும் லாகவத்துடன் நகரக் கூடியவை. அவற்றைக் கண்டால் கனத்த நேச தேச விமானங்களுக்குச் சற்றுக் கவலையே. வானத்தில் சுற்றிச் சுற்றி வெறி நாய்ச் சண்டைகள் பல நடந்தன. இரு சாராரின் பல விமானங்கள் சேதமடைந்து பயங்கர வேகத்துடன் கீழ் நோக்கிப் பாய்ந்து இரைச்சலுடன் கடல் அடிக்குச் சென்றன.

இதற்கிடையே நேச தேசக் கப்பல்கள் விளையாட்டுக் காட்டி ஜப்பானிய பீரங்கிகளை முழங்கும்படி தூண்டின. ஆனால் குண்டுகள் இலக்குகளை எட்ட முடியாமல் கடலில் விழுந்து வீணாயின. ஒரு நேச தேசத்துக் கப்பல் ''என் பீரங்கியின் சக்தியைப் பார்'' என்று வயர்லெஸ் மூலம் எச்சரிக்கை செய்து, கைதிக் கப்பலின் மேலே சென்று அதற்கப்பால் கடலில் விழும்படி ஒரு குண்டை வீசிற்று. அதற்குள் சில நேச தேசக் கப்பல்கள் கிழக்கேயும் தெற்கேயும் சென்று கைதிக் கப்பலைச் சூழ்ந்தன. ஜப்பானியரின் வெடிகுண்டுகள் தீர்ந்து போய் விட்டன என்று நினைக்க ஹேது ஏற்பட்டதும் நேச தேசக் கப்பல்கள் ஜாக்கிரதையாக அதை நெருங்கின. ஜப்பானிய விமானங்கள் ''எதிரிக்குப் பன்மடங்கு சேதம் விளைவித்துப் பழி வாங்கினோம்'' என்ற திருப்தி அடைந்தாலும் அனைத்தும் மடிந்தன. அதை அறிந்த அமெரிக்க வெடி விமானங்கள் கைதிக் கப்பலுக்கு நேர் மேலே தோன்றின. முன் போலவே தாழ்ந்து போகும்படி அளிக்கப்பட்ட எச்சரிக்கை வீணாயிற்று. ஜப்பானிய அதிகாரி தன் சக்கரவர்த்தி ஹிரோ ஹிடோவின் படத்துக்கு வணங்கித் தன் கப்பலின் அடி வயிற்றில் அமைக்கப்பட்டிருந்த சக்தி வாய்ந்த வெடி குண்டின் திரியைப் பற்ற வைக்கும்படி உத்தர விட்டான். அப்புறம்? பயங்கரமான ஒரு முழக்கம். இனம் புரியாத ஒரு பேர் அதிர்ச்சி. ஓ....ஹோ...ஹோ...... என்ற பேரிரைச்சல். பெரிய கொப்புளங்களைக் கிளப்பிக் கொண்டு தீராத பசி கொண்ட கடல் அந்தக் கப்பலைத் தன்னுள் இழுத்துக் கொண்டது.

சுற்றிலும் இருந்த போர்க்கலங்கள் நிலைமையைப் புரிந்து கொண்டதும், கைதிக் கப்பல் இருந்த ஸ்தலத்தை நெருங்கின. சிதறிப் போய் மிதக்கும் பல சாமான்களுக்கிடையே பல நூறு மனித உடல்கள் தென்பட்டன.

பிழைத்தவர்களில் காப்டன் முகுந்தலால் ஒருவர்; ஆனால் அவருடைய வலது கணுக்கால் எலும்பு முறிந்து போயிருந்தது. கப்பலில் அவர் சிகிச்சை பெற்றார். அவருடைய திறமைகள் வெளியானதும் அவர் பலருக்கும் வேண்டியவரானார்.

சில நாட்களுக்கெல்லாம் அவர் விமானம் மூலம் ஆஸ்திரேலியாவை அடைந்து அங்குள்ள ராணுவ ஆஸ்பத்திரி ஒன்றில் வேலையில் அமர்ந்தார். போர் வெற்றிகரமாக முடிவடைந்ததும் அவர் தாய் நாடு வந்து சேர்ந்தார். அவர் தம் வீட்டை அடையும்போது அங்கு ஒரு சிறு வரவேற்புக் கூட்டம் கூடியிருந்தது. குசலப் பிரச்னங்கள் ஒரளவு முடிவடைந்ததும் தம் அறைக்குச் சென்று அங்கிருந்த மகாத்மாஜியின் முன் மண்டியிட்டு விழுந்து கண்ணீர் பெருக வணங்கினார். ஸ்மித்தின் வீட்டில் படம் அடைந்த துர்க்கதி அவர் கண் முன்னால் நின்றது.

வளர்ந்த பாசம்

வியார்ஜி

"டேய், ராமா! லங்கையைத் தாண்டுடா பார்க்கலாம்."

ராமன் லங்கையைத் தாண்டிற்று!

"எங்கே இன்னொரு வாட்டி."

மறுமுறையும் தாண்டிற்று.


தாண்டுவது 'லங்கையையா சமுத்திரத்தையா என்று எனக்குச் சந்தேகம் வந்தது.

என்னுடைய சந்தேகம் நீடிப்பதற்கு இடங் கொடுக்காமல் இரண்டு மூன்று முறை குச்சியாகிய 'லங்கை'யை ராமன் லாகவமாகத் தாண்டி விட்டது.

"எங்கே ராமா ஐயாவுக்குக் காவடி ஆடிக் காண்பிடா, பார்க்கலாம்!"

'லங்கை'யே இப்பொழுது காவடியாக மாறி விட்டது!

ராமன் தன் எஜமான் கையிலிருந்து 'காவடி'யை வாங்கித் தன் மெலிந்த விரல்களால் கழுத்தின் மேல் வைத்துப் பிடித்துக் கொண்டு சாய்த்துச் சாய்த்து ஆடியது.



அடுத்த விளையாட்டை ஆரம்பிப்பதற்கு முன்னால் தன் கைப் பையிலிருந்து கொஞ்சம் பட்டாணியை எடுத்துப் போட்டான் குரங்காட்டி.

ராமன் அவசரம் அவசரமாக அவற்றைப் பொறுக்கி வாயில் அடக்கிக் கொண்டது.

மெலிந்து நீண்ட விரல்களால் ராமன் பட்டாணியைப் பொறுக்குவது பார்ப்பதற்குச் சற்று விநோதமாக இருந்தது: அதனுடைய விரைவும், ஒளி மங்கிய கண்களால் நாலாபுறமும் அது சுற்றிப் பார்ப்பதும் . எல்லாம் 'குரங்கு சேஷ்டை' என்பதற்குப் பொருத்தமாகத்தான் இருந்தன.

"எங்கே ராமா மலை ஏறிப் போடா, பார்க்கலாம்."


ராமன் குச்சியாகிய 'காவடி'யைக் கழுத்தின் மீது வைத்துக் கொண்டே வாசற்படிகளை ஒவ்வொன்றாக ஏறியது: ஆடி ஆடிக் கொண்டே ஏறியது.

நடுவில் ஒரு படியில் எங்கோ ஒரு மூலையில் ஒரு பட்டாணி கிடப்பது அதன் கண்ணில் பட்டு விட்டது போலும்: உடனே, தனது மும்முரமான காவடி ஆட்டத்தையும், 'மலை ஏற்றத்'தையும் மறந்து விட்டு விரைந்து சென்று அதைப் பொறுக்கியது.

குரங்காட்டிக்கு இது பொறுக்கவில்லை:

ராமனின் இடுப்பில் கட்டப்பட்டிருந்த கயிற்றின் முனையைப் பிடித்து முரட்டுத்தனமாகச் சுண்டினான். அடப்பாவி! என்னுடைய நெற்றிப் பொட்டில் யாரோ விரலால் சுண்டினது போல் எனக்கு வலித்தது.

பாவம், அந்த வாயில்லா ஜீவன் எப்படித் துடித்திருக்கும் என்று எண்ணிக் கொண்டேன்.



வேதனையால் ஒரு கணம் 'வீல்' என்று கத்தி விட்டு, மீண்டும் தனது கடமையில் ஈடுபட்டது ராமன்.

ராமனுக்கு அதன் எஜமானனாகிய குறவன் சட்டை ஒன்று போட்டிருந்தான். சாயம் போனதும் போகாததுமான சிவப்புச் சட்டை. அது தோள்புறத்தில் கை சேருமிடத்தில் மிகவும் இறுக்கமாக இருந்தது. அதுதான் காரணம் போலும், ராமன் திடீர் திடீரென்று அடிக்கடி அந்தப் பகுதியைத் தன் கையால் தளர்த்திக் கொண்டேயிருந்தது.

ராமனுடைய நெற்றி முழுதும் நாமம் ஆக்கிரமித்துக் கொண்டிருந்தது. நடுவில் சிவப்பு; இரண்டு பக்கமும் வெள்ளை. புருவங்களின் ஓரத்தில் உரோமங்களில் வர்ணம் தனியாகக் காய்ந்து ஒட்டிக் கொண்டிருந்தது. ராமன் அந்த வர்ணம் ஒட்டிக் கொண்டிருப்பதனால் சரியாகப் பார்க்க முடியாமல் தவித்தது. ஏதோ கண்களை உறுத்திச் சங்கடப்படுத்துகிறது என்று நினைத்துக் கொண்டேன்.

நான் குரங்காட்டியாக இருந்தால் முதலில் ஈரத்துணியை எடுத்துப் புருவங்களில் ஒட்டியிருக்கும் அந்த வர்ணத்தைத் துடைத்து அது நன்றாகப் பார்ப்பதற்குச் சௌகரியம் செய்து கொடுத்திருப்பேன் என்று எண்ணிக்கொண்டேன். நானே குரங்காட்டியாக இருந்தால் அந்தக் குறவன் கயிற்றைப் பிடித்து அப்படி முரட்டுத்தனமாகச் சுண்டினானே-அப்பா என்ன வேதனை கொடுத்திருக்கும்-அப்படிச் சுண்டியிருப்பேனா? மாட்டவே மாட்டேன். போனால் போகிறது என்று அந்தப் பட்டாணியைப் பொறுக்கித் தின்பதற்கும் அனுமதித்திருப்பேன்.

திடீரென்று, 'நாம் இவ்வளவு இரக்க சுபாவத்துடனிருக்கும்போது, குரங்கை வைத்துக் கொண்டு அதைத் தொல்லைப் படுத்தி, இம்சை செய்து பிழைப்பு நடத்தத் துணிவோமா?' என்று என்னை நானே கேட்டுக் கொண்டேன். நிச்சயமாக மாட்டேன். பிறகு எதற்கு இம்மாதிரி அசட்டு யோசனைகளெல்லாம்? ஆனால் அடுத்தகணமே அவை அப்படி ஒன்றும் ஒரேயடியாக 'அசட்டு' யோசனைகள் என்று, தள்ளிவிடத் தக்கவையல்ல என்ற திருப்தி ஏற்பட்டது......

மொத்தத்தில் அந்தக் குறவன் இப்படிக் குரங்கை வதைத்து அதன் சுதந்திரத்துக்கு விலங்கிட்டுத் தனது வயிற்றுப் பிழைப்பை நடத்துவது கொடுமைதான். அவன் கையிலிருந்த கயிற்றைத் திடீரென்று அறுத்து எறிந்து அந்த விலங்குக்கு 'விலங்கி'லிருந்து விடுதலை அளித்தால் என்னவென்று நினைத்தேன்.

நல்ல யோசனைதான். ஆனால் அதைச் செயலாற்ற முனைவதில் ஏதோ ஒரு சிறுபிள்ளைத்தனம் அடங்கியிருப்பதாகப் பட்டது. எனவே நான் செயலற்று ஒன்றுக்கும் பிரயோசனமில்லாத வறட்டு இரக்கத்துடன் பேசாமல் நின்று கொண்டிருந்தேன்.

குறவன் கொஞ்சம் அயர்ந்திருக்கும் போது அந்தக் குரங்கு சமயம் பார்த்துத் தப்பித்துக் கொள்ளக் கூடாதோ? கொஞ்சம் மண்டுக் குரங்கு போலிருக்கிறது! காரணமில்லாமல் எனக்கு அந்தக் குரங்கின்மீதும் கோபம் வந்தது. தப்பித்துக் கொள்வதற்கு அந்தக் குறவன் விட்டால்தானே? நன்றாக இறுக்கிக் கட்டிப் போட்டிருப்பான். குரங்கைச் சொல்லி என்ன பயன்?

மீண்டும் குரங்கைப் பார்த்தேன். சாயம் போன சிவப்புச் சட்டை இப்பொழுது முன்னைவிடத் திடீரென்று அதிகமாக வெளிறிப் போனமாதிரி இருந்தது. அதன் கண்களில் கலக்கமா? இல்லை, விடுதலைக்கான ஏக்கமா? ஒன்றும் சரியாகத் தெரியவில்லை. எனக்குத் திடீரென்று அதிகமான இரக்கம் சுரந்தது.

சட்டைப் பையில் கையை விட்டு ஓரணா நாணயம் ஒன்றை எடுத்தேன்.

''ஐயா கொடுக்கிறாரு. வாங்கிக்கடா, ராமா. அப்படியே ஐயாவுக்கு ஒரு சலாம் போடுடா ராமா!''

அனலில் வாட்டப்பட்டது போன்றிருந்த கையினால் ராமன் ஓரணாவைப் பெற்றுக்கொண்டு எனக்கு ஒரு சலாம் போட்டது.

பழக்க தோஷத்தினால் நானும் பதில் சலாம் போடுவதற்குக் கையை எடுத்தவன் சட்டென்று நிறுத்திக்கொண்டேன்.

குரங்கு அந்த நாணயத்தை அதன் எஜமானனிடம் கொடுத்தது.

''இந்தாப்பா, ஓரணா கொடுத்திருக்கிறேன். அதற்கு அப்படியே வாழைப் பழமா வாங்கிக் குரங்குக்குக் கொடுக்கணும், தெரிந்ததா? நீ ஒன்றும் எடுத்துக் கொண்டு விடாதே. பாவம், உன் குரங்கைப் பார்த்தால் எனக்குப் பரிதாபமாக இருக்கிறது.''

''சரிங்க, சாமி.''

குறவன் புறப்படத் தயாரானான்.

அப்பொழுதுதான் எனக்கு ஒரு விஷயம் ஞாபகம் வந்தது. அந்த ஓரணா சற்று அதிகமாகத் தேய்ந்திருந்தது. முதல்நாள்தான் கடைக்காரன் 'செல்லாது' என்று திருப்பிக் கொடுத்து விட்டான்.

குறவன் அதைக் கொண்டு பழம் வாங்கப் போவான். கடைக்காரன் 'செல்லாது' என்று திருப்பி எறிவான். குறவன் என்னைச் சபிப்பான். அவன்

சபிப்பது இருக்கட்டும். அப்புறம் என் குரங்குக்கு—அடேடே அதற்குள் எனக்கு என்ன இப்படிப் பாசம் ஏற்பட்டு விட்டதே—வாழைப்பழம் அல்லவா கிடைக்காமற் போய் விடும்!

குறவனை அவசரம் அவசரமாகத் திருப்பிக் கூப்பிட்டேன்.

''இந்தாப்பா அந்த ஓரணாவைத் திருப்பிக் கொடு.''

குறவன் ''ஏஞ்சாமி?'' என்று என்னைச் சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டே அதைத் திருப்பிக் கொடுத்தான்.

சட்டைப் பையில் வேறு ஓரணா நாணயமோ அதற்குக் குறைவாகவோ இல்லை. பத்து பைசா நாணயம். மற்றவை அதற்கும் மேலே.

கையில் பத்து பைசா தட்டுப் பட்டது. 'பத்து பைசாவா கொடுப்பது? ஒரு விநாடி யோசித்தேன். பரவாயில்லை' என்று சமாதானம் செய்துகொண்டு அதையே கொடுத்தேன்.

போகட்டும். இன்னும் ஒரு வாழைப் பழம் அதிகமாகக் கிடைக்கும். மறுபடியும் குரங்காட்டியிடம் மறக்காமல் அது முழுவதற்கும் வாழைப்பழம் வாங்கிக் குரங்குக்குக் கொடுக்குமாறு நினைவு படுத்தினேன்.

இரண்டு நாட்கள் கழிந்திருக்கும். கடைத்தெரு வழியாக வந்து கொண்டிருக்கும்போது எதிரே இரண்டு போலீஸ்காரர்கள் குரங்காட்டிக் குறவனைப் பிடித்துக் கொண்டு வருவது தெரிந்தது. அவன் என்னைப் பார்த்ததும் ஏதோ பரிதாபமாக ஓலமிட்டான்.

அவனைப் பேசவிடாமல் முரட்டுத்தனமாக அவனை இடித்துத் தள்ளினார் ஒரு போலீஸ்காரர்.

விஷயம் என்னவென்று விசாரித்தால் ஏதோ ஒரு திருட்டுக் கேஸ் சம்பந்தமாக அந்தக் குறவனைச் சந்தேகத்தின் மீது அழைத்துக் கொண்டு போகிறார்கள் என்று தெரிய வந்தது.

எனக்குத் திடீரென்று அவனுடைய குரங்கின் நினைவு தோன்றியது.

''படவா. உனக்கு நன்றாக வேண்டுமடா'' என்று அந்தக் குறவனை மனத்துக்குள் வைதேன்.

அந்தக் குரங்குக்கு நல்ல காலம்தான்! அது விடுதலை பெற்ற மகிழ்ச்சியில் இந்நேரம் எங்காவது விருட்ச சஞ்சாரம் செய்யப் புறப்பட்டிருக்கும்.

அதனுடைய விடுதலைக்கு நானும் ஒரு விதத்தில் பொறுப்பு என்று மகிழ்ந்தேன். யார் கண்டார்கள்? ஒருவேளை என்னுடைய அதீத இரக்கமே அதற்கு இம்மாதிரி விடுதலையைத் தேடிக் கொடுத்திருக்கலாம்.

அன்று மாலை.

தெருக்கோடியில் பிள்ளையார்கோயில் அருகில் ஒரு சிறு கூட்டம் எதையோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது; நான் அருகில் சென்று பார்த்தேன்.

அந்தக் குரங்குதான்!

ஆனால் இது என்ன? அதைச் சுற்றி நாலைந்து வாழைப்பழங்களும் பொரி கடலையும் இறைந்து கிடந்தன. ஒன்றையாவது அந்தக் குரங்கு தொட்டதாகத் தெரியவில்லை.

கூட்டத்திலிருந்த ஒருவர், ''சார்! இதன் எஜமானனைப் போலீஸ்காரர்கள் பிடித்துக்கொண்டு போய் விட்டார்கள்; அதிலிருந்து இது இப்படியேதான் ஒன்றுமே சாப்பிடாமல் ஏங்கிப் போய் உட்கார்ந்திருக்கிறது'' என்று விளக்கினார்.

சுற்றுப்புறத்தை லட்சியம் செய்யாமல் வெறித்த பார்வையுடன் ஏங்கிப் போய் உட்கார்ந்திருந்த அதைப் பார்த்ததும் எனக்கும் ஏக்கப் பெருமூச்சு ஏற்பட்டது; நான் ஏதோ செய்யத்தகாத குற்றத்தைச் செய்து விட்டது போன்ற பிரமை ஏற்பட்டது.



விவாக ரத்து

இது ஒரு சாதாரணக் கதை. பானுமதி என்ற பெண்ணை ராகவன் என்ற இளைஞன் மணந்து, பிறகு வாழ்க்கையில் பிரிவு ஏற்பட்டு மீண்டும் கூடி வாழும் முடிவு கொண்ட சாதாரணக் கதைதான். பெண்ணின் பெற்றோர்கள், பையனின் பெற்றோர்கள், பையனின் தங்கை லலிதா, அவள் கணவன், அந்தக் கணவனின் சகோதரன் , அவன் மனைவி தேவகி முதலிய உப பாத்திரங்களும் வருகிறார்கள். கதைக்கு அஸ்திவாரமாக உள்ள விஷயம் சோதிடம். இக்கதையில் வரும் எல்லாப் பாத்திரங்களும் ஏதோ ஒரு வகை சோதிட சாஸ்திரத்தில் நம்பிக்கை கொண்டவர்கள். அது மட்டுமல்ல. சோதிட சாஸ்திரம் எதிர்காலத்தைப் பற்றி ஒவ்வொருவருக்கும் சொல்லும் கெட்ட பலனை நிருபித்துக் காட்டி விடுவதேஇக்கதையிலுள்ள பாத்திரங்கள் ஒவ்வொன்றின் லட்சியமாக விளங்குகிறது. இவ்வளவு பெரிய நவீனத்துக்கு எடுத்துக் கொண்ட அஸ்திவாரம் உதிரி மணலாக இருப்பதால் மேலே எழுப்பப்படும் கட்டடம் உறுதியாக இராமல், (மனத்தில் பதியாமல்) சரிந்து விடுகிறது. சம்பவங்களும் அற்ப சம்பவங்களாகக் கதை முழுவதும் வருகின்றன.

ஆசிரியர் சோதிடத்தைக் கேலி செய்யவும் முடியவில்லை ; நம்பவும் முடியவில்லை என்ற தர்ம சங்கடமான நிலையிலிருக்கிறார் என்பது தெரிகிறது. இறைவனிடம்தான் பூரண நம்பிக்கை கொண்டு செயலாற்ற வேண்டும் என்று ஆசிரியர் புத்தி பூர்வமாக உணர்கிறார். ஆனால் கதையின் வாயிலாக அவரால் நிலை நாட்ட முடியவில்லை. ஆசிரியரின் இயல்பான ஹாஸ்யச் சுவை, படிப்பதிலுள்ள அலுப்பை அவ்வப்போது குறைக்கிறது.

ஆசிரியர்: துமிலன். பிரசுரம்: இன்ப நிலையம், சென்னை – 4. விலை: ரூ. 4–50.

அடிமைப் பெண்

பேர்ல் பக் என்ற அமெரிக்க ஆசிரியை இலக்கியத்துக்காக நோபெல் பரிசு பெற்ற மேதை. அந்த அம்மையார் அமெரிக்க நாட்டைச் சேர்ந்தவராயினும் பல்லாண்டுகள் சீனாவில் வாழ்ந்து சீன மக்களின் வாழ்வையும் பண்பாட்டையும், மன அபிலாஷைகளையும் உணர்ந்து பல அரிய நவீனங்களும் சிறு கதைகளும் புனைந்திருக்கிறார். ஆகவே ஆங்கில இலக்கிய உலகில் அவருக்கு ஒரு தனியான உயரிய அந்தஸ்து உண்டு.

அந்த ஆசிரியை இயற்றிய 'அடிமைப்பெண்' என்னும் இந் நவீனத்தை மூலத்தின் சுவை குன்றாமல் திரு குயிலன் அவர்கள் மொழி பெயர்த்திருக்கிறார். தமிழில் படிக்கும்போது ஆங்கிலத்தின் வாடை சிறிதும் வீசாமல், குயிலன் மொழி பெயர்த்திருப்பதைப் பாராட்ட வேண்டும்.

ஒரு யூதக் குடும்பத்தினர் இரண்டு தலை முறைகளுக்கு முன்பு சீன நாட்டில் குடியேறி நல்ல முறையில் வாழ்ந்து வருகின்றனர். அந்த இல்லத்து அரசிக்கு, யூத மதச் சம்பிரதாயங்களையும் குறுகிய கொள்கைகளையும் கோட்பாடுகளையும் அப்படியே போற்றி வர வேண்டும் என்பது அவா. ஆனால் வீட்டின் தலைவருக்கும், புதல்வருக்கும் சீன மக்களோடு மக்களாக ஒன்றி வாழ வேண்டும் என்பது. இந்தப் போராட்டத்திடையே, அவ் வீட்டுக்கு அடிமைப் பெண்ணாக வந்த பியோனி, தனது உள்ளக் கிளர்ச்சிகளையும் உணர்ச்சிகளையும் சாமர்த்தியமாகச் சில சமயங்களில் வெளியிட்டும், பல சமயங்களில் அடக்கி வைத்தும் அருமையாக நடந்து கொள்கிறாள். அவளது உயர்ந்த குணசித்திரம் பேர்ல் பக்கின் உன்னத இலக்கிய உள்ளத்தை அருமையாக எடுத்துக் காட்டுகிறது.

கடைசியாக ஒரு வார்த்தை. இந்த நவீனம் கம்யூனிஸ்ட் சீனு தோன்றுவதற்கு முந்திய சீனாவின் புறப்படலத்தைக் கொண்டு புனைந்த கதையாகும்.

பதிப்பு: குயிலன் பதிப்பகம், தி. நகர், சென்னை – 1. விலை: ரூ. 3.50.

இப்சென் நாடகங்கள்

சென்ற நூற்றுண்டில் வாழ்ந்த ஹென்ரிக் இப்சென் எழுதிய 'ஹெல்கிலாந்து கடற்கொள்ளைக்காரர்கள்', 'பேய்கள்' என்ற இரண்டு நாடகங்களின் தமிழ் மொழி பெயர்ப்பு இந்த நூல். இப்சென்னின் நாடகங்களில் மிகச் சிறந்தவை இவை இரண்டும் என்று சொல்லமுடியாது. 'பொம்மையின் வீடு', 'பீர்ஜின்டு', 'ரோஸ் மெர்ஷாம்' போன்ற நாடகங்களை விட்டு விட்டு இந்த இரண்டையும் தெரிந்தெடுத்திருக்க வேண்டிய தில்லை. 'ஹெல்கிலாந்து கடற்கொள்ளைக் காரர்கள்' என்ற நாடகத்தில் நல்ல விறு விறுப்பு இருக்கிறது. துவேஷம், காதல், துரோகம், சோகம் போன்ற வழக்கமாகக் கையாளப்படும், ஆனால் ரசிகர்களுக்கு மனத் திருப்தியை அளிக்கத் தவருத சுவைகளை அடிப்படையாகக் கொண்டு அது எழுதப் பட்டது. 'பேய்கள்' ஓரர்த்தமற்றதும்,

தேவையற்றதும், தவறானதுமான அந்தக் காலத்து நம்பிக்கை ஒன்றை ஆதாரமாகக் கொண்டு வேறொரு நயமுமில்லாமல் எழுதப்பட்ட மிக சாதாரணமான நாடகம். சம்பாஷணைகளில் உயிர் இல்லை. கதை என்று சொல்லக்கூடிய, இப்செனின் நாடகத்திறமை வெளிப்படக்கூடிய சம்பவம் ஒன்று கூடக் கிடையாது. ஆல்விங்கு அம்மையார் பாத்திரம் மனத்தில் அனுதாபத்தை ஏற்படுத்துவதற்குப் பதில் எரிச்சலையே மூட்டுகிறது எனலாம். மாண்டர்ஸ் குருவின் பாத்திரம் ஓரளவு சிறப்பாக உருவாகியுள்ளது.

'ஹெல்கிலாந்து கடற்கொள்ளைக்காரர்கள்' நாடகத்தில் வரும் அர்நால்ஃபு ஒரு மறக்க முடியாத சித்திரம். அவனுடைய சோகம் மகத்தானது. சைகர்டு வலுவான சிருஷ்டி. ஷேக்ஸ்பியரின் 'மாக்பெத்' நாடகத்தில் வரும் மாக்பெத் சீமாட்டியுடன் இந்த நாடகத்தில் வரும் யர்டிஸை முழுதும் ஒப்பிட முடியாதானாலும் அழகும் பயங்கரமும் ஒருங்கே நிறைந்த படைப்பு அவளுடையது. மொத்தத்தில் இந்த நாடகம் அந்தக் காலத்து மக்களுடைய நடை, உடை, பேச்சு, காதல், வீரம், மரணம் ஆகியவைகளைக் கலைக் கண்ணோடு சித்திரிக்கிறது.

இந்த நாடகங்கள் இன்னும் சற்று நல்ல விதமாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கலாம் என்றே தோன்றுகிறது. சில இடங்களில் வார்த்தைக்கு வார்த்தை அப்படியே மொழிபெயர்க்கப்பட்டிருப்பதால் பொருள் விளங்குவது எளிதாக இல்லை. ''எங்ஸ்ட்ராண்டு மணந்து கொண்ட போது ஜொஹானா இருந்ததை விட நான் மண மேடைக்குப் போன போது ஆல்விங்கு ஏதாவது தூய்மையுடையவராக இருந்தார் என்று தாங்கள் எண்ணுகிறீர்களா?'' (பக்கம் 197) இத்தகைய மொழிபெயர்ப்பினால் லாபமில்லை. இதே கருத்தை வேறு வகையில் தமிழாக்கியிருக்க வேண்டும். மூலத்தில் 'ஹெலன்' என்று வருமிடங்களில் 'ஓடுகாலி அம்மையாரே!' என்று அழைப்பதாக மொழி பெயர்க்கப்பட்டிருப்பது விரஸமாக இருக்கிறது.

இப்செனின் தரமான நாடகங்கள், நல்ல முறையில் தமிழாக்கம் செய்யப்பட்டு வெளிவருவதற்கு முன், இத்தகைய அரைகுறை முயற்சிகள் வெளி வருவதையும் நாம் வரவேற்றுத்தான் ஆக வேண்டும். —மகரம்

தமிழாக்கம்: துரை அரங்கசாமி. சாகித்திய அக்காடமிக்காக வெளியிட்டவர்கள்: ஸ்டார் பிரசுரம், சென்னை-5; விலை: ரூ. 5.00.

இறைமாட்சி அல்லது அரசியல்

வருடந்தோறும் தமிழ்நாட்டில் ஏராளமான நாவல்களும் சிறுகதைகளும் வெளியாகின்றன. ஆனால், அரசியல், பொருளாதாரம், விஞ்ஞானம் முதலிய துறைகளைப் பற்றிய நூல்கள் வெளியாவது அத்திபூத்தாற் போல் அபூர்வமாக நிகழும் சம்பவமாக இருக்கிறது. வெளிவந்துள்ள ஒரு சில நூல்களும் தானாகக் கனியாத பழத்தைத் தடியால் அடித்துப் பழுக்க வைத்த கதையாக இருக்கின்றன. நாளாவட்டத்தில் இந்த அவல நிலை சீர்ப்படுமென நம்பலாம். எனினும் ஸ்ரீ சோ. இலட்சுமிரதன் பாரதி எம். ஏ., பி. எல்., எழுதியுள்ள 'இறைமாட்சி அல்லது அரசியல்' என்ற நூல் மேற்கண்ட வரிசையைச் சேர்ந்ததல்ல என்பது மகிழ்ச்சிக்குரியது. இந் நூலாசிரியர் பெரு முயற்சி எடுத்துக் கொண்டு இதை உருவாக்கி யிருக்கிறார் என்பதை இதில் அடங்கியுள்ள அரும் பெரும் விஷயங்கள் தெளிவாகக் காட்டுகின்றன. ஆசிரியர், எல்லை மீறிய தம் சொந்தக் கற்பனைகளுக்கும் வியாக்கியானங்களுக்கும் இடம் கொடுக்காமல், சுக்ர நீதி, திருக்குறள், காந்திஜியின் பொன் மொழிகள் முதலியவற்றை மாத்திரமல்ல, ஐரோப்பிய நாடுகளைச் சேர்ந்த பேரறிஞர்களின் கருத்துக்களையும் அடிப்படையாகக் கொண்டு இந் நூலைத் திறம்பட எழுதியிருப்பது, இதன் சிறப்பை அதிகமாக்கியிருக்கிறது.

சகல அரசியல் திட்டங்களும் கொள்கைகளும் அற வழியில் இருக்க வேண்டுமென்று இந்த நூலாசிரியர் வற்புறுத்தியிருப்பது மிகவும் போற்றத் தக்கதாகும். அரசியல் கொள்கைகள் அற நெறியை அடிப்படையாகக் கொண்டிராவிடில், ஊழல்களும், பித்தலாட்டங்களும், மோசடிகளும் மலிந்து மக்களின் வாழ்வு மற வாழ்வாக முடிந்துவிடும்.

அரசியல் அறிவு பெற்று விளங்க வேண்டும் என்ற ஆர்வம் பொதுமக்களிடையே வளர்ந்து வரும் இக்காலத்தில், இது போன்ற அரசியல் நூல்கள் உதவியாக இருக்கும். அரசியல் அறிவு பெற்றுள்ள மக்கள்தாம் வாக்குரிமை போன்ற தங்களுடைய உரிமைகளையும் கடமைகளையும் சீரிய முறையில் பயன்படுத்திக் கொள்ள முடியும். இல்லாவிடில், பொதுமக்கள் எடுப்பார் கைப்பிள்ளையாக அல்லல் பட நேரும். பொதுவாக எல்லோரும் குறிப்பாக மாணவர்களும் படித்துப் பயன் பெற வேண்டிய நூல் இது.

கிடைக்குமிடம்: திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், திருநெல்வேலி — 6, அல்லது சென்னை — 1. விலை: குறிப்பிடப்படவில்லை.

திரை மறைவிலே

பெரிய மனிதர்களைப்போல நடித்துப் பயங்கரக் குற்றங்களை இரகசியமாகப் புரிந்து இரட்டை வாழ்வு வாழும் கயவர்களைப் பாத்திரங்களாகக் கொண்டு இந்நாடகம் புனையப்பட்டிருக்கிறது. கொலை, கொள்ளை, நீதிமன்றத்தில் விசாரணை, அபலைகள் அவதிப்படுதல் முதலிய யாவும் இந் நாடகத்தில் வருகின்றன. இவற்றுக் கெல்லாம் முடிவு கூறுவதைப் போல் ஒரு வீராங்கனை துப்பறியும் வேலையை மேற்கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிக்கிறாள். காட்சிகள் யாவும் விறுவிறுப்பான வசனங்களுடன் சுவையாக எழுதப் பட்டிருக்கின்றன.

எழுதியவர்: க. தேவராசன்; கிடைக்குமிடம்: வள்ளுவர் பண்ணை, 137. பிராட்வே, சென்னை. விலை: ரூ. 1—50.

Printed & Published by R. Ananthana rayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited, at the Kalki Press, Kilpauk, Madras-10.
Managing Editor, T. Sadasivam.

இருமல் மற்றும் ஜலதோஷத்திலிருந்து பூர்ண நிவாரணம் பெற

ஸிரோலின்

'ரோஷ்' அருந்துங்கள்



இருமலுக்கும் ஜலதோஷத்திற்கும் ஏற்ற இந்தியாவின் குடும்ப மருந்து

இருமல் அல்லது ஜலதோஷமிருந்தால் அசட்டை செய்யாதீர்கள்—ஸிரோலின் அருந்தி அபாயமின்றி துரிதமாக பூர்ண நிவாரணம் பெறுங்கள். ஸிரோலின் இருமலை நிறுத்துவதோடு மட்டுமல்லாமல் இருமலை உண்டுபண்ணும் கிருமிகளைக் கொல்லவும் செய்கிறது. ஸிரோலின் தொண்டைப் புண்களுக்கு சமனமூட்டுகிறது, கபம் மற்றும் சளியை போக்குகிறது. அது எவ்வளவு கடுமையான இருமலிலிருந்தும் அபாயமின்றி துரிதமாக நிவாரணமளிக்கிறது. அபாயமற்ற, நிவாரணமளிக்கும் தன்மையையும் மற்றும் இனிய ருசியையும் ஸிரோலின் பெற்றிருப்பதால் குடும்பத்திலுள்ள அனைவரும் அதைப்பெரிதும் விரும்புகிறார்கள். ஸிரோலின் என்றால் குழந்தைகளுக்கு ஒரே குஷி!

உங்கள் வீட்டில் எப்பொழுதும் ஸிரோலின் வைத்திருங்கள்

'ரோஷ்' தயாரிப்பு

ஸோல் டிஸ்டிரிப்யூட்டர்கள்:
வால்டாஸ் லிமிடெட்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Ceylon

